9/3/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள்

மார்ச் 6, 2000 தொகுதி 88
எண் 1.

D
V211 31 P00
P00.88.1
232769

வெளியீடு 9-11-2000 Issued 9-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 6, 2000 – தொகுதி 88– எண் 1

**Monday the 6th March, 2000 – Volume 88 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 6-3-2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| *2.* தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 40-44 |
| *3.* விதி 110-ன் கீழ் அறிக்கை— | |
| மருத்துவப் பயிற்சி மாணவர்கள் கோரிக்கைகள் ஏற்பு பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை | 44-46 |
| *4.* ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி | 46-134 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 49-56 |
| *திரு. மு.பெ. சாமிநாதன் | 57-61 |
| *திரு. சி. அன்பரசன் | 61-65 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 65-69,79-80 |

பக்கங்கள்

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| *திரு. குழந்தை தமிழரசன் | 69-75 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 75-82 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 82-89 |
| திரு. பி.என். வல்லரசு | 93-96 |
| திரு. வ. அன்பழகன் | 97-100 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 101-105, 109-111 |
| *திரு. பெ.சு. திருவேங்கடம் | 111-119 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 120-127 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 127-134 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 134-136




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | **முதலமைச்சர்** | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, வணிக வரிகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு. |
| 2. | **கல்வி அமைச்சர்** | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. | **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. | **வருவாய்த் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. | **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படை.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. **செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

21. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
*கால்நடை பராமரிப்பு.*

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports, Commercial Taxes and Environmental Pollution Control.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transpsort, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Sports and Youth Service Corps** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்**

**திரு. சி.டி. தண்டபாணி**

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

**திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9.. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

19. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
24. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
29. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
30. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
31. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
32. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
33. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
34. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்
35. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்
37. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்
38. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
39. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
40. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
5. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
6. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
7. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
8. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
9. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
10. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
11. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
12. அன்பரசன் திரு. கி. .. அறந்தாங்கி
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
19. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

| | | |
|---|---|---|
| 20. ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 21. ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 23. ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 24. இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 26. இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 27. இராசன், திரு. வி.பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ | .. | ஆண்டிமடம் |
| 29. இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 30. இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 34. இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 37. இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 38. இராஜ ரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 39. இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 40. இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 41. ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 44. கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 45. கணேசன், திரு. கே.சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 46. கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 47. கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 49. கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 50. கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 52. காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. | .. | நாங்குநேரி |
| 55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. | .. | வேடசந்தூர் |
| 56. குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 58. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. | கும்மிடிப்பூண்டி |
| 60. குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 61. கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |

| | | | |
|---|---|---|---|
| 63. | கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 64. | கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 65. | கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |
| 66. | கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 67. | சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 68. | சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 69. | சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 70. | சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 71. | சண்முகம், திரு. வி.சி. | .. | நெல்லிக்குப்பம் |
| 72. | சந்தானம், திரு. லா. | .. | சோழவந்தான் |
| 73. | சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆவா.) |
| 74. | சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 75. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 76. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 77. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 78. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 80. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 82. | சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 83. | சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 84. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |



| | | | |
|---|---|---|---|
| 85. | சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 86. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 87. | சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 88. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |
| 89. | சுகவனம், திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 90. | சுடலைமுத்து, திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 91. | சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 92. | சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 93. | சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 94. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 95. | சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 96. | சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 97. | சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. | திருவள்ளூர் |
| 98. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |
| 99. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. | திருநெல்வேலி |
| 100. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 101. | சுரேஷ் ராசன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 102. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. | மருங்காபுரி |
| 103. | செங்கை சிவம், திரு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 104. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. | தியாகராய நகர் |
| 105. | செல்வம், திரு. ரெ. | .. | குளித்தலை |
| 106. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. | கொளத்தூர் (செ.வ.) |

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி



130. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடர்ாஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகேழந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆவா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178 மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180 மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
203. ராசேந்திரன், திரு. ஏ. .. பேரூர்
204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
213. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
226. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
227. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
228. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
229. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
230. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 23, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2031
## 2000 மார்ச் 6, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எற்றென்(று) இரங்குவ செய்யற்க செய்வானேல்*
*மற்றன்ன செய்யாமை நன்று."*

என்ன தவறு செய்துவிட்டோம் என நினைத்துக் கவலைப் படுவதற்குரிய காரியங்களைச் செய்யக்கூடாது. ஒருக்கால் அப்படிச் செய்துவிட்டாலும் அச்செயலை மீண்டும் தொடராதிருப்பதே நன்று.

## 1. வினாக்கள்--விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**21—**

### வேலைவாய்ப்பு

***19386—திரு. ஏ. கோதண்டம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பெரும்புதூர் தொகுதியிலுள்ள 20 கிராமங்களில் SIPCOT தொழில் வளாகத்திற்காக, எட்டாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களை

HYUNDAI மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு அளித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

6698 ஏக்கர் அளவிற்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அமைக்கப்பட்டு வரும் இருங்காட்டுக்கோட்டை, நெமிலி, திருப்பெரும்புதூர் ஆகிய SIPCOT தொழில் வளாகங்களுக்கு நிலம் அளித்த நில உரிமையாளர்களுடைய வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் SIPCOT நிறுவனம் இத்தொழில் வளாகங்களில் தொழிற்சாலை அமைக்கும் தொழில் முனைவோர்களிடம் நில ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் பதிவு செய்யப்படும் குத்தகைப் பத்திரத்தில் 10 விழுக்காடு அளவிற்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்து அதைச் செயல்படுத்த வலியுறுத்தி வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. கோதண்டம், இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, even in Hosur SIPCOT, there are lot of people whose lands were taken by the industrialists. The industrialists say that there is no specific G.O. to give appointment to them. So, I request the Hon. Chief Minister to see. . . .

**HON. SPEAKER:** This question is regarding Sriperumpudur.

**THIRU B. VENKATASAMY:** Regarding acquisition of land by SIPCOT even at Sriperumpudur, it should be made a point to see that specific order is issued to the industrialists to appoint the people who have given their lands. May I request the Hon. Chief Minister to lay such a rule for the entire State.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு நீண்டகாலம் ஆகிற காரணத்தால் அதுபற்றிய விபரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், அங்கேயும் உள்ளூரிலே உள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டவர்களுக்கு, அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்கிற விஷயம் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.



**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தொழிற்சாலைகளுக்கு நிலங்கள் கையகப்படுத்தப்படும்போது, தகுதியின்மையைக் காரணம் காட்டி, நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை மறுக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதன்மேல் அரசு ஏதேனும் சிறப்பு உத்தரவு பிறப்பித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தகுதியின்மை இருந்தால் நிச்சயமாக வேலை தர முடியாது. அதற்குரிய கல்வி இவ்வளவு, இன்னின்ன பயிற்சி வேண்டுமென்ற இவற்றைக் கவனித்து அந்த அடிப்படையிலேதான் வேலை தர முடியும். அதற்கான முயற்சிகளை SIPCOT நிறுவனம் எடுத்து, அத்தகைய பயிற்சிகளைப் பெறுவதற்கான உதவிகளையும் அந்நிறுவனம் செய்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, HYUNDAI நிறுவனத்தைப்பற்றி கேள்வி வந்திருக்கிற காரணத்தால் கேட்கிறேன். அந்நிய தொழில் நுட்பத்திற்காகவும், அந்நிய மூலதனத்திற்காகவும்தான் வெளிநாட்டுக் கம்பெனிகளை நாம் அனுமதிக்கிறோம். ஆனால், HYUNDAI---ஐப் பொறுத்தவரையிலே சிறுசிறு பாகங்களைக்கூட, கொரியாவிலிருந்து இங்கே வந்து அவர்களே செய்து பொருத்துவதாகச் சொல்கிறார்கள். அதனால் உள்நாட்டு சிறுதொழில்கள். SSI UNITS மிகவும் பாதிக்கப்படுகின்றன. எனவே, அவர்கள் ஏற்றுக்கொள்கிற வகையில் அரசாங்கம் அவர்களுக்கு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமேயானால், அதைப்பற்றி அரசு நிச்சயமாகக் கவனிக்கும். ஆனால், இப்போது இருங்காட்டுக்கோட்டையிலே உள்ள தொழிற்சாலை, திருப்பெரும்புதூரிலே உள்ள தொழிற்சாலை, இவற்றிலே தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு 90 சதவீதம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. பொறியாளர்கள் போன்றவர்களைத்தான் அவர்கள் அங்கிருந்து அழைத்து வருகிறார்கள். மற்றபடி நம்முடைய மாநிலத்திலே உள்ளவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

[2000 மார்ச் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**22—**

**அரசு பொறியியல் கல்லூரி**

***22995—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-.35

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மாவட்டம். அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள் முழுமையாக விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருப்பதால் பொருளாதாரத்திலே பின்தங்கிய நிலையிலே இருக்கின்ற மக்களாக இருக்கிறார்கள். எனவே, தனியார் கல்லூரிகளிலே அரசு ஒதுக்கீடு மூலம் சேர்ந்திருந்தாலும், அங்கே பலவிதமான கட்டணங்களைக் கட்ட வேண்டியுள்ளதால் அவர்கள் தொடர்ந்து படிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே அங்கே அரசு பொறியியல் கல்லூரி தொடங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏறத்தாழ 100 தொகுதிகளிலே இருக்கிறது. ஆகவே, தொகுதி நிலவரத்தை வைத்து கல்லூரி ஏற்படுத்துவது என்பது அரசினுடைய பொருளாதார நிலையில் இயலக்கூடியதல்ல. மாறாக, அந்த வட்டாரத்தில் 3 சுயநிதிக் கல்லூரிகள்



2000 மார்ச் 6]

பொறியியலுக்காக இயங்கிக்கொண்டிருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளுடைய கட்டணங்கள் முறையாக அரசால் தீர்மானிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல, அந்தக் கல்லூரிகளிலே, சிறுபான்மையினர் கல்லூரிகளாக இருந்தால் ஏறத்தாழ 50 விழுக்காடு அளவுக்கும், மற்ற கல்லூரிகளாக இருந்தால் 90 விழுக்காடு அளவுக்கும் மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கி, Single Window System என்ற முறையில் அந்த மாணவர்கள் சேருவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, ஏழை மாணவர்கள் என்பதால் குறைந்த மதிப்பெண்கள் வாங்கியவர்களுக்கு இடம் தருவது என்பது நடைமுறையிலே சாத்தியமல்ல. ஆகவே, மாணவர்கள் தகுதிவரிசை முறையில் இடம் பெறுகிற வாய்ப்பும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அப்படி ஒரு நிலை தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பொறியியல் கல்லூரிகளிலே தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு எத்தனை சதவீதம், பிற மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு எத்தனை சதவீதம் இடம் அளிக்க வேண்டுமென்று விதி உள்ளது? எங்களுடைய வடக்கன்குளத்திலே உள்ள இந்தியன் இன்ஜினியரிங் கல்லூரியில் கிட்டத்தட்ட 70 சதவீதத்திற்கு அதிகமானோர் கேரளாவிலிருந்து வந்து படிக்கிறார்கள். அதுபற்றி அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருந்தால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தனியார் கல்லூரியாக இருந்தாலும், சுயநிதிக் கல்லூரியாக இருந்தாலும் அந்தக் கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்க்கை என்பது அரசு ஏற்படுத்தியிருக்கின்ற முறைப்படிதான் நடைபெற வேண்டும். அப்படியில்லாமல் எந்தக் கல்லூரியைப் பற்றியேனும் மாறுபட்ட கருத்து இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்புவார்களேயானால் விசாரிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சுயநிதி மூலமாக நடத்தப்படுகின்ற பல பொறியியல்

[2000 மார்ச் 6

கல்லூரிகளில் மாணவர்களுக்குப் போதுமான வசதிகள் செய்து தரப்படவில்லை என்கிற நிலை இருப்பதை அரசு அறியுமா? அவர்கள் பெயரளவிலேதான் கல்லூரி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிக்கு உரிய எந்தவிதமான முயற்சிகளும் அவர்கள் எடுத்துக்கொண்டு நடத்துவதில்லை. வெறும் கட்டடம் இருக்கிறது, அதற்குரிய கருவிகள் இல்லை என்கிற குறை எல்லா இடங்களிலும் இருக்கிறதே, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க முன்வரும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதி பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு முன்னால் அவை மேற்பார்வை செய்யப்படுகிற முறையிலே குறைபாடுகள் மிகுதியாக இருந்தன. இப்போது கடந்த 3 ஆண்டுகளாக A.I.C.T.E. என்கிற அகில இந்திய தொழில்நுட்பப் பொறியியல் கல்வி மேற்பார்வை அமைப்பு, அதனுடைய துணைக் குழு மூலமாக அவ்வப்போது இந்தக் கல்லூரிகளிலே உள்ள infrastructure அதனுடைய உள்கட்டமைப்பு பற்றி ஆய்வு நடத்துகிறது. அதேபோல, மாநிலத்திலே உள்ள தொழிற்கல்வி இயக்குநர் அலுவலகத்தின் சார்பாகவும் ஓராண்டுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. பெரும்பாலும் கல்வியினுடைய தரம் மிகுதியாகக் குறைபாடு உடையதாக இருக்கிறது என்று கருதுவதற்கு இடம் இல்லை. வேறு வசதிகள், ஹாஸ்டல் வசதிகள் போன்ற சில வசதிகள் சில இடங்களிலே குறைபாடு உடையனவாக இருக்கலாம். எந்த ஒரு தனிப்பட்ட கல்லூரியைப்பற்றியும் தகுந்த அளவுக்கு ஆதாரத்தோடு குறைபாடுகள் தெரிவிக்கப்படுமானால் உடனடியாக இந்தத் துறையைச் சார்ந்த இயக்குநர் நடவடிக்கை எடுக்க பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒற்றைச் சாளர முறை மூலம் மாணவர்களைத் தொழில்நுட்பப் பயிலக பட்டயப் படிப்பிற்குச் சேர்ப்பது மிகக் காலதாமதமாக நடத்தப்படுவதால் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட இடங்கள் தமிழகத்தில் காலியாக இருக்கின்றன. எனவே, அந்த முறை விலக்கிக்கொள்ளப்படுமா என்று கல்வி அமைச்சரைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2000 மார்ச் 6]

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வு காரணமாக ஒற்றைச் சாளர முறையால் சிலருக்குக் கிடைக்கிற உரிமை, வாய்ப்பு, அதை எடுக்கிறபோது தவறிவிடும். ஆகவே, அந்த ஒற்றைச் சாளர முறை நீடிக்க வேண்டுமென்று கருதுவதால் அது தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**23—**

**மின் நிலையம்**

***8018—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட மாயனூரில் 100 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் நடப்பாண்டில் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. நாகரத்தினம், இருக்கையில் இல்லை. வினா எண் 24. திரு. இரா. மூக்கப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**24—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

***26799—திரு. இரா. மூக்கப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 6

(அ) சின்னசேலம் ஒன்றியம், மேல்நாரியப்பனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், மேல்நாரியப்பனூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் சின்னசேலம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் மேல்நாரியப்பனூர் கிராமம் அடங்கிய சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி மேல்நாரியப்பனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நாரியப்பனூர்தான் சின்னசேலம் ஒன்றியத்திலே ஒரு மிகப் பெரிய கிராமம். அந்தக் கிராமத்திலே புகழ்பெற்ற கிறிஸ்துவ ஆலயம் உள்ளது. அங்கு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலே இருந்து தினசரி மக்கள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். மேல்நாரியப்பனூர் தவிர, பக்கத்திலே மலையோரம் இருக்கின்ற கல்லாநத்தம், தகரை நா. குப்பம், பாண்டியன் குப்பம் போன்ற கிராமங்கள் எல்லாம் மருத்துவ வசதி பெறுவதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மக்கள் தொகை அடிப்படையிலே கணக்கு எடுத்தாலும்கூட, அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும் மேல்நாரியப்பனூர் கிராமத்திலே பல ஆண்டுகளுக்கு முன்னால் பணம் கட்டி, இடம் கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கூட பரிந்துரை செய்து இங்கே அனுப்பி உள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அதை நிறைவேற்றித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற மேல்நாரியப்பனூர் கிராம மக்கள் தொகை 2735 ஆகும். சின்னசேலம் ஒன்றியத்திற்கு உட்பட்டது அந்தக் கிராமம். ஏற்கெனவே சின்னசேலம் ஒன்றியத்திலே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.



2000 மார்ச் 6]

மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் இன்னும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அந்த ஒன்றியத்திற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், மத்திய அரசாங்கம் 1410 ஆரம்ப சுகாதார நிலையங்கள்வரையில்தான் இதுவரையிலே தமிழகத்திற்கு அனுமதி தந்து இருக்கின்ற காரணத்தால், எதிர்காலத்திலே இதனுடைய எண்ணிக்கை உயர்த்தப்படுமானால், அப்போது நிச்சயம் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**25—**

### கட்டட வசதிக்காக நிலம்

***27981—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், சீலம்பட்டி மற்றும் பெத்தாம்பாளையம் ஆகிய இடங்களில் இயங்கிவரும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் கட்டட வசதிக்காக நிலம் கேட்டு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை வட்டம், சீலம்பட்டி பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு, பெருந்துறை வட்டம், கருமாண்டி செல்லிபாளையம் கிராமத்தில் புல எண் 324/3-ல் மயானம் புறம்போக்கில் 0.03.0 எக்டேர் பரப்பளவு நிலத்தினை உரிமை மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு வரப்பெற்று அது அரசின் பரிசீலனையில் உள்ளது. பெருந்துறை வட்டம், பெத்தாம்பாளையம் கிராமத்தில், செங்கோடம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நில உரிமை மாற்றம் குறித்த கோரிக்கையைப் பொறுத்தவரை வருவாய் வட்டாட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

[2000 மார்ச் 6

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை 1996 நவம்பர் மாதத்திலே வைக்கப்பட்டது. 3 ஆண்டுக் காலமாக தொடர்ந்து முயற்சி செய்தும், மாண்புமிகு அமைச்சர் அலுவலகம் நினைவூட்டுக் கடிதம் அனுப்பியும், நில நிர்வாக ஆணையர் அலுவலகத்திலே இதுபோன்ற நில உரிமை மாற்ற மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. அந்தத் தேக்கத்தைப் போக்கவும், விரைந்து நடவடிக்கை எடுக்கவும் அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசுக்கு செயற்குறிப்பு வரப்பெற்றவுடன் தக்க நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**26—**

## ஆழ்குழாய்க் கிணறுகள்

***23725—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பொறியியல் துறை மூலம் ஒவ்வொரு தொகுதியிலும் விளைச்சலை அதிகரிக்கும் வகையில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1998-99-ஆம் ஆண்டில் 6706 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் மொத்தம் 7524 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.



2000 மார்ச் 6]

முற்பகல் 9-45

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில், குறிப்பாக சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் தண்ணீர் பற்றாக்குறையினால், கடைசியாக ஒரு தண்ணீர் அல்லது இரண்டு தண்ணீர்பாடில் ஏராளமான விவசாயம் பாழ்பட்டுப் போகிறது. இந்த ஆண்டுகூட அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இவற்றைக் கருத்தில்கொண்டு, தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களில், குறிப்பாக தென் மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் கூடுதலாக விவசாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தினை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வேளாண்மைப் பொறியியல் துறை பணி நிலைமைக்கேற்ப கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு செயற் பொறியாளரின்கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, உதகமண்டலம் ஆகிய கோட்டங்களைத் தவிர மற்ற அனைத்துக் கோட்டங்களிலும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் போட்டுத்தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அங்கு விவசாயிகளுடைய வேண்டுகோளுக்கிணங்க விவசாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7,524 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாவட்டவாரியாகத் தெரிவிப்பார்களா? பொதுவாக எங்களது மாவட்டத்திலே இந்தத் திட்டம் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலே நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. அதை வெளியே கொண்டு வந்தால் விவசாயிகள் பயன் பெறுவார்கள். நிலத்தடி நீர் அதிகமாக இருப்பதால் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகமான இடங்களிலே ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்ட ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 6

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பொறியியல் துறை மூலம் ஒவ்வொரு தொகுதியிலும் விளைச்சலை அதிகரிக்கும் வகையில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்படுமா என்பது வினா. அதற்குத்தான் நான் பதில் தந்தேன். 1998--99 ஆம் ஆண்டிலே மொத்தம் 6,706 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 7,524 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன என்று நான் சொன்னேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்ற விவரம் தற்போது இல்லை. அதேநேரத்திலே 1999--2000 ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு விவரம் இருக்கிறது. 1998-99 ஆம் ஆண்டிற்கான விவரங்கள் தேவைப்படுமானால், தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் சுமார் 10 கிலோமீட்டர் தொலைவுவரை வேளாண்மைக் காரியங்களுக்காக நிலத்தடி நீரை ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் எடுக்கக்கூடாது என்று கூறுகிறார்கள். இந்தத் தூரத்தைக் குறைத்து 5 கிலோமீட்டர் என அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் சேமிப்பின் அடிப்படையில் பகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கருமை நிறப் பகுதி என்பது நிலத்தடி நீர் சேமிப்பிலிருந்து 85 விழுக்காடு முதல் 100 விழுக்காடு வரை பயன்படுத்தப்பட்ட பகுதி. சாம்பல் நிறப் பகுதி என்பது நிலத்தடி நீர் சேமிப்பிலிருந்து 65 விழுக்காடு முதல் 85 விழுக்காடு வரை பயன்படுத்தப்பட்ட பகுதி. வெள்ளை நிறப் பகுதி என்பது நிலத்தடி நீர் சேமிப்பிலிருந்து 65 விழுக்காட்டிற்குக் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பகுதி. இந்த வெள்ளை நிறப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் விவசாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மேலேயுள்ள அடிப்படையில் பகுதிகள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| கருமை நிறப் பகுதி | - 97 | ஊராட்சி ஒன்றியங்கள் |
| சாம்பல் நிறப் பகுதி | - 88 | ஊராட்சி ஒன்றியங்கள் |
| வெள்ளை நிறப் பகுதி | -199 | ஊராட்சி ஒன்றியங்கள் |



2000 மார்ச் 6]

மொத்தம் உள்ள 384 ஊராட்சி ஒன்றியங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு, உலக வங்கி மற்றும் NABARD மூலம் இந்த அடிப்படையிலேதான் ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதிலே நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில் ஒன்றும் செய்வதற்கில்லை.

முற்பகல் 9--50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே, 2, 3 ஏக்கரிலே எல்லாம் பக்கம் பக்கமாக கிணறுகளை வெட்டுகிறார்கள், ஆகையால் அவர்களுக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். இதை மனதிலே வைத்துத்தான் பலமுறை நானே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். 20, 30 ஏக்கர் உள்ள சிறு சிறு விவசாயிகளை ஒன்றாக இணைத்து அரசாங்கமே பொறியியல் துறை மூலமாக பெரிய ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து அதன் மூலமாக நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்து கொடுத்தால், அந்த விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து இருக்கிறார்களா? அப்படியென்றால் அதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டு முறையில் சிறிய நீர்ப்பாசனக் கிணறு அமைத்து, அதன் மூலம் சிறு விவசாயிகள் பயன்படக்கூடிய வகையில் ஒரு Society அடிப்படையிலே செய்யலாம் என்று முன்பு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த ஆதித்தனார் அவர்கள் காலத்திலே முடிவெடுக்கப்பட்டு, சில மாவட்டங்களில் அப்படிப்பட்ட பொதுக் கிணறுகள் அமைக்கின்ற அந்த முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அது வெற்றிகரமாக நடைபெறவில்லை. இருப்பினும், இப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள சிறு விவசாயிகளெல்லாம் சேர்ந்து Society என்ற அடிப்படையிலே, சிறு நீரேற்று பாசன சங்கம் என்று அமைத்துக்கொண்டு கிணறு வெட்டித் தருவதற்கு கடன் போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று அரசிடம் கேட்டால், நிதியுதவியும் வழங்கி, பிறகு மின் இணைப்பு கொடுப்பதற்கும் முன்னுரிமை தரப்படும்.

[2000 மார்ச் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**27—**

**வன உயிரினங்களைத் தடுத்தல்**

***27896—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை போன்ற மக்கள் தொகைப் பெருக்கம் நிறைந்த மாநகரங்களில்கூட சமீபகாலமாக சிறுத்தை போன்ற வன உயிரினங்கள் நுழைந்துவிடக் காரணம் என்ன?

(ஆ) இவற்றைத் தடுக்க வனத் துறை மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மக்கள்தொகை நெரிசலினால் வன உயிரினங்களின் இருப்பிடங்கள் குறைந்து வருவதால், இரைதேடி மக்கள் தொகை பெருக்கம் நிறைந்த சென்னை போன்ற மாநகரங்களில்கூட சிறுத்தை போன்ற வன உயிரினங்கள் நுழைந்து விடுகின்றன.

(ஆ) இம்மாதிரி நிகழ்வுகள் ஏற்படும்போது அவற்றை இயற்கை வாழ்விடங்களுக்கு அனுப்ப துரித முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இல்லையேல் அவை கண்டுபிடிக்கப்படுகின்றன. வன உயிரினங்களின் வாழ்விடமாகிய காடுகளுக்கு ஊறு விளைவிக்காமலும், வன உயிரினங்களைத் தொந்தரவு செய்யாமலும் இருப்பதைத் தவிர இவற்றைக் காடுகளிலிருந்து வெளியே வராமல் தடுக்க வேறு எந்தவித நடவடிக்கையும் எடுக்க இயலாது. வன உயிரினங்களை அவற்றின் இருப்பிடங்களில் அமைதியாக வாழவிடுவதே எடுக்கப்பட வேண்டிய சிறந்த தடுப்பு நடவடிக்கையாகும்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பாக சென்னைப் புறநகர் மணலி பகுதியிலே ஒரு சிறுத்தை நுழைந்து பெரும் பரபரப்பை உள்ளாக்கியது. இத்தகைய



2000 மார்ச் 6]

நிகழ்வுகளுக்கெல்லாம் காரணம் வன உயிரினங்களுடைய உறைவிடங்கள் (natural habitat) குறைந்துகொண்டு வருவதுதான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில் இப்போது மொத்தம் உள்ள நிலப்பரப்பில் $17\frac{1}{2}$ சதவிகிதம் காடுகள் இருக்கின்றன. ஆனால் இது 33 சதவிகிதமாக இருந்தால்தான் சிறந்த முறையில் வன உயிரினங்களும், தாவரங்களும் பெருகும் என்று வன உயிரின ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசமைப்பிலேகூட பெண்களுக்கு இப்போது 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வேண்டுமென்று கூறுகிற நாம், நம்மோடு இணைந்து பூபாகத்தைப் பகிர்ந்துகொண்டு இருக்கக்கூடிய வன உயிரினங்களுக்கும் அவற்றுக்குரிய 33 சதவிகிதம் இடஒதுக்கீடு கொடுக்கக்கூடிய அளவுக்கு காடுகளின் பரப்பை உயர்த்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலர் காடுகளைத் திட்டமிட்டே அழித்து வருகின்ற நேரத்தில் காடுகள் பெருக வேண்டுமென்ற நல்ல யோசனையைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினருக்கு இந்த அரசு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளைப் பாதுகாப்பதிலே இந்த அரசு தீவிர முயற்சி எடுத்து வருவதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் பல கோயில்களில் யானைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒருசில கோயில்களில் யானைகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்தமாதிரி கேட்கின்ற கோயில்களுக்கு யானைகளை வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, கோயில்களில்கூட யானைகள் இருக்கக்கூடாது என்பதுதான் இருக்கின்ற சட்டம். இருந்தாலும் பொதுவாக சில இடங்களில் பரம்பரையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் அவர்களாகவே கோயிலுக்கு வாங்கி வைத்திருக்கிறார்கள். நாங்கள் கண்டும் காணாமலும் இருக்கிறோம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

[2000 மார்ச் 6

**திரு. பெசு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலங்களிலே வன விலங்குகளுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால் எங்களுடைய மாவட்டத்தில்கூட யானைகள் வந்து, பயிர்களையெல்லாம் நாசம் செய்துவிடுகின்றன. எனவே, கோடைக்காலங்களில் வன விலங்குகளுக்குக் குடி தண்ணீர் கிடைப்பதற்கு, காட்டுப் பகுதியில் தக்க ஏற்பாடுகளை அரசு செய்ய ஏதாவது திட்டம் உள்ளதா? இல்லையெனில் எதிர்காலத்தில் அத்தகைய திட்டம் செயல்படுத்தப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளிலே, கோடைக்காலங்களில் வன விலங்குகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக சிறு சிறு குட்டைகள் அமைக்கப்படுகின்றன. தண்ணீர் இருக்கின்ற காலங்களில்கூட, சில நேரங்களில் சில மிருகங்கள்-யானைகள்—ஊருக்குள் வந்துவிடுகின்றன. காரணம், சில நேரங்களில் வழிதவறி வருவதும் உண்டு. சில நேரங்களில், மக்கள் அங்கிருந்து விரட்டுகின்ற காரணத்தினால் வருவதும் உண்டு. ஆனால், வந்துவிட்ட யானைகள் இங்கே இருக்கிற கரும்புத் தோட்டம், வாழைத் தோட்டம் இவற்றில் எல்லாம் நுழைந்து சாப்பிட்டுவிட்ட பிறகு, என்னதான் விரட்டிக் கொண்டுபோய் காட்டிலே விட்டாலும், தின்று ருசி கண்டதால் மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருக்கின்றன. இப்போதுகூட, ஜவ்வாது மலைப் பகுதியிலே அப்படி 10 யானைகளை விரட்டிவிட்டு வந்திருக்கிறோம். மீண்டும் அவை வராமல் இருக்க 4 யானைகளை கீழே நிறுத்தியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஜவ்வாது மலையிலே யானைகளை விரட்டிவிட்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே காவலூர் பகுதியிலே இருந்த 13 யானைகள் விரட்டப்பட்டன. பிறகு அவை போளூர் பகுதிக்குப் போயின. பிறகு அந்தப் பக்கத்தில் இருந்து, மீண்டும் அவை மந்தாரக்குட்டை, பூங்குளம், காவலூர் போன்ற பகுதிகளுக்கு வந்துவிட்டன. அந்த 13 யானைகளும் இப்போது அட்டகாசம் செய்துகொண்டு, பல ஏக்கர் நிலப் பயிர்களை அழித்துவிட்டு, மரங்களையும் சாய்த்துக் கொண்டிருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே



2000 மார்ச் 6]

நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். தற்போது தாங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். ஒரு யானையை ஆம்பூரிலே பிடித்து, நீங்களும் போய்ப் பார்த்துவிட்டு வந்தீர்கள். மீதியுள்ள 13 யானைகள் அப்படியே இன்னும் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அதேபோல, இப்போது பாம்புகளும் நிறைய வர ஆரம்பித்துவிட்டன. சென்னை போன்ற மாநகரங்களில்கூட, சில இடங்களில் புதர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அவற்றையெல்லாம் பொதுப் பணித் துறை சில இடங்களில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன கேள்வியா?

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டும் காணாமல் இருப்பதாகச் சொன்னார்கள். ஏன் கண்டும் காணாமல் இருக்கிறார்கள் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முன் வரிசையில் வந்த பிறகாவது ஒழுங்காக இருப்பீர்கள் என்று பார்த்தால் அதற்குமேல் மோசமாக இருக்கிறீர்களே?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் தெரிவித்தபடி யானைகள் வந்ததும் உண்மை; விரட்டப்பட்டதும் உண்மை. நேற்றுகூட நான் வேலூரிலே அந்த அதிகாரிகளைக் கூப்பிட்டு விசாரித்தேன். இப்போது யானைகள் ஊருக்குள் நுழைந்து அட்டகாசம் செய்வது இல்லை என்று தெரிவித்தார்கள். வராமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**28—**

### போக்குவரத்துக் கிளை அலுவலகம்

***27230—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் போக்குவரத்துக் கிளை அலுவலகம் தொடங்கப்படுமா?

[2000 மார்ச் 6

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளியில் போக்குவரத்துக் கிளை அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**29—**

**நகரப் பேருந்து**

***20046—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் முதல் தனகொண்டபள்ளிவரை மற்றும் குடியாத்தம் முதல் பரதராமிவரையிலுள்ள கிராமங்களுக்குக் கூடுதல் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடியாத்தம்-தனகொண்டபள்ளி நகரத் தடம் ஜி.4 ஏ பேருந்து மூலம் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தின் பயணிகள் அடர்வு 58.5% ஆகும். குடியாத்தம்--பரதராமி தடத்தில் ஜி.-2 பேருந்து 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தனியார் பேருந்துகள் 24 நடைகளும் மற்றும் அண்டை மாநிலப் பேருந்து 2 நடைகளும் இத்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. குடியாத்தம்--பரதராமி தடத்தில் பயணிகள் அடர்வு 50.6%. எனவே, கோரிக்கைத் தடத்தில் கூடுதல் நகரப் பேருந்துகளை இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, தனகொண்டபள்ளி கிராமம், ஆந்திர மாநிலத்தை ஒட்டி சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கிராமம் ஆகும்.



2000 மார்ச் 6]

இதைச் சுற்றி மோட்டூர், கீழ்கொல்லபள்ளி, மோடிகுப்பம் கொட்டம்பட்டா போன்ற கிராமங்களிலிருந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் நகரிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு வந்து படிக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து காலை 7-30 மணிக்கு வரும் பேருந்தில் வந்து, பிறகு மாலையில் 3-30 மணி பேருந்தில் செல்ல வேண்டும். அதற்கு அடுத்த பேருந்து 7-00 மணிக்குத்தான் இருக்கிறது. அங்கே, குறிப்பாக மாணவிகள் பேருந்து நிலையத்தில் 7-00 மணிவரை காத்திருந்து செல்வதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்ற காரணத்தால் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல கூடுதல் பேருந்து பிறகு விட்டாலும், இப்போது அந்தப் பேருந்தின் நேரத்தையாவது மாற்றிக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதுபற்றி எழுதிக் கொடுப்பார் என்றால் நேரத்தை மாற்றி அமைப்பதிலே போக்குவரத்துத் துறைக்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குக்கிராமங்களுக்கிடையே போக்குவரத்தை ஏற்படுத்தியிருப்பது Mini Bus திட்டம். ஆனால் இந்த Mini Bus திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுத்தால்கூட, R.T.O.-வாக இருப்பவர்கள் இதிலே Court தடையாணை இருக்கிறது என்று பல காரணங்களைச் சொல்லி இழுத்தடிக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலே ஏறக்குறைய 9 வழித்தடங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், அதைச் செயல்முறைப்படுத்தாத வகையிலே, தடையாணை இருப்பதாகச் சொல்லி இன்னும் அதற்குரிய உத்தரவை R.T.O.-க்கள் வழங்கவில்லை என்பதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கு ஆவன செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10--00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு துரித நடவடிக்கைகளை எடுத்து

[2000 மார்ச் 6

வருகின்றது. இந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. பலமுறை தள்ளித் தள்ளிப் போய், வருகிற 8 ஆம் தேதி தீர்ப்பு அளிப்பதாக நீதிபதி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக 8 ஆம் தேதி அரசுக்குச் சாதகமாக அந்த ஆணை பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**30—**

**மலை வழிச் சாலை**

***6053—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பிலிருந்து (விருதுநகர் மாவட்ட எல்லை) வருச நாட்டிற்கு (மதுரை மாவட்ட எல்லை) மலை வழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பிலிருந்து, வருச நாடு, தேனி மாவட்ட எல்லைக்கு மலை வழிச் சாலை அமைப்பதற்கு 1986-87-ல் 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், மத்திய வனத் துறை அலுவலர், thick forest என்று சொல்லி அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அங்கே செடி, கொடிகள்தான் இருக்கின்றன. தரிசு நிலமாகத்தான் இருக்கின்றது. அதனால், thick forest பாதிக்கப்படாது. ஏற்கெனவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், திரு. தா. கிருட்டிணன், 11-8-1998-லே மலை வழிச் சாலை அமைக்கப்படும் என்று தேனியிலே பொதுக்கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள். அதுபோல், மத்திய வனத்



2000 மார்ச் 6]

துறைச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றும் பேசியிருக்கிறார்கள். அதேமாதிரி, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினா இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** இது கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுதிப் படிக்கக் கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** உள்ளதைச் சொல்ல வேண்டும் அல்லவா? மலை வழிச் சாலை அமைப்பதற்கு, வனத் துறைச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள், அது என்ன ஆயிற்று என்று கேளுங்கள். அவ்வளவுதான்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சொல்லியிருக்கிறார்கள், திரு. டி.ஆர். பாலு அவர்கள் மத்தியிலே வனத் துறை அமைச்சராக இருப்பதனால், மத்திய வனத் துறைச் சட்டத்தை திருத்தி, அந்தப் பகுதியிலே சாலை போடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா? ஏற்கெனவே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவருடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், வத்திராயிருப்புப் பகுதியிலேயிருந்து, வருச நாட்டுக்கு மலைவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்கிறார். அதேமாதிரி ஒவ்வொரு பகுதியிலேயிருந்தும் மலைச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலிருந்தும் வருகின்றன ; பொதுமக்களிடத்திலிருந்தும் வருகின்றன. இவர் குறிப்பிட்டிருக்கின்ற இந்தச் சாலையில் ஏறத்தாழ 7 கிலோமீட்டர் வனத் துறைக்குச் சொந்தமானது. அதிலே Reserve Forest பகுதியும் வருகிறது. Protected area என்ற அந்த classification-இலும் வருகிறது. அங்கே சாம்பல் நிற அணில் வளர்கிறது; அது பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் இந்தச் சாலை அமைக்கப்படக் கூடாது என்று வனத் துறை மறுப்புத் தெரிவித்திருக்கிறது. எனவே, இந்தச் சாலை அமைப்பதிலே இப்பொழுது சிக்கல் இருக்கிறது. வனத்

துறை ஒப்புதல் அளித்தால்தான் இந்தச் சாலை அமைக்கப்படும். வனத் துறைச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று நான் பேசியது உண்மைதான். ஆனால், அதை மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலுவோ அல்லது அமைச்சர் தா. கிருட்டிணனோ நினைத்தால் மாற்றிவிட முடியாது. நாடாளுமன்றம் அதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சருக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். சாம்பல் நிற அணில் அந்தப் பகுதியிலே கிடையாது. வெறும் செடி, கொடிகள்தான் இருக்கின்றன. சாம்பல் நிற அணில் செண்பகத்தோப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளிலேதான் இருக்கிறதே தவிர, வத்திராயிருப்புப் பகுதியில் இல்லை. வருச நாடு, பொம்மைக்காரன் தொழுவு, வலசரவு தொழுவு, வண்ணாத்திப்பாறை, வெள்ளிமலை எஸ்டேட், கவரிமலை எஸ்டேட் வழியாக குறுக்குப் பாதை அமைத்தால் ஐயப்பன் கோயிலுக்கு, 37 கிலோமீட்டரில் போக முடியும். ஆனால், இப்போது செங்கோட்டை வழியாக, திருவனந்தபுரம் வழியாக 370 கிலோமீட்டர் தூரம் சுற்றி ஐயப்பன் கோயிலுக்கு இலட்சக்கணக்கான மக்கள் போகிறார்கள். இப்பொழுது பம்பையிலே tourist bus–களையெல்லாம் நிறுத்துகிறார்கள். நமது எல்லையிலேயே, பிளவக்கல் அணைப் பகுதியிலே பேருந்துகளை நிறுத்த இடங்கள் இருக்கின்றன. அங்கே பேருந்துகளை நிறுத்தினால், நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு வருமானம் வரும். ஆகவே, இதையும் கவனத்தில்கொண்டு, ஐயப்பன் கோயிலுக்குக் குறுக்குப் பாதை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா, இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அதிகாரிகள் தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அந்தத் தகவலை நம்பாமல், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தகவலை எப்படி நம்புவது என்று எனக்குத் தெரியவில்லை. வனத் துறைத் தலைவர் எழுதியிருக்கிற கடிதத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர், சாம்பல் நிற அணில் சரணாலயப் பகுதியில் அமைந்துள்ள 5 கிலோமீட்டர் தூரத்தில், சாத்தூர் காப்புக் காட்டிலேயே சுமார் 2 கிலோமீட்டர் தூரமும், காப்புக் காட்டிற்கு வெளியே 3 கிலோமீட்டர் தூரமும், கடல் மட்டத்திலிருந்து 200 மீட்டர் முதல் 817 மீட்டர்வரை இருக்கிறது என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பத்தை



நான் மறுக்கவில்லை. சாலைகள் போட வேண்டுமென்ற அவருடைய விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டியதுதான். ஆனால், அதில் பல்வேறு வனத் துறைச் சட்டங்களையும் பார்க்க வேண்டியிருக்கிறது, நிதி ஆதாரத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு, எதிர்காலத்திலே அதுபற்றி யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**31—**

**நிதியுதவி**

***25220—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெங்களூர் தமிழ்ச் சங்கம், பள்ளிக் கட்டடத்திற்கு நிதி உதவியை தமிழக அரசிடம் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெங்களூர் தமிழ்ச் சங்கத்திடமிருந்து, பெங்களூர் மாநகராட்சி மேம்பாட்டுக் குழுமத்தால் ஏற்பளிக்கப்பட்ட கட்டட வரைபடம் கேட்கப்பட்டுள்ளது. அது வரப்பெற்றால், ஆய்வுசெய்து அரசின் நிதிநிலைமைக்கேற்ப நிதி உதவி வழங்க முடிவு மேற்கொள்ளப்பெறும்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர், தமிழ்ச் சங்கம், அதனுடைய நிதி நெருக்கடியைக்

கருத்தில்கொண்டும், அங்கே தமிழை வளர்க்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் இந்த நிதியைக் கோரியிருக்கிறார்கள். அரசு அதிலே தாமதப்படுத்துவதாக ஒரு நண்பர் என்னிடத்திலே சொன்னார். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விரைவுப்படுத்தி, நம்முடைய முதல்வருடைய எண்ணத்திற்கேற்ப உடனடியாக வேண்டிய நிதியை வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு யாரோ தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். கட்டட வரைபடம் கேட்டு, பல நினைவூட்டுக் கடிதங்கள் இந்தத் துறையிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. அங்கிருந்து வரைபடம் வந்தவுடனே, அதுகுறித்து முடிவு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு சார்பாக நானும், நம்முடைய மூத்த உறுப்பினர் திரு. பழனிசாமி போன்றவர்களும் சுற்றுப்பயணம் செய்தபோது அந்தமான் தமிழ்ச் சங்கம் வரவேற்புத் தந்தது. அங்கே அவர்கள் கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டியிருக்கிறார்கள். அது பழுதடைந்திருக்கிறது. அதைப் பழுதுபார்க்க வேண்டும், அதற்காக நிதி உதவி வேண்டும் என்று அந்தமான் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனுச் செய்திருக்கிறார்கள். அதைப்போல, மும்பை நகரில் அணுசக்தி நகரிலுள்ள தமிழ்ச் சங்கத்தினர் தமிழ்ப் பள்ளிகள் நடத்துகிறார்கள். அவர்களும் புத்தகங்கள் வேண்டும், நிதி உதவி வேண்டும் என்று மனுவைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, பெங்களூருக்கு உதவி செய்வதைப்போல கடல் கடந்திருக்கிற அந்தமான் தமிழ்ச் சங்கத்திற்கும், மும்பை அணுசக்தி நகரிலுள்ள தமிழ்ப் பள்ளிகளுக்கும் அரசு உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தமான் தமிழ்ச் சங்கத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். ஏற்கெனவே நானே அதிலே இரண்டு, மூன்று முறை பேசியிருக்கிறேன். அதைப்பற்றி விரிவாகவும் எழுதியிருக்கிறேன். அவர்கள் இப்போது எந்தக்



கோரிக்கையையும் எங்கள் துறைக்கு அனுப்பியதாகத் தெரியவில்லை. அப்படி அனுப்பினால், அதுகுறித்து ஆய்வு செய்யப்படும். அதே நேரத்தில் மும்பையைப் பொறுத்தவரையில் அண்மையில் தமிழக அரசினுடைய அனுமதியின்பேரில் நிதி ஒதுக்கப்பட்டு, மும்பை நவீன் தமிழ்ச் சங்கத்தில் இப்போது புதிதாகத் தமிழ் மையம் தொடங்கப்பட்டுள்ளது. அந்தத் தமிழ் மையத்தால் அய்யன் திருவள்ளுவர் நூலகமும் திறக்கப்பட்டுள்ளது. அந்த நூலகத்திற்கும் விரைவில் அரசு ரூ.10,000/-- பெறுமானமுள்ள நூல்களை அனுப்ப இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கும், திருக்குறள் வகுப்புகள் நடத்துவதற்கும் தனியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதே ஏற்பாடுகள் கல்கத்தா தமிழ் மையத்திற்கும் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**32—**

### கூட்டுறவு நிலவள வங்கி

***17188—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் புதியதாக கூட்டுறவு நிலவள வங்கி தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் புதியதாக கூட்டுறவு நிலவள வங்கி அமைக்கும் கருத்துருவின்மீது, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்றபின், நீடாமங்கலத்தில் புதிய நிலவள வங்கி தொடங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மார்ச் 6

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரைவில் நீடாமங்கலத்தில் வேளாண்மை நிலவள வங்கி தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. கோ. தளபதி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**33—**

**மண்ணெண்ணெய் பங்க்**

***24530—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியிலுள்ள எழுமலையில் கூட்டுறவு தொடக்க வங்கி மூலம் மண்ணெண்ணெய் பங்க் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை, தங்களுடைய அனுமதியோடு கூறுகிறேன்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் 500 இடங்களிலே மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை அமைப்பதற்காக அனுமதி தந்து, அரசின் சார்பாக 3 கோடி ரூபாய் அதற்காகப் பணமும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே அனுமதிக்கப்பட்ட 500 இடங்களிலே, இதுவரை கிட்டத்தட்ட 195 இடங்களிலே அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. கட்டுமானப் பணிகள் முடிந்து, திறக்கக்கூடிய நிலையிலே 16 இடங்கள் இருக்கின்றன. கட்டுமானப் பணிகள் 25 இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 41 இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன.



2000 மார்ச் 6]

இதர இடங்கள் தேர்வு செய்யப்பட, முன்மொழிவுகள் வரப்பெற்று, அவை பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த முறையிலே பார்ப்போமேயானால், ஏற்கெனவே அரசு சார்பாக அறிவிக்கப்பட்ட அரசாணையின்படி, 10 ஆயிரம் குடும்ப அட்டைகள் இருந்தால்தான் புதிதாக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்கப்படும். அப்போதுதான் அது viable -ஆக இருக்கும் என்று அறுதியிடப்பட்டிருந்தது. ஆனால், இப்போது நகர்ப்புறங்களிலே அமைக்கப்பட ஓரளவுக்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அது கிராமப்புற மக்களுக்கும் சரியான அளவிலே கொண்டு செல்லப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசின் சார்பாக இப்போது புதிய திட்டத்தை அறிவிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, 4,000 அட்டைகள் இருந்தால்கூட, அந்த இடங்களிலே மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டு, அருகில் இருக்கிற கிராமங்களுக்கும் அவர்களே கொண்டு சென்று மண்ணெண்ணெய் வழங்குவது என்ற அளவிலே புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அரசாணை விரைவிலே வெளியிடப்பட்டவுடன், நமது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதியிலே புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**34—**

**பணிப் பாதுகாப்பு**

***28613—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வீடுகளில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

[2000 மார்ச் 6

(ஆ) அவர்களுக்குச் சட்ட ரீதியான பணிப் பாதுகாப்பு அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் வீட்டு வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் எண்ணிக்கையை அறிய, இதுவரை கணக்கு எடுக்கப்படவில்லை.

(ஆ) வீடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்க வேண்டி, தமிழ்நாடு உடல் உழைப்போர் சட்டத்தின்கீழ் உள்ள அட்டவணையில் இத்தொழிலையும் சேர்த்து அரசாணை (நிலை) எண் 8, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-1-2000-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கை, தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் வெளியீடு, நாள் 28-1-2000-ல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, வீட்டு வேலைத் தொழிலாளர்கள், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் வாரியம் மூலமாகப் பயன் அடையலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டிருப்பது என்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு நல்ல முயற்சிதான். ஆனால், நோக்கம் நல்லதாக இருந்தால் மட்டுமே நடைமுறையில் வெற்றி கிடைத்துவிடுவதில்லை. அந்த நோக்கம் நடைமுறையில் வெற்றி பெறுவதற்குரிய வழிவகை உருவாக்கப்பட வேண்டும். அதில் பலவீனம் இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடமிருந்து நான் அறிய விரும்புவது, 20 ரூபாய் மாதச் சந்தா என்று அது வரையறுக்கப்பட்டிருக்கிறது; சாதாரணமாக ஒரு paper picking worker 20 ரூபாய் எப்படிக் கொடுக்க முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். தெருக்களிலே சிதறிக் கிடக்கின்ற குப்பைகளைப் பொறுக்கி, அவற்றை விற்று வயிறு வளர்க்கிற நிலைமையில் இருக்கக்கூடிய ஒரு தொழிலாளி, மாதம் 20 ரூபாய் கொடுப்பது என்பது சாத்தியமல்ல. எனவே, நல்ல நோக்கத்தோடு அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தத் திட்டம் நடைமுறையில் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமென்று அரசு கருதுமானால், அந்த 20 ரூபாய் என்பதை 10 ரூபாயாகக் குறைத்து, மீதி 10 ரூபாயை கேரளத்தைப்போல அரசு தன்னுடைய பங்களிப்பாகச் செலுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து State Labour Advisory Board-ல் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த பிரதிநிதிகளும் மற்றவர்களும் கலந்துபேசி, இது வரவேற்கப்பட வேண்டிய திட்டம் என்று, எந்தக் குறையும் சொல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அமைப்புசாரா தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் பலன் பெறுகின்ற விததிலே 48 இலட்சம் ரூபாய், இப்போது transport வரியின் மூலமாகக் கிடைத்திருக்கிறது. வேலை அளிப்பவர்கள் மூலமாக எதுவும் வரவில்லை. காரணம், பல இடங்களிலே அது சுயவேலைவாய்ப்பாகவே இருக்கிறது. இருந்தாலும், மீண்டும் அதுகுறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் கலந்து, அவசியப்பட்டால் அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நான் அங்கம் வகிக்கிற A.I.T.U.C., S.L.A.B. meeting-ல் இதை வரவேற்றதாகச் சொன்னார்கள். நான் ஒன்றும் இதை எதிர்த்து சொல்லவேயில்லை. நல்ல திட்டம் என்பதை வரவேற்றுத்தான் சொன்னேன். ஆனால் அந்த நல்ல திட்டம் நடைமுறையில் நிறைவேறுவதில் இருக்கிற சில பிரச்சினைகளைப் பற்றித்தான் சொன்னேன். இதுகுறித்துக்கூட, எங்களுடைய மாநில A.I.T.U.C.-இன் சார்பில் ஒரு விரிவான மகஜர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களும், இது பரிவோடு பரிசீலிக்கப்படவேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது, வருடத்தில் 100 ரூபாய் கட்டுகிற முறையில் அதை மாற்றியமைத்தால்தான் நடைமுறையில் அது வெற்றிகரமாக அமையும் என்பதை, அனுபவங்களிலிருந்து நான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படிச் செய்ய மாநில அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 54 தொழில்களுக்கு இப்போது சட்ட ரீதியாகப் பாதுகாப்பு வழங்குகின்ற விதத்திலே, அவை இந்த வாரியத்திலே இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 20 ரூபாயைக் கொடுக்கக்கூடிய சக்தி எல்லோருக்கும் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற வாதம் முழுமையாகச் சரியாகாது. தையல் தொழிலாளிகள் அதிலே

இடம் பெற்றிருக்கிறார்கள். முடிவெட்டுவோர் இடம் பெற்றிருக்கிறார்ககள். அவர்களுக்குப் பல நலத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமானால் தொழிலாளர்கள் பக்கமும் ஒரு பங்களிப்பு இருக்க வேண்டும்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறுவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் 20 ரூபாய் என்பதை எல்லாத் தொழிலாளர்களுக்கும் குறைக்க வேண்டுமென்று கேட்கவில்லை. பேப்பர் பொறுக்கி, அதன் மூலமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கின்ற மிக, மிக ஏழ்மையிலேயுள்ள அந்தத் தொழிலாளர்கள் என்று சொல்கிறார். மிக, மிக ஏழ்மையிலே உள்ளவர்கள், 20 ரூபாய் கட்ட வசதி இல்லையென்று தகுந்த காரணங்களோடு அவர்கள் மனுச் செய்வார்களேயானால் அதைப் பரிசீலிக்க நிச்சயமாக இந்த அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**35—**

### தொழிற்பயிற்சி மையம்

***29531—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் மாணவியர் தொழிற்பயிற்சி மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும்?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.





**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு கொடுத்திருக்கின்ற நம்முடைய கலைஞர் அரசில் பெண்களுக்கென்றே தொழிற்பயிற்சி மையங்களை ஏற்படுத்தித் தந்தால்தான் அதிக அளவில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை கிடைக்கும். ஆகவே, என்னுடைய தொகுதியில் இதுவரை அரசுத் தொழிற்பயிற்சி மையம் எதுவும் இல்லாத இந்தக் காலகட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பெண்களுக்கென்று ஒரு தொழிற்பயிற்சி மையம் ஆரம்பித்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள், கல்வி, வேலைவாய்ப்புப் பெற வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. கரூரிலே ஏற்கெனவே C.S.I., I.T.I என்ற தனியார் தொழிற்பயிற்சி நிலையம் இருக்கிறது. அதிலே ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. கரூர் மாவட்டத்தில் 8 I.T.I.-கள் இருக்கின்றன. அங்கும் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் அதிக அளவு நிதி கொடுத்துத்தான் சேர முடிகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, அரசு தொழிற்பயிற்சி மையம் ஒன்று ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.T.I.-யைப் பொறுத்தமட்டிலே அதிகமாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்ற புகார் இதுவரைக்கும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விடுக்கிற கோரிக்கைக்கு இப்போது அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. செங்கை சிவம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**36—**

## நூற்பாலைகளுக்கு நிதியுதவி

***25638—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவுளி ஆலைகளுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழகத்தில் உள்ள நூற்பாலைகளுக்கு நிதியுதவி வழங்க மத்திய அரசு முன் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஜவுளி ஆலைகளுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கென குறிப்பாக எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. தகுதியுள்ள நூற்பாலைகள், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வங்கிகளை அணுகி நிதியுதவி பெறலாம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கென்று நிதி ஒதுக்கப்படவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி 2000-2001 ஆம் நிதியாண்டிலாவது மற்ற மாநிலங்களைப்போல தமிழ்நாட்டிலுள்ள ஜவுளி நூற்பாலைகளுக்கு இந்த நிதியைப் பெற அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு இல்லையென்றுதான் தெரிவித்தேன். தேவைப்பட்டவர்கள் வாங்கிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிலே இருக்கிறது. ரூபாய் 25,000 கோடி என்ற அளவிலே Technology Upgradation Fund மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது. அதில் முதலில் நூற்பாலைகளுக்குக் கொடுப்பதில்லை என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, நமது முதல்வர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் Technology Upgradation Fund-ல் நூற்பாலைகளுக்கும் அளிக்கக்கூடிய வாய்ப்பை, வழிமுறையை மத்திய அரசு அளித்தது. அதையொட்டி நாம் இதுவரை பெற்றிருக்கின்ற தொகையை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். Technology Upgradation Fund—Statistical Information obtained from the Office of the Textile Commissioner, Mumbai. Proposals Submitted-59 இதில் கோரிய தொகை ரூபாய் 801 இலட்சத்து 70 ஆயிரம். அதேபோல, அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 33. அதன்மூலம் கோரியுள்ள தொகை ரூ.137 இலட்சத்து 55 ஆயிரம். இதுவரை 18 மனுக்களுக்கு ரூ.61 இலட்சத்து 75 ஆயிரம் தமிழகத்திற்கு Technology Upgradation Fund-லிருந்து பெறப்பட்டிருக்கிறது. மேலும், தேவைப்படுபவர்கள் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால், நலிவடைந்த ஆலைகளுக்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்த இயலாது.



முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி ரூ.25 ஆயிரம் கோடியிலிருந்து தமிழகம் இதுவரை பெற்றிருக்கிற தொகை வெறும் 61 இலட்சம்தான். இது மிகக் குறைவான தொகை. நான் அறிந்தவரை, இதற்கான காரணம் வட இந்தியாவைத் தலைமையகமாகக் கொண்டு அல்லது மும்பையைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிற பெரும்பாலான வங்கிகள் அந்தந்த மாநிலங்களிலே இருக்கிற ஜவுளி ஆலைகளுக்குத்தான் பெருமளவில் கடன் தருகின்றன. தமிழகத்தை மையமாகக் கொண்டு இயங்குகிற இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி—இந்த இரண்டு வங்கிகளுமே தமிழகத்தில் பெருமளவு கடன் கொடுப்பதற்குத் தயாராக இருந்தும்கூட, ரிசர்வ் வங்கி அதற்கு அனுமதி அளிக்க மறுப்பதாக நமக்குத் தெரிகிறது. குறிப்பாக, மேற்கு வங்காள மாநிலத்தினுடைய முதல்வர் தோழர் ஜோதிபாசு அவர்கள் மாநிலத்தினுடைய அனைத்து வரவு-செலவுகளுமே யுகோ வங்கி (UCO Bank) மூலமாகத்தான் நடைபெற வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பி இருப்பதாகத் தெரிகிறது. அதேபோல, தமிழக அரசாங்கமும், இங்கே செயல்படுகின்ற இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளைப் பலப்படுத்தி, அவற்றின் மூலமாக ரூ.25 ஆயிரம் கோடியில் குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரம் கோடியையாவது ஜவுளித் தொழிலினுடைய தொழில்நுட்ப மேம்பாட்டிற்குப் பெற்றுத் தர இயலுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து. ஆனால், நமக்கு மட்டுமல்ல. தனியார் மில் அதிபர்களுக்கும் இது பொருத்தமான ஒன்று என்பதும், நம்முடைய கோரிக்கைகள் எந்த அளவிற்கு இருக்கின்றனவோ, அந்த அளவிற்குத்தான் நாம் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தனித் தனியாக ஆராய்ந்து, இதிலே ஈடுபடுவதற்கான தக்க வழிமுறையை இனிமேல்தான் நாம் கையாள வேண்டும். அதற்கொப்ப இதுபற்றிச் சிந்தித்து, தக்க முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NABARD நிறுவனம் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு உதவி செய்ததற்குப் பிறகும், அவர்கள் நல்லமுறையிலே செயலாற்றுவதற்கு இன்னும் சிரமம் ஏற்பட்டிருப்பதனால், அந்த ஆலைகளை நவீனப்படுத்துவதற்கும், அவை நல்ல முறையிலே செயலாற்றுவதற்கும் மத்திய அரசிடமிருந்து பிரத்தியேகமாக நிதியுதவி பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 185 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டு, அது பல அணுகுமுறைகளிலே பயன்பட்டு வருகிறது. NABARD மூலம் நாம் பெறக்கூடிய தொகை 6 நூற்பாலைகளுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே இங்கே 6 நூற்பாலைகள் இலாபத்திலே இயங்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும், விவரம் தேவைப்படின், தனியாக நீங்கள் கேள்வி கேட்டால், முழு விவரத்தையும் நான் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



**37—**

### சத்துணவு மையக் கட்டடம்

***18883—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் ஆதிதிராவிடர் காலனிக்குப் புதிய சத்துணவு மையக் கட்டடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், துறையூர் ஆதிதிராவிடர் காலனியில் தற்போது ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து மையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டில் இயங்கி வருகிறது. வரும் 2000—2001 ஆம் நிதி ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று, புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**38—**

### கால்நடை மருத்துவமனை

***25627—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வேப்பிலை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வேப்பிலை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மார்ச் 6

*முற்பகல் 10-25*

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வேப்பிலை ஊராட்சி, மாவட்டத்தின் எல்லையில் உள்ள ஒரு பகுதி. அங்கே எந்தத் தொழில் வசதியும் இல்லை. சிறு, சிறு விவசாயிகள்தான் அங்கே இருக்கின்றனர். அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், அவர்கள் கால்நடைகளை வளர்த்து, பிழைத்து வருகிறார்கள். ஆகவே அவர்களின் வசதிக்காக, அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த அரசு இந்த ஆண்டு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பிலை ஊராட்சி, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. வேப்பிலை கிராமத்தில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடைக் கிளை நிலையமோ இல்லை. காடையாம்பட்டியிலுள்ள கால்நடை மருந்தகத்தின் மூலமும், கேஎன்புதூர் கால்நடைக் கிளை நிலையத்தின் மூலமும் வேப்பிலை கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், காடையாம்பட்டி மருந்தகத்தைத் தவிர, காடுவல்லி என்ற ஊரில் ஒரு மருந்தகமும், கே.என்.புதூர், டேனிஷ்பேட்டை, பூசாரிப்பட்டி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், அவற்றுக்கு முறையே, கணவாய்ப்புதூர், பொன்னியம்பட்டி, மாட்டுக்காரன்புதூர் ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. வேப்பிலை ஊராட்சியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால், அவ்வூராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றி, முழு வடிவிலான கருத்துரு சம்பந்தப்பட்ட மண்டல அலுவலரின் குறிப்புரையுடன் அனுப்பி வைக்கப்பட்டால், வரும் காலங்களில் பகுதி--2 திட்டத்தின்கீழ் நிதி மற்றும் தகுதியின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. சின்னய்யா.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறை அமைச்சரவர்கள் ஏற்கெனவே ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் குறிப்பிடுகிற நான்கு இடங்களில் பகுதி நேர



2000 மார்ச் 6]

பார்வை நிலையம் Visiting Centre அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இதுவரை அந்தக் கால்நடை பார்வை நிலையங்கள் அமைக்கப்படவில்லை. அவை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது தடவையாகப் பொறுப்பேற்ற பின்பு, 2126 பார்வைக் கிளை நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று அறிவிப்புச் செய்து, ஆணையிட்டு, எல்லாத் தொகுதிகளிலும் அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பார்வைக் கிளை நிலையம் எங்கு அமைக்கப்பட வேண்டுமென்று எழுதிக் கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொங்கலூர் தொகுதியிலே கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கால்நடை மருத்துவமனை அனுமதிக்கப்பட்டு, சின்னவாயல்பட்டி என்ற கிராமத்திலே அந்த மருத்துவமனைக்கான இடம் கிராம மக்களால் அளிக்கப்பட்டும், இன்றுவரையில் அந்த மருத்துவமனை அங்கே கட்டப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே வந்தபோதும்கூட நான் சொன்னேன். அவர்கள் கடுமையாகச் சொல்லியும் அதற்கான ஏற்பாடுகள் இதுவரை செய்யப்படவில்லை. ஆகவே, உடனடியாக அங்கே அந்த மருத்துவமனையை அமைப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அவர்களுடைய துறையிலிருந்து 400-க்கும் மேற்பட்ட கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனை கிளை நிலையங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன. எனவே அவர் எழுதிக்கொடுத்தால், அதுகுறித்து நடவடிக்கை எடுத்து, கட்ட ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மார்ச் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

**39—**

**கட்டடங்களைப் பயன்படுத்துதல்**

***2866—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியத்தில் பயனற்றிருக்கும் அரசுக் கட்டடங்களைச் சிறு தொழில் அல்லது வேறு நல்ல திட்டங்களுக்குப் பயன்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில், என்னுடைய அரக்கோணம் தொகுதியில், நெமிலி ஒன்றியத்திலே நெமிலிப்பாக்கம், நாகவேடு, பள்ளூர் போன்ற பகுதிகளிலும், அரக்கோணம் ஒன்றியத்திலே கூனமங்கலம் என்ற இடத்திலும் அரசின் சார்பில் அலுமினியம் தொழிற்சாலை, விசைத்தறிக்கூடம், காகித உற்பத்தித் தொழிற்சாலை போன்ற சிறு தொழில்கள் தொடங்குவதற்கு பல இலட்சக்கணக்கான ரூபாயில் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்றுவரையில் செயல்படாமல் பூட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. அவை எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன? ஒரு வேளை சிறு தொழில்கள் தொடங்க முடியவில்லை எனில், அந்தப் பகுதியிலுள்ள ஏழை மக்கள் பயன்படுத்தும் விதமாக, திருமணக் கூடங்கள் போன்றவற்றிற்குத் திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 மார்ச் 6]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில், நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்காக 10 தொழில் அலகுகள் கட்டப்பட்டுள்ளன. அதில் இலுப்பை தண்டலத்தில் இருக்கக்கூடிய தொழிற்கூடம் சத்துணவு மையமாக செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 9 தொழிற்கூடங்களையும் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் விரும்புகின்ற அளவிற்கு, திருமண மண்டபத்திற்கு அல்லது சமுதாயக் கூடத்திற்கு அல்லது வேறு நலத் திட்டங்களுக்கு தேவைப்படுமாயின், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அவற்றைத் தொடங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. ம. சண்முகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**40—**

**குடியிருப்புகளைச் சீர்படுத்துதல்**

***24618—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு ஒன்றியம் மற்றும் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் பழுதடைந்துள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளைச் சீர்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் 1997-98 ஆம் ஆண்டில், ரூ.3.172 இலட்சம் செலவில் 144 தொகுப்பு வீடுகளுக்குப் பழுதுபார்த்தல் பணிகளும், ரூ.3.178 இலட்சம் செலவில் 14 தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துக் கட்டும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டன. மேலும் பொள்ளாச்சி

[2000 மார்ச் 6

வடக்கு ஒன்றியத்தில் ரூ.2.522 இலட்சம் செலவில் 121 தொகுப்பு வீடுகளுக்குப் பழுதுபார்த்தல் பணிகள் மட்டும் செய்யப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் மேற்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் தொகுப்பு வீடுகளுக்குப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் ஏதும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் அரிசி கடத்தப்பட்டது சம்பந்தமாக நான் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொறடாவாக இருப்பதால் புது வழிமுறைகளைக் கொண்டுவர முடியாது. கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். பேரவைத் தலைவர் அறையிலே வந்துதான் கேட்க வேண்டுமேயொழிய நீங்கள் விளம்பரத்திற்காக இப்படி அவையிலே எழுந்து நிற்பதை நான் அனுமதிக்க முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** விளம்பரம் இல்லை, முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டவிதிகளை ஒழுங்காகப் படியுங்கள். பேரவைத் தலைவருடைய அறையிலேதான் வந்து கேட்க வேண்டும். அப்போது அதற்குப் பதில் கிடைக்கும். உட்காருங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** Because this is Zero Hour, we can raise this point.

**HON. SPEAKER:** You cannot. I don't admit you. I am not permitting you



2000 மார்ச் 6]

(Interruption). I am not permitting you to raise it now.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, இது ரொம்ப முக்கியமான விஷயம். இரயிலிலே அரிசி கடத்துகிறார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்தால்.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இரயிலிலே அரிசியைக் கடத்துகிறார்கள், அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார். யாரும் பார்த்துக்கொண்டு இல்லை. பிடித்திருக்கிறோம். பிடித்ததற்காக யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது. நான் சொல்ல விரும்புவது, தங்களுடைய அறையிலே பேசும்போது அரிசி கடத்தல் பற்றிய Adjournment Motion-ஐ நாளை அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்வதாக நானே திரு. ஞானசேகரனிடத்தில் சொல்லியிருக்கிறேன். அவரும் ஒத்துக்கொண்டு போனார். இங்கே வந்து பிரச்சினையை எழுப்புவது நமக்கு வேடிக்கையாக இருக்கிறது.

(திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் தே. குமாரதாஸ், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். நான், பேரவைத் தலைவர் நிற்கிறேன், உட்காருங்கள். உங்கள் அரசியலைப்பற்றி எனக்குக் கவலையில்லை. மரபுகளை நான் காப்பாற்றுவேன். மரபை மீறி நடந்தால் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன். அறையில் வந்து கேட்க வேண்டியதை விளம்பரத்திற்காக இங்கே வந்து கேட்கக் கூடாது. நான் அனுமதிக்க முடியாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, நான் 2 ஆம் தேதியே இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்தத் தேதியில் கொடுத்திருந்தாலும் என் அறையில் வந்துதான் கேட்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, இது மக்களுடைய பிரச்சினை என்பதால் நாளைக்கு என்பதைவிட இன்றைக்கே எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை முதலமைச்சரிடம் கேட்டீர்கள். அவர்கள் பதில் சொன்னார்கள். பதிலை வாங்கிக்கொண்டு போய்விட்டீர்கள். உட்காருங்கள்.

[2000 மார்ச் 6

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, இருந்தாலும் மக்களுடைய பிரச்சினை என்பதால் எழுப்புவதற்கு. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நடந்துகொள்வது முறையில்லை. அவ்வளவுதான் நான் சொல்வேன். நான் நிச்சயமாக இன்னொரு தடவை சொல்வேன், உங்களுக்குப் பதில் கொடுத்த பிறகு, நீங்கள் இங்கே பேசுவது விளம்பரம் தேடுவதற்குத்தான்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டாலும் அதற்கான விவரங்களோடு நானும் தயாராக இருப்பதுதான் அவைக்கு நல்லது. இங்கு ஒரு பிரச்சினையை எழுப்பி விவரம் என்னிடத்திலே இல்லை, பிறகு தருகிறேன் என்று சொன்னால் அது அவைக்கும் பயன்படாது, மக்களுக்கும் பயன்படாது. அதனால் விவரங்களோடு நாளையதினம் நான் வருகிறேன். நாளையதினம் இந்தப் பிரச்சினையை எடுத்த பிறகு பதில் அளிக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே, "நீங்கள் விளம்பரத்திற்காகப் பேசுகிறீர்கள்" என்ற வார்த்தைகளை மாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அப்படித்தான் சொல்வேன், நான் அதை மாற்ற முடியாது, உட்காருங்கள். வேண்டுமானால் நீங்கள் என்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுங்கள். உட்காருங்கள். நான் ஒரு தடவைக்கு நான்கு தடவை சொன்ன பிறகு, திரும்பவும் இங்கே வந்து பேசினால் என்ன அர்த்தம்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, நிறையப் பிரச்சினைகள் பற்றி நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் இல்லை என்று சொன்னார்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, பாகிஸ்தான் சிறையில் இருக்கக்கூடிய மீனவர்கள் பற்றியும், அரிசி கடத்தல் பற்றியும் கொடுத்திருக்கிறோம். எடுக்கவில்லையென்றால் நாங்கள் என்ன பண்ண முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள், நான் பதில் சொல்கிறேன். ஆளுநர் உரைமீது விவாதம் நடக்கும்போது இப்படிப்பட்டத் தீர்மானங்களைச் சாதாரணமாக அனுமதிப்பதில்லை என்பது மரபு. அதுகூடத் தெரியாமல் இருக்கிறீர்கள். எத்தனை தடவை உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது.



2000 மார்ச் 6]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, நீங்கள் இளகிய மனம் படைத்தவர். நாட்டு நலனுக்காக எதையும் கேட்கக் கூடியவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு இளகிய மனம் இருக்கிறது, இல்லை என்பதுபற்றிப் பிரச்சினை இல்லை. முதலமைச்சரைப் பொறுத்தவரைக்கும் நான் உறுதியாகச் சொல்ல முடியும். நிச்சயமாக உங்கள் கோரிக்கைகளை எல்லாம் கவனிக்கிற இடத்தில்தான் இருக்கிறார் முதலமைச்சர். ஆகையினால் அன்றாடம் நீங்கள் அறையில் கேட்கிறீர்கள். எப்போதெல்லாம் தகவல் தயாராக இருக்கிறதோ அப்போதெல்லாம் நான் அனுமதித்து பதில் சொல்கிறேன் என்கிறார். அந்த முறையை இதுவரைக்கும் கையாளுகிறோம். இப்பொழுது என்ன புதியதாக உங்களுக்கு?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவை கூடும்போதெல்லாம் எந்த முதலமைச்சரும்—நான் தங்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்—அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, எனக்குப் பிறகு, எந்த முதலமைச்சரும்—பேரவைத் தலைவருடைய அறைக்கு வந்து இன்றைக்கு என்னென்ன நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்று இதுவரைக்கும் கேட்டதில்லை. நான் ஒருவன்தான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் ஞானசேகரன் போன்றவர்கள், நம்முடைய நண்பர் குமாரதாஸ் போன்றவர்கள் அவையிலேதான் கேட்கப் போகிறோம் என்று சொன்னால் நான் பேரவைத் தலைவர் அறைக்கே வராமல் இருந்துவிடுகிறேன். நேரடியாக இங்கேயே வந்துவிடுகிறேன். ஏனென்றால் அங்கே வந்து கலந்து பேசுகிறோம்; பிறகு விவாதிக்கிறோம்; அப்படிப்பட்ட விவாதம் தேவையில்லை, இங்கேயே கேட்டுக்கொள்கிறோம் என்று சொன்னால் நான் அதற்கும் தயாராக இருக்கிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோள். அரசு நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரைக்கும் முதலமைச்சரோடு நான் கலந்து பேசியாக வேண்டும். ஆகவே, தயவுசெய்து என்னுடைய அறைக்கு வர வேண்டும். நான், நீங்கள் வருகிற நேரத்திலே வேறு உறுப்பினர் வரக் கூடாது என்ற உத்தரவைப் போடுகின்றேன். (சிரிப்பு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எங்களுக்கு உள்ள வாய்ப்பையும் கெடுத்து விடாதீர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து சில மாணவர்கள் இராஜபாளையம் சென்று கேள்வித்தாளைத் திருடியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்களும் என் அறையிலே வந்து பேச வேண்டியதை அவையிலே பேசக் கூடாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுக்கிறேன். அந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாக நான் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதை எப்போது எடுக்கப் போகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சொல்ல முடியாது, என் அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தெரியாவிட்டால் பரவாயில்லை, நீங்கள் அறையிலே வந்து என்னிடம் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தாமரைக்கனி பேசியது அவைக் குறிப்பில் ஏறாது.

## 3. விதி 110--ன் கீழ் அறிக்கை

### மருத்துவப் பயிற்சி மாணவர்கள் கோரிக்கைகள் ஏற்பு பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110--ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வேண்டியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைத் தங்கள் அனுமதியோடு இந்த அவைமுன் வைக்கின்றேன்.

மருத்துவப் பயிற்சி மாணவர்கள் வேலைநிறுத்தம் தொடர்பாக 3-3-2000 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவித்தவாறு, 4-3--2000 அன்று காலை மருத்துவப் பயிற்சி மாணவர்கள் 30--க்கும் மேற்பட்டவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து தங்கள் கோரிக்கைகள் குறித்து எடுத்துக் கூறினர். நானும் கலந்துகொண்ட அக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர், மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர். இந்தப் பேச்சு வார்த்தையில் பின்வருமாறு முடிவுகள் எடுக்கப்பட்டன:

1. மருத்துவப் பயிற்சி மாணவர்களின் 16 கோரிக்கைகளில் 14 கோரிக்கைகளின்மீது 1--3--2000 அன்று என்னைச் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தபோது அறிவிக்கப்பட்ட முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்பது தொடர்பான கோரிக்கையில் ஏற்கெனவே சட்டமன்றத்தில் அரசின் சார்பாக அறிவிக்கப்பட்ட உறுதிமொழி எழுதப்படாத ஒப்பந்தமாக இருக்கும்.

3. உதவித் தொகையைப் பொறுத்தவரையில், பயிற்சி, பட்ட மேற்படிப்பு மற்றும் மேல்நிலைப் பட்ட மேற்படிப்பு மருத்துவ மாணவர்களுக்குக் கேரள மாநிலத்தில் தற்போது பின்வருமாறு உள்ளது.

பயிற்சி மருத்துவ மாணவர்களுக்கு ரூபாய் 2,752, முதல் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,000, இரண்டாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,219, மூன்றாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,439, மேல்நிலைப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,878.

கேரளாவில் இதை 1--5--2000 முதல் ஒவ்வொரு மட்டத்திலும் பத்து சதவிகிதம் உயர்த்தி பின்வருமாறு வழங்கப்பட உள்ளது:

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மார்ச் 6

பயிற்சி மருத்துவ மாணவர்களுக்கு ரூபாய் 3,027, முதல் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,400, இரண்டாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,641, மூன்றாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 4,883, உயர் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு ரூபாய் 5,366. இவ்வாறு கேரளாவில் 1-5-2000 முதல் உயர்த்தி வழங்கப்படவுள்ள உதவித் தொகைக்குச் சமமாக தமிழகத்தில் 1-3-2000 முதற்கொண்டே வழங்கப்படும். மேலும், இவ்வாறு உயர்த்தி அளிக்கப்படும் உதவித் தொகை இனி ஆண்டுதோறும் 10 சதவிகித அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும்.

இந்த முடிவுகள் காரணமாக அனைவருக்கும் உதவித் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், பட்ட மேற்படிப்பைப் பொறுத்தவரையில் ஒவ்வோர் ஆண்டிற்கும் உயர்த்தி தனித்தனியாக உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உயர்மட்ட மேற்படிப்பிற்கென அதைவிட அதிகமாக உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதோடுகூட, ஒவ்வோர் ஆண்டும் 10 சதவிகிதம் உயர்வு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த உயர்வினை ஏற்றுக் கொண்டு வருங்காலத்தில் உதவித் தொகையை உயர்த்தக் கோரிக்கை வைக்கும் அவசியமே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதை உளப்பூர்வமாக வரவேற்றும், தங்கள் வேலைநிறுத்தத்தை உடனே கைவிடுவதாக பயிற்சி மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் அறிவித்தனர். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் சில திருத்தங்களை நான் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தங்களை முன்மொழிகிறேன்.

வேலூரில் நகரில் குடிநீர் பற்றாக்குறைத் தீர்க்கும் பொருட்டு புதிய வேலூர் பொன்னையாற்றுத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.



2000 மார்ச் 6] [திரு. சி. ஞானசேகரன்]

வேலூர் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

வேலூர் நகரில் புதிய பேருந்து நிலையத்தை உடனே அமைக்க வேண்டும்.

வேலூரில் பல்கலைக்கழகம் ஒன்றை உடன் நிறுவ வேண்டும்.

வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி உடனடியாகத் தொடங்க வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை உடனடியாகத் திறக்க வேண்டும்.

சென்னையிலிருந்து வேலூர் வழியாக கிருஷ்ணகிரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற வேண்டும்.

ஜெயங்கொண்டம் மின்திட்டத்தை உடனே தொடங்க வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் மழை பொய்த்துப் போனதால் அதை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு மாவட்டந்தோறும் அரசு பெரிய தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் புல்லூர் அணை, வெள்ளக்கல் அணை, மேலரசம்பட்டு அணை ஆகியவற்றை உடனே கட்ட வேண்டும்.

அல்லாபுரம், தொரப்பாடி, சத்துவாச்சாரி, சேன்பாக்கம் ஆகிய பேரூராட்சிகளிலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஆழ்துளைக் கிணறுகளை உடனே அமைத்து குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும்.

வேலூரிலிருந்து காட்பாடி செல்லும் பழைய பாலம் இடிந்து விழுந்துள்ள நிலையில் அதைச் சீரமைக்க வேண்டும் என்கிற திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அந்தத் திருத்தங்களை நான் அந்தத் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பட்டியலைப் பாருங்கள். வேலூர் பஞ்சாயத்து மெம்பர் மாதிரி அவர் இருக்கிறார். (சிரிப்பு). திரு. பி. வெங்கடசாமி.

[2000 மார்ச் 6

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, I move the following amendment to the Motion of Thanks for the Governor's Address:—

"Add at the end, the following:

'but regret to note that no mention is made about:

1. Creation of Telegu, Malayalam, Kannada Academies in Tamil Nadu for the promotion of the South Indian languages.

2. Opening of Uzhavar Sandhai type of markets in all major cities for the benefit of the consumers,.''

**HON. SPEAKER:** Any body seconding it?

**திரு. டி. மணி:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் இளைஞர்களிடத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதைப் போக்க அவர்களுக்கு வேலைவாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றவொரு திருத்தத்தையும்;

எடைப்பாடி தொகுதியிலே தாலுகா அலுவலகத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். இன்னும் தாலுகா அலுவலகம் கட்டப்படவில்லை.

ஒரே இடத்திலே, நீதிமன்றம், கருவூலம் மற்றும் அரசு அலுவலகங்கள் அத்தனையையும் கட்டுவதற்கு திருத்தத்தையும் கொடுத்திருக்கிறேன். அதையும், அதேபோலவே;

சேலம் மாவட்டத்தில் கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் இருக்கிறது. அதைப் பிரித்து கொங்கணாபுரத்திலே ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அவையிலே பல முறை சொல்லி, அரசு அதை ஏற்றுக்கொண்டு, தனிச் சங்கமாக அறிவிக்க வேண்டும் என்ற திருத்தத்தையும் கொடுத்திருக்கிறேன்.

இந்தத் திருத்தங்களை முன்மொழிகிறேன். அதான் சார்.



2000 மார்ச் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் கவனத்திற்கும் திரு. சி. ஞானசேகரன் கவனத்திற்கும் சொல்கிறேன். இந்தத் திருத்தங்களை நீங்கள் கொடுக்கும்போது, 'ஆளுநர் உரையிலே கீழ்க்கண்ட பொருள் இல்லையென்பது பற்றி வருத்தப்படுகிறேன்' என்றுதான் முதலிலே சொல்ல வேண்டும். நீங்கள் புதியதாக ஏதோ தீர்மானமாக உரைக்குச் சேர்க்க முடியாது. ஏற்கெனவே, ஆளுநர் படித்த உரையிலே இந்தப் பொருட்கள் எல்லாம் இல்லையென்பது பற்றி வருத்தப்படுகிறோம் என்றுதான் உங்கள் தீர்மானம் இருக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. புதியதாக நீங்கள் கொறடாவாகியிருக்கிறீர்கள். அதனாலேதான் என்ன முறை என்று சொல்லித் தருகிறேன். *(சிரிப்பு)*

ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் இன்று பேசவிருக்கிறார்கள். ஆகவே, கண்டிப்பாக யாரையும் 10 நிமிடங்களுக்கு மேல் அனுமதிக்க முடியாது. முதலிலே டாக்டர் அ. செல்லக்குமார் அவர்களை அழைக்கிறேன்.

*முற்பகல் 10--45*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்குத் தங்களுக்கும் இந்த மன்றத்திற்கும் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தவறுகள் யார் இழைத்தாலும் அவர்கள் அதற்கான தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டுமென்று பல்வேறு கூட்டங்களிலே தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறி வருவதை நாம் கேட்டிருக்கின்றோம். கொடைக்கானல் பகுதியில் சுற்றுச் சூழல் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அரசு ஏற்படுத்தியிருந்த, உருவாக்கியிருந்த நகரமைப்பு விதிகள் கடுமையாக்கப்பட்டு இருந்தபோது, கடந்த ஆட்சிக் காலத்திலே அது தளர்த்தப்பட்டது என்பது ஒரு தவறுக்குக் காரணமாக இருக்கின்றது, அது தவறுதான் என்று கூறி, தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டு, தவறிழைத்தவர்கள்மீது அந்தத் தனி நீதிமன்றத்திலே வழக்கும் தொடரப்பட்டு, இப்போது தண்டனையும் வழங்கப்பட்டு இருக்கிறது.

[டாக்டர் அ. செல்லக்குமார்] [2000 மார்ச் 6

எதிர்க்கட்சி தவறு செய்கின்றபோது அந்தத் தவறு குறித்து நீதிமன்றத்திற்குச் செல்கின்ற ஓர் அரசு, அவர்களுக்குச் சிறைத் தண்டனை பெற்றுத் தருகின்ற ஓர் அரசு, அதே தவறுகளைத் தன் அமைச்சர் செய்திருந்தால், நிர்வாகம் செய்திருந்தால் அதற்கு என்ன தண்டனை என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இந்த அரசு பதவியேற்ற பிறகு, கொடைக்கானலிலே மூன்று தனியார் ஓட்டல்களுக்கு, நகரமைப்பு விதிகளைத் தளர்த்தி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களுக்குப் பிறகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்தபோது, முதலமைச்சர் அவர்களின் எச்சரிக்கை உணர்வு காரணமாக, 16--2--2000-லே அந்தச் சலுகைகளை ரத்து செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் ஏற்கெனவே மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. 'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்ற நக்கீரன் பிறந்த இந்த மண்ணில், ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி என்று இருக்க முடியாது என்பதை முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். எனவேதான், இந்த மன்றத்தின் மூலமாக தமிழகத்தின் முதலமைச்சரை நான் கேட்கிறேன், மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டதற்குத் தண்டனையாக, நீங்களே அந்த அமைச்சர்மீது அல்லது அதற்குத் துணையாக இருந்து அதற்கு ஒப்புதல் அளித்தவர்கள்மீது தனி நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்க இருக்கிறீர்களா அல்லது அவரையே அமைச்சராகத் தொடர்ந்து இங்கே நீடிக்க வைக்க இருக்கிறீர்களா என்பதை இந்த மன்றத்திற்கு நீங்கள் அறிவிக்க வேண்டும்.

இப்போது தமிழகத்திலே சமூகக் கணினி இணைய மையங்களை Internet உருவாக்க வேண்டும் என்பதற்காக, World Tel என்ற ஒரு நிறுவனத்தோடு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. நான் இந்த மன்றத்திலே கடந்த முறை சொல்கிறபோது, தமிழக முதலமைச்சர் அவர்கள் இது ஒரு தனியார் நிறுவனம் அல்ல என்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலே Internet-லே நான் பார்த்துச் சொல்கிறேன், அந்த World Tel நிறுவனம், சாம் பிட்ரோடோ என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனம். பல்வேறு தொழில் அதிபர்கள் அதிலே நிதியை முதலீடு செய்திருக்கிறார்கள் வியாபார ரீதியாக. அந்தத் தனியார் நிறுவனத்தோடு தமிழக அரசு, 13,000 மையங்களில் 'Internet'



2000 மார்ச் 6] [டாக்டர் அ. செல்லக்குமார்]

இணைப்புகளைக் கொடுப்பதற்காக ஓர் ஒப்பந்தம் செய்திருக்கிறது. இதிலே இந்த மன்றத்திற்கு ஓர் உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன், தமிழகத்திலே Internet இணைப்புகள் வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலே Internet இணைப்புகள் வேண்டுமென்று சொன்னால் அதற்கு என இரண்டு gate-way இருக்கின்றன. ஒன்று V.S.N.L. இன்னொன்று M.T.N.L. இந்த இரண்டு 'gate-way' மூலமாகத்தான் Internet இணைப்புகள் பெறவேண்டும். இந்திய அரசாங்கத்தினுடைய நிறுவனமாக இருக்கிற தொலைபேசித் துறை —DoT— இந்த இரண்டு gate-way மூலமாக இந்த நாட்டுமக்கள், தமிழகத்து மக்கள் Internet இணைப்பு வசதிகளைப் பெறவேண்டும் என்பதற்காக - இரண்டு மூன்று நம்பர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

சென்னையில் இருக்கின்ற ஒருவருக்கு Internet வசதியோடு இணைப்பு வேண்டுமென்று சொன்னால், அவர்கள் வசதி செய்து கொடுத்திருக்கின்ற அந்தத் தொலைபேசி இணைப்பு எண்ணைச் சுழற்றினால், சாதாரண ஒரு local call-க்கு ஆகின்ற அந்த ஒரு ரூபாய்க் கட்டணம் அல்லது 80 பைசா கட்டணம்தான் அதற்குச் செலவாகிறது. அதற்குப் பிறகு, அதே —DoT— தொலைபேசித் துறை தமிழகத்திலே 42 மையங்களில், தமிழகத்தின் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை, அனைத்து நகரங்களிலும், பெரும்பான்மையான பகுதிகளில் அதே இணைப்புகளைக் கொடுத்திருக்கிறது. ஒருவர், நாகர்கோவிலிலிருந்து Internet இணைப்பைப் பெறுவதற்காக, சென்னையில் உள்ள V.S.N.L.-க்குத் தொடர்பு கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஆகின்ற கட்டணம் சென்னையில் இருந்து V.S.N.L-க்கு தொடர்பு கொள்கின்ற அந்த ஒரே ரூபாய் கட்டணம்தான் ஆகிறது. அதற்கான சலுகையை DoT கொடுத்திருக்கிறது. அப்படி இருக்கிறபோது, ஒரு மத்திய அரசு நிறுவனம் இத்தனை வசதிகளைத் தமிழகத்தினுடைய பல்வேறு நகரங்களிலே, 42-க்கு மேற்பட்ட மையங்களிலே கொடுத்ததன் மூலமாக ஏறத்தாழ ஆயிரக்கணக்கான Browsing Centres—Internet மையங்கள் இப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10-50

அனைத்து நிறுவனங்களையும், அரசினுடைய செயல்பாட்டையும் Internet இணைப்பிலே கொண்டு வர வேண்டுமென்று எண்ணுகின்ற தமிழக அரசின் எண்ணத்தை நான் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஓர் அரசாங்கம் ஒரு தனியார் நிறுவனத்தோடு ஒரு வியாபார

ஒப்பந்தத்திலே தன்னை இணைத்துக் கொள்கிறபோது, இந்தியத் தொலைபேசித் துறையோடு அத்தகைய ஒப்பந்தத்தை போடுவதற்கு ஏன் பேசி இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். DoT நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்திருந்தால் கன்னியாகுமரியிலே Internet இணைப்பைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு அதற்கானக் கட்டமைப்பு இருக்கிறது. ஏன், அதன் பக்கத்திலே இருக்கின்ற கிராமங்களுக்கும் Internet இணைப்புகள் கொடுப்பதற்கு DoT--க்கு நாம் நிதி கொடுத்திருந்தால், ஒரு பங்கினைக் கொடுத்திருந்தால் அல்லது அவர்களோடு நாம் ஒப்பந்தம் போட்டிருந்தால், அதற்கான வாய்ப்புகள் உருவாகியிருக்கும். அதனால் நாளையதினம் தமிழக மக்களுடைய பணம், அரசாங்க நிதி, தனியாருக்குச் செல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்க முடியும் என்பதை அன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்தினுடைய F.I.B. என்கின்ற வெளிநாட்டு முதலீடு வருவதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற அந்தக் குழுகூட நீண்ட காலமாக இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு பல்வேறு காரணங்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காரணங்களிலே 2,3 என்னவென்று சொன்னால், இங்கே நிதி கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், 100 சதவிகிதம் பணத்தையும், வெளிநாட்டிலே இருந்து கொண்டு வந்தால்தான் அதனை வெளிநாட்டு முதலீடு செய்கின்ற ஒரு நிறுவனமாகக் கருத முடியும். அப்படியில்லாமல் ஒரு Servicing Centre-ஆக இருந்தால், 49 சதவிகிதம் மட்டும்தான் அந்த நிறுவனத்திற்குப் பங்காகக் கொடுக்க முடியுமே தவிர, 51 சதவிகிதப் பங்குகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும். எனவே, இந்த இரண்டு விதிமுறைகளையும் இனி தளர்த்த முடியாத சூழ்நிலையிலே இதற்குத் தகுதி இல்லை என்று முதலிலே மறுக்கப்பட்டு, அதற்குப் பிறகு தற்போதைய அரசாங்கம் மத்தியிலே வந்த பிறகு, என்ன நிபந்தனை என்றே தெரியவில்லை, இப்போது அந்த நிபந்தனைகள் எல்லாம் தளர்த்தப்பட்டிருக்கின்றன. என்னுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், தமிழகத்திலே இதுபோன்ற இணைய மையங்களை வழங்குவதற்குப் பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. முதலமைச்சர் தமிழகத்திலே, இந்தியாவிலே இருக்கின்ற நிறுவனத்தோடுதான் ஒப்பந்தம் போட வேண்டுமென்று எண்ணியிருந்தால் Infosys நிறுவனம் இருக்கிறது. Satyam நிறுவனம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் Dish Net இருக்கிறது. உலகத்திலே பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. World Tel என்பது ஒரேயொரு தனியார் monopoly company





என்று நாம் சொல்லிவிட முடியாது. ஏனென்றால் அமெரிக்க நாட்டினுடைய A.T. & T இருக்கிறது. அதேபோல ALCATEL, SIEMENS இருக்கின்றன. இன்னும் பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. பெல் நிறுவனம் இருக்கிறது. இப்படிப் பல்வேறு நிறுவனங்கள் உலகத்திலே இருக்கின்றன. இதில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடு செய்வது மட்டுமல்ல, என்றைக்கு இந்த மையங்கள் இந்த மண்ணிலே உருவாக்கப்படுகிறதோ, அதற்குப் பிறகு தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் Internet-ல் தொடர்பு கொள்கிறார் என்று சொன்னால், அதற்கு ஒரு கட்டணத்தை அந்த World Tel நிறுவனத்திற்குக் கட்ட வேண்டிய நிர்பந்தத்திலே இருக்கிறார். எனவே, நான் சொல்கிறேன், இந்த அளவிற்கு ஒரு மிகப் பெரிய ஒப்பந்தத்தைக் கோருகின்றபோது Global Tender ஏன் கோரவில்லை என்று அரசைக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஆணித்தரமாகச் சொல்கிறேன், இதனுடைய பின் வாசலிலே எத்தனை தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதற்காகச் சொல்கிறேன். இதுவொரு தனியார் நிறுவனம்.

முதலமைச்சர் அவர்கள் சொல்ல முடியும், தமிழக அரசினுடைய பங்கு இருக்கிறது, எனவே இது ஒரு கூட்டு நிறுவனம், இதிலே தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்று. TIDCO கூட பல்வேறு கூட்டு நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது. பங்குதாரர்களாகச் சேர்கிறார்கள். ஆனால், அந்த நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள் தனியார்களாகத்தான் இருக்கிறார்கள். அரசைக் கேட்டு அல்லது அரசினுடைய ஒப்புதலைப் பெற்று பல்வேறு காரியங்களை அவர்கள் செய்வது இல்லை. அரசு பணம் போடுகிறது அவ்வளவுதான். அதற்குப் பிறகு தனியாருடைய கையிலே இருக்கிறது. அதுபோலத்தான் இந்த நிறுவனத்திற்கும் அரசு தன்னுடைய Equity Share--ஐ கொடுத்தாலும்கூட, World Tel சாம் பிட்ரோடோ நிர்வாகத்திலேதான் இருக்கும். நாளையதினம் இந்த ஒப்பந்தத்தைப் பெற்ற பிறகு, மையங்களை இங்கே அமைத்த பிறகு, அவர்கள் வெளிநாட்டிலே அந்தப் பங்குகளை விற்றால் கேட்பார் இல்லாத சூழ்நிலை உருவாகி விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனக்குக் கிடைத்தத் தகவலின் அடிப்படையிலே சொல்கிறேன். நாளையதினம் இதன் வழியாக ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் தன்னுடைய கேபிள் இணைப்பிற்கு, இந்த நிறுவனத்தை, இந்த மையத்தைப் பயன்படுத்துவதற்காக இருக்கிறார்கள் என்கின்ற தகவல் கிடைத்திருக்கிறது. அதன் அடிப்படையிலே கூறுகிறேன். இது மிகப் பெரிய தவறுக்கு வாய்ப்பளிப்பதாக இருக்கும். முதலமைச்சர் அவர்கள் 'Transparency'

என்று சொல்லுகிறார்கள். நிர்வாகத்தில் ஒளிவு மறைவு இல்லை என்று சொல்கிறார்கள். நிர்வாகத்திலே ஒளிவு மறைவு இல்லையென்று சொன்னால் ஏன் உலகில் இருக்கிற இதுபோன்ற ஏனைய நிறுவனங்களை அழைத்து, ஒரு கூட்டத்தினைக் கூட்டி, பேசி அதன்மூலமாகக் குறைந்த சலுகையில், அதேநேரத்தில் தமிழக மக்களுக்கு எந்தவிதத்திலும் பின்னால் ஒரு கெடுதியும் இல்லாத வகையில் செய்ய யார் முன் வருகிறார்களோ அவர்களுக்குக் கொடுத்திருந்தால் நான் அதைப் பாராட்டியிருப்பேன்.

முற்பகல் *10-55*

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேகூட முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் இன்னும் பல்வேறு நிறுவனங்களோடு பேசுவதற்கு இருக்கிறேன், பேசி இதை நான் முடிவு செய்யவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அதுகுறித்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய தவறுக்கு உடந்தையாக இருக்கிறது என்று நான் தமிழக முதலமைச்சருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வருகிறது என்று கடந்த பல ஆண்டுகளாக அமைச்சரும் சொல்கிறார், இந்த அரசாங்கமும் சொல்லி வருகிறது. இரண்டு தினங்களுக்கு முன்கூட, இந்த மன்றத்திலே தமிழகத்தினுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிருஷ்ணா நீர் சம்பந்தமாக, ஸ்ரீசைலத்திலிருந்து, சோமசீலா அணைவரை உள்ள பாதை கட்டப்படவில்லை என்று சொன்னபோது, மாற்று வழியிலே நாங்கள் தண்ணீரைக் கொண்டு வந்துகொண்டிருக்கிறோம், அதற்காக சின்னமுத்தாப்பள்ளி ரெகுலேட்டரிலிருந்து. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *12* நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். விரைவிலே உரையை முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** சின்னமுத்தாப்பள்ளி ரெகுலேட்டரிலிருந்து diversion செய்யப்பட்டு வக்கிலேரி ஓடை, சோமசீலா வழியாகத் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகிறேன். *1996* செப்டம்பர் திங்கள் *29* ஆம் தேதி தமிழக முதலமைச்சர் அவர்கள், சென்னை நகரத்தினுடைய மாநகராட்சித் தேர்தலை மனதிலேகொண்டு, அன்றைக்குக் குடம் மாற்றிக்கொண்டு, சென்னை நகரத்து மக்களை ஏமாற்றியதுபற்றி நான் ஒன்றை ஆணித்தரமாகச் சொல்கிறேன். அதற்குப் பத்து நாட்களுக்கு முன்னர் ஆந்திராவினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள்கூட பத்திரிகையிலே





சொல்லியிருக்கிறார்கள். இன்னும் *20* கிலோமீட்டருக்குத்தான் சாலைகள் செப்பனிடப்பட்டு, அதற்கான கால்வாய் வெட்டப்பட வேண்டியிருக்கிறது அது வெட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம், ராயலசீமா பகுதியிலே அதிகமாக மழை பெய்து கொண்டிருக்கிறது. மழை நின்ற பிறகு அந்தக் கால்வாய் வெட்டப்படும் என்று பத்திரிகையிலே அன்றைக்குச் செய்தியாகக் கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன், தமிழகத்து முதலமைச்சரை-- உங்களது தளபதி என்று சொல்லப்படுகிற, உங்களைத் தலைவராக ஏற்றுக்கொண்ட ஆந்திர மாநில முதலமைச்சரிடம் *20* அல்லது *25* கிலோமீட்டர் கால்வாயை வெட்ட வேண்டுமென்று ஏன் நீங்கள் கேட்கக் கூடாது ? *3* அல்லது *4* ஆண்டுகளாக இந்த அரசால் அதைச் செய்ய இயலவில்லை என்று சொன்னால், இந்த அரசு மக்கள் விரோத அரசு என்பதிலே யாருக்கும் ஐயப்பாடு இல்லை என்பதை ஆணித்தரமாகச் சொல்வேன்.

அதுபோலவேதான், இப்போது பல்வேறு திட்டங்களை நீங்கள் சொல்கிறீர்கள். சிறு வணிகக் கடன் இப்போது மகளிருக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள். நான் சொல்கிறேன், இயக்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இந்தத் திட்டத்தினை நீங்கள் பயன்படுத்துகிறீர்களே தவிர, அப்பாவி ஏழைப் பெண்மணிகள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பலன் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலேகூட ஏறத்தாழ *30*, *35* பெண்கள் கூட்டுறவு வங்கியிலே கடன் கோரி மனுச் செய்திருந்தார்கள். அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அதற்குப் பிறகு கடன் கொடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகு என்னிடம் சொன்னார்கள். நான் அரசினுடைய உணவுத் துறைச் செயலகத்திற்கு அதைக் குறிப்பிட்டுக் கடிதமாக அனுப்பினேன். அந்தத் துறைச் செயலாளர் எனக்கு *8* மாதத்திற்கு முன் கடிதம் எழுதியிருந்தார். அதிலே கடன் மனுக்கள் விரைவிலே பரிசீலனை செய்து உடனடியாக வழங்கப்படும் என்று சொல்லியிருந்தார். *8* மாதங்கள் ஆகிவிட்டன. இன்றளவும் அந்தக் கடன்கள் வழங்கப்படவில்லை. அதுபற்றிக் கேட்கின்றபோதெல்லாம் கட்சியிலே உறுப்பினராகச் சேருங்கள், கடன் வழங்குகிறோம் என்று சொல்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாகச் சொல்வேன், இது இந்த இயக்கத்திற்கு ஆள் சேர்க்கின்ற முயற்சியே தவிர, தமிழகத்து மக்களுக்கு நலன் சேர்க்கின்ற ஒரு திட்டமாக நிச்சயமாக இல்லை.

அதுமட்டுமல்ல, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே முதலமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத்தின் மீது பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். தமிழகத்திலே மதுபானக் கடைகளில் bar வசதி அதிகமாக இருக்கிறது . . .

[2000 மார்ச் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திற்குள் உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தமிழ்நாட்டில் bars அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும் என்று சட்டமன்றத்திலே சொன்னபோது, காவல் துறையை நிர்வகிக்கின்ற முதலமைச்சர், அதை நான் தடுக்கிறேன் என்று சொல்லவில்லை, 'தடுப்பார் இல்லை' என்று சொன்னால் காவல் துறையை நிர்வகிப்பதற்கே இங்கே ஆள் இல்லையோ, இந்த அரசால் இயலவில்லையோ என்று நாங்கள் எண்ணுகின்ற அளவுக்கு முதலமைச்சரே ஒரு வாக்குமூலத்தை இந்த மன்றத்திலே தந்திருக்கிறார் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வரும்முன் காப்போம் என்ற திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறீர்கள். இந்தத் திட்டத்திற்கு கோடிக்கணக்கான ரூபாயை இப்போது மருந்து வாங்குவதற்காக செலவு செய்கிறீர்கள். ஆனால் பல மருத்துவமனைகள் நிர்வாகத்திலே இருக்கிற கோளாறு காரணமாக மருந்து இல்லாமல், மருத்துவர்கள் இல்லாமல் செயல் இழந்து காணப்படுகின்றன. அதைச் சரிப்படுத்தினாலே இப்போது தமிழகத்திலே நல்ல மருத்துவ வசதியைச் செய்து கொடுக்க முடியும்.

முற்பகல் 11-00

அண்மையிலேகூட நான் பார்த்தேன். சென்னையிலே இருக்கின்ற கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மருத்துவமனையிலே இருக்கின்ற தொலைபேசி இணைப்பை மாற்றி, (Electronic Exchange) கொண்டு வர வேண்டும் என்பதற்காக அந்த மருத்துவமனை அரசுக்கு அனுமதி கோரியிருக்கிறது. அவர்கள் நிதி கேட்கவில்லை. நிதி அவர்களிடமே இருக்கிறது. ஆனால் அனுமதி தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஆறுமாத காலம் ஆகிவிட்டது. இன்றளவும் அனுமதி வழங்கவில்லை. இதுதான் நிர்வாகத்திலே இருக்கின்ற செயல்பாடு. எனவே, நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கு இந்த அரசால் இயலவில்லை. அதற்குப் பதிலாக விளம்பரத்தைத் தேடிக்கொண்டு ஓர் அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்று எண்ணுகிறது. இது மக்களுக்காகச் செயல்படாத ஓர் அரசாக இருக்கிற காரணத்தினாலே இந்த ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்வதற்கு எங்களாலே இயலவில்லையென்று சொன்னாலும்கூட, இன்றைக்கு ration அரிசி பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. மு.பெ. சாமிநாதன்.



2000 மார்ச் 6]

*** திரு. மு.பெ. சாமிநாதன்:** மாமன்றத்தின் மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த ஒன்றாம் தேதி இம்மாமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்களால் வாசிக்கப்பட்ட உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும், எட்டுத் திசையும் பரந்து கிடக்கும் தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞருக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)*

1996 ஆம் ஆண்டு தமிழக அரசுக்குப் பொறுப்பேற்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த 4 ஆண்டு காலமாக பல மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியதால் இப்போது தமிழகம் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இதில் ஒருசிலருக்குச் சந்தேகம். ஒருசில தலைவர்களோடு சினிமாவில் நடித்ததனால் ஒரு கட்சியைக் கைப்பற்றி, இந்த நாட்டைக் கைப்பற்றி 5 ஆண்டு காலம் சூறையாடியவர்களுக்கும், அவர்களோடு கூட்டு சேர்ந்தவரைக் கண்டித்து ஒரு கட்சியிலிருந்து விலகி தனிக் கட்சி ஆரம்பித்தவர்களுக்கும் நன்கு தெரியும்.

இப்போது எண்ணற்ற சாதனைகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஏழை மக்களின் வீட்டின் அடி நிலத்திற்கு விதிக்கப்பட்டிருந்த வரியை ரத்துச் செய்ததிலிருந்து, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலை நடத்தியது முதல், பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைத்தது, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியில் ஓர் ஊராட்சி மன்றத்தைத் தேர்ந்தெடுத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தியது, அதேபோல, நமக்கு நாமே திட்டத்தைச் செயல்படுத்தியது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்கின்ற திட்டங்களுக்குச் செலவு செய்வதற்காகக் கடந்த ஆண்டு ரூ 50 இலட்சத்தை இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயாக அறிவிக்க இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது இன்னும் பல திட்டங்களை இங்கே நிறைவேற்றி வருகின்றார்கள்.

10 ஆம் வகுப்புவரை படித்த ஏழைப் பெண்களுடைய திருமணத்திற்கு ரூபாய். 10 ஆயிரம் வழங்கி ஏறத்தாழ 3 இலட்சம் பெண்களுடைய

திருமணம் நடத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு நிதியுதவித் திட்டம், ஏழை விதவை மகளுடைய திருமணத்திற்கு நிதியுதவித் திட்டம், கணவனால் கைவிடப்பட்ட பெண்ணுடைய மகளுக்குத் திருமண உதவித் திட்டம், போலி உண்ணாவிரதம் இல்லாமல் காவிரிப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது.

கால்நடைத் துறை மூலமாக கால்நடைப் பாதுகாப்புத் திட்டம். 270 முகாம்களை நடத்தி 9 இலட்சத்திற்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வரும்முன் காப்போம் திட்டம் என்கிற அடிப்படையில் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்களை நடத்தி ஏறத்தாழ 12 இலட்சம் மக்களுக்கு இலவசச் சிகிச்சையும் மருந்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வாழ்வொளித் திட்டம். அரசுப் பள்ளிகளுக்கு கணினிப் பாடத் திட்டம். பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பிளஸ் 2 வரை அரசாங்கப் பேருந்துகளில் செல்ல இலவசப் பேருந்து அட்டை. அதேபோல, பள்ளி மாணவர்களுக்கு பள்ளி இறுதிப் படிப்பு முடிந்தவுடன் சாதிச் சான்றிதழும் வருமானச் சான்றிதழும் வழங்குகின்ற திட்டம்.

உழவர் சந்தை. இப்போது காய்கறிகளைக் குறைந்த விலையில் நுகர்வோர்களுக்கும், அதேபோல விவசாய மக்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கக்கூடிய வகையிலும், உழவர் சந்தை பொதுமக்களிடத்திலே நல்ல வரவேற்பையும், விவசாயிகள் மத்தியிலே நல்ல ஆதரவையும் பெற்றிருக்கிறது.

தூர் வாரும் பணி. எண்ணற்ற ஏரி, குளங்கள் தூர் வாரப்பட்டு, வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டு, கடந்த மூன்று ஆண்டு காலமாக விவசாய மக்களுக்கு அணையிலிருந்து விடப்படுகின்ற தண்ணீர் ஆகட்டும், மழை நீர் ஆகட்டும், முழுமையாகப் பயன்படுகிற அளவிலே தூர் வாரும் பணி சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

60 வயதை அடைந்துவிட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு மாதம் 150 ரூபாய் உதவித் தொகை. மகளிர்களுக்கு சிறு வணிகக் கடன். தொழில் துறையில் இப்போது தமிழகம் முதலிடம். பள்ளி ஆசிரியர்கள் நியமனம். அய்யன் திருவள்ளுவருக்குச் சிலை. கார்கில் போர் வீரர்களுக்கு



உதவுகின்ற வகையில் மத்திய அரசுக்குத் தமிழகம் பல கோடி ரூபாய் வசூல் செய்து அனுப்பியிருக்கிறது.

முற்பகல் 11--05

அடுத்து வயதான ஏழைகளுக்கு மாதம் 150 ரூபாய் உதவித் தொகை; மொழிப் போர் தியாகிகளுக்கு மாதம் 1,500 ரூபாய்; சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு உதவித் தொகை; சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கு மாதம் 5,000 ரூபாய்; அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம்; ஊழல் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்க தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டு இருக்கிறது; 20 ஆண்டு காலத்திற்குமேல் அரசு புறம்போக்கு நிலத்தில் வாழும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டம்—இவற்றையெல்லாம் செய்கின்ற அரசு மக்கள் நல அரசாகத் தெரியவில்லையா? உங்கள் பாணியிலே சொன்னால், 1991--லிருந்து 1995 வரை ஆட்சி செய்த அரசுதான் மக்கள் நல அரசா? டான்சி நில ஊழல், கொடைக்கானல் Pleasant Stay Hotel விவகாரம், வருமானத்திற்கு மீறிய சொத்துச் சேர்த்த வழக்கு—இவைதான் மக்கள் நல அரசாக அந்த 5 ஆண்டு காலம் விளங்கியதா என அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், ஓடைகளிலும் சரி, அதேபோல என்னுடைய தொகுதியிலே ஓடுகின்ற அமராவதி ஆற்றுப் பகுதியிலும் சரி, விவசாயிகள் pump set வைத்து மின் இணைப்புப் பெற்று பயன்படுத்தி வருகின்றார்கள். அவர்களுக்குக் கூடுதல் மின் இணைப்புத் தர வேண்டுமென்றால், வருவாய்த் துறை மூலம் தடையில்லாச் சான்றும், பொதுப் பணித் துறை மூலம் தடையில்லாச் சான்றும் பெற்றுத் தர வேண்டுமென்று மின்வாரிய அதிகாரிகள் கேட்கின்றார்கள். ஆனால், ஏற்கெனவே உள்ள விதிப் பிரகாரம், அந்தத் தடையில்லாச் சான்று பெற முடியாத அளவில் இப்போது விவசாயிகள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்கி, அவர்களுக்குக் கூடுதல் குதிரைத் திறன் கொண்ட மின் இணைப்பு வழங்குகின்ற வகையில் அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மந்தைப் புறம்போக்குகள் ஏராளமான இடங்களில் இருக்கின்றன. அவற்றிலே எண்ணற்ற ஏழைகள், விவசாயத்

தொழிலாளர்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். என்னுடைய தொகுதியிலேகூட, தாராபுரம் வட்டம், குளத்துப்பாளையத்தில், கவுண்டயன்வலசு பகுதியில் மந்தைப் புறம்போக்கு நிலத்தில் பல ஆண்டுக் காலமாக ஏழை மக்கள் குடியிருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தாராபுரம் வட்டம், கிழாங்கொண்டம் கிராமத்தில் 40 ஏழை அருந்ததி மக்கள் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் மந்தைப் புறம்போக்கிலே பட்டா கேட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூலனூர் பேரூராட்சியில் நெடுஞ்சாலைத் துறை நிலத்தில் ஏறத்தாழ 30 ஆண்டுக் காலமாக வாழ்ந்து வருகிற மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா விரைந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; அவர்கள் அடிக்கடி அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு விரைவில் வீட்டுமனைப் பட்டா கிடைக்கின்ற வகையில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லதங்காள் ஓடைத் திட்டம் 1997--98 ஆம் நிதி ஆண்டில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கிணங்க இங்கே அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் 5,000 ஏக்கர் பாசனம் பெறக்கூடிய அளவிலே என்னுடைய தொகுதிக்கு வழங்கப்பட்டது. அந்தத் திட்டத்தையும் விரைந்து செயலாற்றி, முழுமை பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டத்தில் காளிங்கராயன், கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்களைச் சீரமைக்கின்ற பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே குழு அமைக்கப்பட்டு, அது முழுமையாகச் செயல்பட்டது. அதிலே எங்களையெல்லாம்கூட உறுப்பினர்களாக நியமித்து இருந்தார்கள்; அதற்காக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தொகுதி மக்கள் சார்பாகவும், மாவட்ட மக்கள் சார்பாகவும் உரித்தாக்கிக்கொள்கிறேன். அந்த சீரமைப்புக் குழு சிறப்பாகப் பணியாற்றி இந்த ஆண்டு முழுமையாகத் தூர் வாரப்பட்டு, வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டு இருக்கின்றன. அதனால் இந்த முறை விவசாயிகள் முழுமையாகப் பயனடைந்து விவசாயத்தைப் பெருக்கி இருக்கின்ற சூழ்நிலையும் உருவாகி இருக்கின்றது. மேலும் அந்தத் திட்டத்தை முழுமைப்படுத்த, அந்த





வாய்க்கால்களுக்கெல்லாம் சிமெண்ட் பலகைகள், கான்கிரீட் பலகைகள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் அமராவதி ஆற்றிலிருந்து கொழிஞ்சிவாடி, நஞ்சியம்பாளையம் போன்ற பகுதிகளில் தடுப்பணைகள் கட்டி அங்கே வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. அந்த வாய்க்கால்களுக்கும் lining, அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மெட்டூர்—பழங்கானத்து ஒட்டன்சத்திரம் சாலை மற்றும் தாராபுரம் சாலையில் சாலைக்கடை பகுதியிலிருந்து பழனி சாலை சந்திப்பு வரையுள்ள இந்தச் சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தாசாநாயக்கன்பட்டியிலிருந்து ஊதியூர் செல்கின்ற சாலையை இருவழிச் சாலையாக அமைத்து உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மயில்ரங்கம் அருகில் அமராவதி ஆற்றின் குறுக்கே, பாலம் கட்ட வேண்டும்.

அதுபோல் அமராவதி ஆற்றில் ஐயம்பாளையம் அருகில் ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய வெள்ளக்கோவில் தொகுதி ஏழை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்ந்து வரும் பகுதி. அதேவேளையில் வெளியூரிலிருந்து விசைத்தறித் தொழிலை மேற்கொள்வதற்காக எண்ணற்றவர்கள் வருகை தந்து அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். என்னுடைய தொகுதியில் அருந்ததி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களில் வீட்டுமனைப் பட்டாவிற்காக அதிகம்பேர் காத்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் விரைவில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றும் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சி. அன்பரசன்.

முற்பகல் 11--10

***திரு. சி. அன்பரசன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் நான்

உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய டாக்டர் கலைஞர் அவர்கள் மும்முனைப் போராட்டத்தில் வெற்றி பெறுவது என்பது புதிதல்ல. இப்போதும் மும்முனைப் போராட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பது கலைஞரின் பொன்மொழி. மும்முனைப் போராட்டத்தில் வெற்றி என்பது இன்றைய செய்தி. அடுத்த ஆண்டு உதயசூரியனுக்கு முடிசூட்டுவிழா என்பது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வர இருக்கின்ற வரலாறு. அந்த வகையில் அவருக்கும் கூட்டணிக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதியின் வெற்றிக்கு நான் கருவி. அதன் கர்த்தா 7 முறை வெற்றி பெற்று இந்தச் சட்டமன்றத்தில் வீற்றிருந்த திரு. திருநாவுக்கரசு அவர்கள். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தின் வாயிலாக வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிலபேரை நீதிமன்றம் மட்டும் தண்டித்தால் போதாது என்பதற்கு இந்த மும்முனைப் போராட்ட வெற்றியே சான்று. மக்கள் மன்றமும் அந்தக் குற்றவாளிகளைத் தண்டித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் மக்கள் மன்றத்திற்கு என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை கலைஞருடைய ஜீவ மந்திரத்தை எடுத்துக்காட்டுகிறது. மத்திய நிதி வருவாயிலிருந்து 29 விழுக்காடு மாநிலத்திற்குத் தேவை என்பது உரிமைக் குரல். உயர்தனிச் செம்மொழி தமிழை மத்திய ஆட்சிமொழியாக்க வேண்டுமென்பது உரிமைக் குரல். கார்கில் போர் வீரர்களுக்கு நிதி உதவி என்பது நம்முடைய உறவுக் கரம். ஒரிசா வெள்ளச் சேதத்திற்கு நிதி உதவி என்பது நம்முடைய கலைஞர் அரசின் உதவிக் கரம். அந்தவகையில் இந்த அரசு கொள்கைக்காக கோட்டையிலே இருக்கிறதே தவிர வேறொன்றுக்கும் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது என்ற வகையில் இந்த அரசை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னாலே இலக்கிய வரலாற்றிலே தலைசிறந்த படைப்பாளராக இடம் பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு படைப்பாளர் வள்ளுவருக்கு வரலாற்றுச் சிறப்பு





மிக்க சிலையை அமைத்திருப்பது, சர்க்கரைப் பந்தலிலே தேன் மழை பொழிந்ததுபோல் இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மனநிறைவோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் அவருடைய அரசு அனுபவத்தாலும், அரசியல் அனுபவத்தாலும் பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உழவர் சந்தை திட்டம், சமத்துவபுரம் திட்டம் போன்ற திட்டங்கள் அவர் கண்டெடுத்த மாமணிகள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் இப்போது ஓர் ஒன்றியத்திற்கு ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து வசதிகளை உருவாக்கித் தருகின்றீர்கள். அருள்கூர்ந்து அந்தத் திட்டத்தின்கீழ், ஒன்றியத்திற்கு இரண்டு கிராமங்களைத் தேர்வு செய்து வசதிகளை உருவாக்கித் தரவேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதி, கடந்தகால ஆட்சியில், காணாமல்போன ஆட்சியில், திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டது. அதற்குச் சான்று, ஆதிதிராவிட மக்களும், இலங்கைத் தமிழர்களும் வேலை பார்க்கின்ற கூட்டுறவு நூற்பாலை போன ஆட்சியிலே மூடப்பட்டது. அன்றைய சட்டமன்ற உறுப்பினர் அதுபற்றிக் கேட்டபோது, இந்த மாமன்றத்திலே அந்தக் கட்டடம் மண்ணிலே புதைந்துவிட்டதாகப் பதில் சொன்னார்கள். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு முறை சொன்னதைப்போல 'கொடுக்க ஒரு கரம், கொடியவரின் கொடுக்கை நறுக்க மறு கரம்' என்று இரு கரம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆட்சியிலே மூடப்பட்ட நூற்பாலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள். எந்தக் கட்டடம் மண்ணிலே புதைந்துவிட்டது என்று போன ஆட்சியிலே சொன்னார்களோ அதே கட்டடத்தில் இப்பொழுது பணி தொடங்கப்பட்டிருக்கிறது. 250 தொழிலாளர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள். இன்னமும் 250 பேர் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். கருணையுள்ளத்தோடு அந்த 250 பேருக்கும் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11--15

அடுத்து, கடந்தகால ஆட்சியிலே இருந்தவர்களிடம் போராடி ஒரு கரும்பாலையை அன்றைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்

[திரு. சி. அன்பரசன்] [2000 மார்ச் 6

பெற்றார்கள். கடந்தகால ஆட்சியிலே அந்தச் சர்க்கரை ஆலை அறந்தாங்கி தொகுதிக்கு இல்லையென்றாலும் பரவாயில்லை, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது இந்த மாமன்றத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் நீர்வளம் இல்லை, போதுமான கரும்பு இல்லை, அதனாலே சர்க்கரை ஆலை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த ஆட்சியிலே அதனை வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நாளை மறுதினம் அந்த சர்க்கரை ஆலையிலே உற்பத்தி வெள்ளோட்டம் நடைபெறவிருக்கிறது என்பதால் மனநிறைவோடு அவரைப் பாராட்டுகின்றேன்.

எங்களுடைய மாவட்டமும், என்னுடைய தொகுதியும் மிகவும் பின்தங்கிய பகுதி. வானம் பார்த்த பூமி. மழை பெய்தால்தான் விவசாயம் நடக்கும். அப்படிப்பட்ட ஆவுடையார்கோவில், அறந்தாங்கி ஆகிய பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளையும், ஏந்தல்களையும் செப்பனிட வேண்டும். அங்கே ஏராளமான ஏரிகள் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலே உள்ளன. அவற்றிற்குப் போதிய நிதிவசதி ஆண்டுதோறும் கிடைப்பதில்லை. ஆகவே ஒரு சிறப்பு திட்டத்தின்கீழ் அந்த ஏரிகளைத் தூர் எடுப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கலைஞர் ஆட்சியிலே ஜகதாப்பட்டணத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் வழங்கப்பட்டு அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குக் கட்டட வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீமிசல் பகுதியில் ஒரு Sub-Registrar அலுவலகம் இருக்கிறது. அதற்கும் கட்டட வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகவும் பின்தங்கிய பகுதியான மணமேல்குடியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டும். ஒரு தலையாய கோரிக்கை. எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரே ஒரு மகளிர் கல்லூரியும், இன்னொரு கல்லூரியும் மட்டும் இருக்கின்றன. அறந்தாங்கி தொகுதியில் ஒரு புதிய Arts and Science கல்லூரியை வருகிற ஆண்டிலே ஆரம்பிப்பதற்கு உதவ வேண்டும். பேராவூரணி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய பகுதிகளுக்கு எந்தக் கல்லூரியும் இல்லை என்ற காரணத்தாலே அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) விரைவில் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



2000 மார்ச் 6] [திரு. சி. அன்பரசன்]

டாக்டர் கலைஞர் அவர்கள், வெறும் தபால்காரர்களாக இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி நிதி 50 இலட்சம் ரூபாயை வழங்கி இருக்கிறார்கள். தொடர்ந்து 60 இலட்சமாக அதை உயர்த்தித் தருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் தாயுள்ளம் கொண்டவர்கள். அவர் கொடுத்துக் கொடுத்துப் பழக்கப்பட்டவர். அதுவும் அறந்தாங்கி தொகுதிக்குக் கொடுப்பதையே அவர் பழக்கமாகக் கொண்டிருந்த காரணத்தால்தான், அவர் எனக்கு இந்த வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறார். இந்த மாமன்றத்தின் மூலம் மீண்டும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய அன்பிற்குரிய திருநாவுக்கரசு அவர்களுக்கும், வாக்காளர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன், நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

முற்பகல் 11-20

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000 ஆண்டு ஆளுநர் ஆற்றிய உரையின்மீது புதிய தமிழகம் கட்சியின் சார்பாக கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து நான் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த இடைத் தேர்தலிலே ஆளும் கட்சி கூட்டணி 3 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறது. வெற்றி பெற்று இந்த மாமன்றத்திலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய அந்த உறுப்பினர்களை வாழ்த்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேசமயத்தில், புதிய தமிழகம் கட்சியினுடைய சார்பாக வேட்பாளர்களை நிறுத்தி, 3 தொகுதிகளிலேயும் நான் பிரச்சாரத்திற்குச் சென்றபோது பல வேதனைக்குரிய நிகழ்ச்சிகளை என்னால் காண முடிந்தது. ஆயிரக்கணக்கான கிராமப்புறங்கள், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய கிராமப்புறங்கள் இன்னும் குடிக்கத் தண்ணீர் வசதி இல்லாமல், சாலை வசதி இல்லாமல், பள்ளிக்கூட வசதி இல்லாமல் இருக்கின்றன.

அறந்தாங்கி தொகுதியில் ஆவுடையார்கோயில் பகுதியிலே 8 கிலோமீட்டர், 10 கிலோமீட்டர்கூட நடந்து செல்ல வேண்டிய எண்ணற்ற கிராமங்களை நான் காண முடிந்தது. அதேபோல கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் பகுதியிலே எண்ணற்ற ஆதிதிராவிட மக்கள் வாழக்கூடிய கிராமங்களுக்கு சுடுகாட்டுப் பாதை இல்லாமல் அல்லல்படக்கூடிய நிலையை நான் கண்டேன். அதேபோல, 2 சென்ட், 3 சென்ட்,

நிலம்கூட சொந்தம் இல்லாமல்—வீடு என்பது வேறு—வீட்டுமனைப் பட்டாகூட இல்லாமல் ஒரு சென்ட் நிலத்திலே 4 குடும்பங்கள், 5 குடும்பங்கள் என்று நகர்ப்புறங்களிலே அல்லல்படுவதைப்போல கிராமப்புறங்களிலேயும்கூட அல்லல்படக்கூடிய அந்த நிலையை நான் கண்டு வேதனையுற்றேன். இதையெல்லாம் நாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு இந்த மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும். அதேபோல, கிராமப்புறங்களிலே மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு சாலை வசதி செய்து தருவதுடன் Ration card இல்லாமல் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு ration card வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையிலே அரசியல் சாசனம் திருத்தப்படுகின்றபோது மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே தமிழ்நாடு அரசு, அரசியல் சாசனத் திருத்தத்தை லேசாக எடுத்துக் கொண்டிருக்கிறதோ என்று நான் கருதுகிறேன். இப்போது மத்தியில் இருக்கக்கூடிய அரசு அரசியல் சாசனத்தைத் திருத்துவது ஓர் உள்நோக்கம் கொண்டது என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. இது வரையிலும் மதச்சார்பற்ற நிலையில்—Secular—இருக்கக்கூடிய மத்திய அரசை, ஒரு மதச்சார்புடைய அரசாக மாற்றுவதற்குண்டான அடிப்படை வேலைதான் இப்போது அவர்கள் தொடங்கியிருக்கக்கூடிய பணி என்று நான் கருதுகிறேன். எனவே, இதை இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கடுமையாக எதிர்க்க வேண்டிய நிலையில், மெல்லிய தொனியில் வெறும் மாநில சுயாட்சியை மட்டும் வலியுறுத்தி இருப்பது ஏற்புடையது ஆகாது என்பது புதிய தமிழகம் கட்சியின் கருத்து என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், மாற்றத்திற்கு உட்படாதது, நாட்டிலே, உலகத்திலே எதுவும் கிடையாது. ஆனால், நல்ல நோக்கத்தோடு அரசியல் சாசனம் மாற்றப்பட வேண்டும். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய வாழ்நாளிலே தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை மக்கள், எளிய மக்கள், உண்மையான அரசியல் அதிகாரம் பெற separate electorate, தனி வாக்காளர் ஓட்டெடுப்பு முறை வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி, போராடி வந்தார்கள். ஆனால், காந்தியடிகள் தொடர்ந்து பூனா சிறையில், எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்ததன் விளைவாக, பூனாவிலே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக, தனி வாக்காளர் ஓட்டெடுப்பு முறையைக்





கைவிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். எனவே, தனி வாக்காளர் ஓட்டெடுப்பு முறையை இந்த அரசு வலியுறுத்த வேண்டும் என்ற கருத்தை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் தொடர்ச்சியாக, கடந்த நான்கு வருடங்களாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு பற்றி...

*முற்பகல் 11--25*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணல் அம்பேத்கருடைய கருத்தை வலியுறுத்த வேண்டுமென்று சொல்கிறார். மாற்றுகின்ற முயற்சி நடைபெற்றால்தானே அதை வலியுறுத்த முடியும்? மாற்றுவதையே கூடாது என்று சொல்லிவிட்டு, மாற்றுகின்ற முயற்சி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, பிறகு அதிலே இந்தத் திருத்தத்தை நீங்கள் சேர்க்க வேண்டுமென்று கூறுவது எப்படிப் பொருத்தமாகும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்தார்கள். அந்தக் குழுவின் அறிக்கை தயாராகி, அரசிடத்திலே இருக்கிறது. கடந்தகால அரசு போட்ட அறிக்கைகளையெல்லாம் வெளியிடக்கூடிய அரசு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்ன காரணத்தினால் அந்த அறிக்கையை வெளியிடாமல் வைத்திருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. தமிழ்நாடு அரசு வெளியிடாத காரணத்தினாலே--பல அமைப்புகள் வெள்ளை அறிக்கை என்ற பெயரிலே--இப்பொழுது தலித் தகவல் ஒருங்கிணைப்பு என்ற ஓர் அமைப்புகூட கடந்த மாதத்திலே ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் எழுப்பிய சந்தேகத்தை அலட்சியப்படுத்துகிறாரா அல்லது அது தேவையில்லை என்று வேறு கருத்திற்குச் செல்கிறாரா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார். நான் மோத வேண்டாம் என்றுதான் பேசாமல் இருந்தேனே தவிர, வேறு நோக்கம் அல்ல. Everything is changing except the law of change—எல்லாமே மாறுகின்றன; மாறும் என்ற விதியைத் தவிர என்ற கருத்து

கொண்டவன் நான். ஆகவே, அரசியல் சாசனம் மாறுதலுக்கு உட்பட வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், அரசியல் சாசனத்தை மாற்றக்கூடியவர்கள் வேறு ஒரு நோக்கம் கொண்டிருக்கிறார்கள். அந்த நோக்கம் இல்லாமல், உண்மையாகவே இந்திய மக்களுடைய வாழ்விலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு மாற்றப்படுகின்றபோது நான் வலியுறுத்திய கருத்தும் சேர்க்கப்பட வேண்டும் என்றுதான் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வெள்ளை அறிக்கையைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். வெள்ளை அறிக்கை குறித்து தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே ஓர் அதிருப்தி இருக்கிறது. தமிழ்நாடு அரசு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவைப் போட்டு, அந்த அறிக்கையைத் தயார் செய்து, அந்த அறிக்கையைத் தொடர்ந்து ஏன் அரசு வைத்திருக்க வேண்டும்? அந்த அறிக்கையை வெளியிட வேண்டும் அல்லவா? அப்பொழுதுதான் உண்மை நிலை தெரியும். ஏனென்றால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட்டுவிட்டன என்று சிலபேர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே கடந்த 50 ஆண்டு காலமாக அவர்களுக்கு அளித்த சலுகைகளெல்லாம் போய்ச் சேரவில்லை என்ற ஒரு யதார்த்தமாவது, இந்த மக்களுக்கும் இதை வைத்துப் பிரச்சாரம் செய்பவர்களுக்கும்—எல்லோருக்கும் தெரிய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் வலியுறுத்துகிறேன். எனவே, வரக்கூடிய நிதிநிலை அறிக்கை தொடரிலாவது, இந்த அரசு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கையை வெளியிடும் என்று நான் நம்புகிறேன். அதேபோல, கடந்த 2000 ஆண்டுகளாக, பிறவியிலே உயர்வுதாழ்வு கற்பிக்கப்பட்ட, மனுதர்ம அடிப்படையிலேதான் இந்த நாட்டிலே சாதிகள் பிரிந்து கிடக்கின்றன. நாமெல்லாம் பிரிந்து கிடக்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** 1995-லேயிருந்து 2000 வரையிலும், பல சாதி மோதல்கள் நடந்தன. இதிலே தாழ்த்தப்பட்டவர்கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் நடந்த மோதல்களுக்குக் காரணமானவர்கள்





அல்ல. அந்த அடிப்படையிலே 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் தேதி வீரசிகாமணியிலேயிருந்து, 2000 வரையிலும் நடந்த சாதி மோதல்களிலே ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள்மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அது தனி மோதல் வழக்குகள். அரசால் போடப்பட்ட வழக்குகள். அதனாலே எண்ணற்றவர்கள் அவதியுற்றுக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசு போட்ட வழக்குகள் உட்பட அனைத்து வழக்குகளையும் மனிதாபிமான அடிப்படையிலே இந்த அரசு வாபஸ் பெற வேண்டும். கடந்த சில மாதங்களுக்கு முன்பு அரசு அறிவித்த 'வழக்குகள் வாபஸ் பெறப்படும்' என்ற உத்தரவாதத்தால் முழுமையான பலன் பெற முடியவில்லை. அதுவும், 1995--96--லேதான் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உரையை முடித்துக்கொள்ளுங்கள். பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்து, கொடியங்குளம் சம்பவம். கடந்த ஆட்சியிலே 1995-லே ஒரு கிராமமே சூறையாடப்பட்டதை நாமெல்லாம் அறிவோம். ஆனால், அதற்காகப் போடப்பட்ட Commission அதை விட்டுவிட்டு, வேறு சில விஷயங்களைச் சுட்டிக் காட்டியதை நாமெல்லாம் அறிவோம். அந்த மக்களுக்கு இன்று வரையிலும் நட்டஈடு கிடைக்கவில்லை. மாறாக, அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளால் அவர்களும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் அந்த வழக்குகளிலேயிருந்து விடுதலை செய்வதற்கு அரசு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்றும், அதேபோல, தனியாக அதற்கு ஒரு குழுவை அமைத்து, அந்த மக்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கும் இந்த அரசு உத்தரவிட வேண்டுமென்றும் வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அடுத்து, திரு. குழந்தை தமிழரசன்.

முற்பகல் 11--30

***திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டினுடைய முதல் ஆளுநர் உரைக்கு நன்றி

தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, பேருரையை வரவேற்று ஒரு சில கருத்துகளை நான் சொல்ல விழைகிறேன். மக்கள் நலத் திட்டங்களை உள்ளடக்கி மிக அற்புதமாக தமிழகத்திலே ஆட்சி செய்து வரும் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டங்களை இந்த ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கே எனக்கு முன்பாகப் பேசிய உறுப்பினர் ஒருவர் இது மக்கள் விரோத அரசு என்று குறிப்பிட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கிற இந்த ஆட்சி மக்கள் நலனிலே அக்கறைகொண்ட அரசு என்பதை இந்த மன்றத்திலே நான் பதிய வைக்க விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இதை நான் பதிய வைப்பதற்குக் காரணம் நடந்து முடிந்த மூன்று இடைத்தேர்தல்களிலேயும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, கலைஞருடைய அரசு மக்கள் விரோத அரசு அல்ல, இது மக்கள் நலனிலே அக்கறை கொண்ட அரசு என்பதை நிரூபிக்கும் வகையில் மக்களே தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றமும் அறியும், இந்த நாட்டு மக்களும் அறிந்திருக்கிறார்கள். நடந்து முடிந்த மூன்று இடைத் தேர்தல்களிலும்—நெல்லிக்குப்பத்திலே ஏறக்குறைய 17,000 வாக்குகள் வித்தியாசத்திலும், திருச்சியிலே 19,000 வாக்குகள் வித்தியாசத்திலும், அறந்தாங்கியிலே 26,000 வாக்குகள் வித்தியாசத்திலும், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதனுடைய தோழமைக் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கு மக்கள் தீர்ப்பு தந்ததிலேயிருந்து இது மக்கள் விரோத அரசு அல்ல, இது மக்கள் நலன் காக்கக்கூடிய அரசு என்பது தெளிவாக இந்த நாட்டுக்குப் புரிந்திருக்கிறது என்பதை நான் பதிய வைக்க விரும்புகிறேன். எனவே, எப்படி இந்த ஆட்சி, மக்கள் விரோத அரசாக இருக்க முடியும் என்று நான் இங்கே கேட்க விரும்புகிறேன். ஏறத்தாழ பல கோடி ரூபாய் செலவிலே தமிழ்நாட்டிலே கடந்த 4 ஆண்டுகளிலே சாலைகளைச் சீரமைத்திருக்கிறோமே, அது மக்களுக்கு விரோதமா? நாற்பதாயிரம் ஆசிரியர்களை தமிழகத்தினுடைய பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் ஊழலுக்கு இடமில்லாமல் நியமனம் செய்திருக்கிறோமே, அது மக்களுக்கு விரோதமா? சாதாரண குடிசைகள் இருக்கிற இடங்களில்கூட சிமெண்ட் சாலைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறோமே அது மக்களுக்கு விரோதமா? ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது, எல்லா இடங்களிலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும் என்று முதல்வர் கலைஞர் ஆணையிட்டு ஏறத்தாழ 700 ஆரம்பப்



பள்ளிக்கூடங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் திறக்கப்பட்டு இருக்கின்றனவே அது மக்களுக்கு விரோதமா? பல கோடி ரூபாயிலே 106 பாலங்களை தமிழகத்தினுடைய போக்குவரத்தைச் சீர் செய்வதற்காகக் கட்டிக் கொண்டிருக்கிறாரே கலைஞர் அவர்கள், இது மக்களுக்கு விரோதமான காரியமா? வாய்க்கால்களில் தூர் வாரிய காரணத்தினால் இந்த வருடம் மழை பெய்த நேரத்திலே எந்தவிதமான இடர்பாடுகளும் இல்லாமல் இந்த நாட்டு மக்கள் காப்பாற்றப்பட்டார்களே இது மக்களுக்கு விரோதமான காரியமா? ஏரிகளை ஆழப்படுத்தி இருக்கிறோம். 65,000--க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் பல மேம்பாலங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். முதல்வர் அவர்கள் நேற்றுக்கு முந்தைய நாள்கூட சிங்காரச் சென்னையாக மாற்றுவதற்கு, குப்பைகளை அகற்றுவதற்காகப் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். பெண்களுக்காகப் பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற 666 பள்ளிக்கூடங்களில் கணினிப் பாடத் திட்டத்தை ஏழை மக்களும் பயன்பெறுகிற அளவிற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இப்படி எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி, தமிழக மக்களுக்கு நலன் பயக்கக்கூடிய திட்டமாக தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்து அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசை மக்கள் விரோத அரசு என்று கூடா நட்பு காரணமாகச் சொல்கிறார்களோ என்று நினைத்து நான் வேதனைப்படுகிறேன். அதுதான் காரணமாக இருக்கும். இடைத் தேர்தலுக்கு முன்பாகவே தமிழகத்திலே மாண்புமிகு ஐயா மூப்பனார் அவர்கள் ஒரு கேள்வியை வைத்தார்கள். அது என்ன கேள்வி என்றால், இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு நாங்கள் கொடுக்கிற Notice என்று சொன்னார்கள். ஆனால் இடைத்தேர்தலுக்குப் பின்பாக முதல்வர் அவர்கள் அதற்குப் பதில் கொடுக்கிறபோது, இதை வீட்டுக்கு அனுப்புகிற Notice என்று சொன்னார்கள், ஆனால் நீங்கள் நாட்டிலேயே இருங்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள் தமிழக மக்கள் என்று அதற்குப் பதில் கொடுத்தார்கள். எனவே, கூடா நட்பின் காரணமாக இது மக்கள் விரோத அரசு என்று சொல்வதைக் கைவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து transparency -உடைய ஆட்சி அல்ல என்பதைப் போன்ற ஒரு வாதத்தை இங்கே வைத்தார்கள். Tender கோருவதிலேயிருந்து, எந்த

[திரு. குழந்தை தமிழரசன்] [2000 மார்ச் 6

அறிவிப்பாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிகளை மதிப்பதாக இருந்தாலும் சரி, அதேபோன்று செய்தித்தாள்களிலே ஒரு செய்தி இந்த அரசினுடைய குறைகளைச் சுட்டிக்காட்டி வந்தாலும் சரி அவற்றை உடனடியாக உரிய அதிகாரிகளிடம் சொல்லி, அந்தக் குறைகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கிற ஒரு முதல்வராக, ஓர் ஆட்சியாக இந்த அரசு இருக்கிறது. எனவே, ஒளிவுமறைவு இல்லாமல் நேர்மையான ஓர் ஆட்சியை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் மக்களுடைய, தமிழ் அறிஞர்களுடைய ஒரு கனவை நனவாக்குவதற்காகத்தான் தமிழ் ஆட்சி மொழியை ஒன்றாம் வகுப்பிலே இருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயில வேண்டும் என்கிற ஒரு நிலையை இப்போது அரசாணையாக வெளியிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11--35

சமீபத்திலே, 'சாகித்ய அகாடமி' விருது பெற்ற அப்துல் ரகுமான் என்கிற கவிஞன் "தமிழிடம் அதன் முகவரி கேட்டேன், மேற்பார்வை மு. கருணாநிதி என்றது" என்று குறிப்பிட்டிருக்கிறான். அப்படியானால், தமிழுக்கு யார் என்று நான் தமிழைக் கேட்டால், அவர்தான் மு. கருணாநிதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் ஆய்ந்து சிந்தித்து, ஒன்றுமுதல் ஐந்தாம் வகுப்பு வரையில், தமிழகத்திலே இருக்கிற பள்ளிக்கூடங்களிலே, தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற ஓர் ஆணையை, தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதைச் சிலபேர் அரசியல் காரணமாக எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே தமிழ்வழிக் கல்வியைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக தாய் மொழியிலே கல்வி பயில வேண்டும் என்பது குறித்து, இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது உத்தமர் காந்தியடிகள், ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அவர் என்ன குறிப்பிட்டார் என்றால், எனக்கு ஒரு சர்வாதிகார அதிகாரம் இருக்குமேயானால், மாணவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே பயில வேண்டும் என்று ஆணையைப் பிறப்பிப்பேன். அந்த ஆணையை நிறைவேற்ற ஆசிரியர்கள் தயங்குவார்களேயானால், அவர்களையெல்லாம் வேலையைவிட்டு வீட்டிற்கு அனுப்பி வைப்பேன் என்பது உத்தமர் காந்தியடிகள் சொன்ன வரிகள் ஆகும். அதேபோன்றுதான், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்



2000 மார்ச் 6] [திரு. குழந்தை தமிழரசன்]

'Nehru and the Language Problem' என்ற நூலிலே தாய்மொழிதான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். இதே மன்றத்தில் இராஜாஜி அவர்கள் 'தமிழிலே படிப்பது என்பது தாய்ப்பாலைப் புகட்டுவது போல; வேறு மொழியிலே படிப்பது என்பது, புட்டிப்பாலைப் புகட்டுவது போல' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று இந்திய நாட்டினுடைய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, 'Terms of Reference' குறிப்பிடப்பட்டு, அவரிடம் ஓர் அறிக்கை கேட்கப்பட்டது. அதிலே தாய்மொழியிலேதான் கல்வி இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார். அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே இருமொழிக் கொள்கையை அறிவித்து உரையாற்றுகிறபோது, இந்தியாவிலே இருக்கிற ஆங்கிலம் எதையெதையெல்லாம் சாதிக்குமோ, அதற்குப் பதிலாக எந்த மொழி சாதிக்கும் என்று கேட்டால், தமிழ்மொழிதான் சாதிக்கும், சாதிக்கும் என்று நான் அடித்துச் சொல்வேன் என்று இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, நீண்ட நாள் கோரிக்கை இப்போது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அறிக்கையிலே அரசியல் நடத்திக் கொண்டிருக்கிற சில பேர், இதற்கும் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். 'இந்தி புகுந்துவிடும்' என்று தெரிவித்திருக்கிறார்கள். எப்படி இந்தி புகுந்துவிடும்? 14 வயதிலே, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழ்நாட்டு வீதிகளிலே கொடி பிடித்துப் போராட்டம் நடத்திய தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தாலே இந்தி நுழைந்துவிடுமானால், இந்தி ஆதிக்கம் புகுந்துவிடுமானால், அதை அவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்களா? எந்தவிதத்திலும் எந்தச் சூழ்நிலையிலும், தமிழ் மொழியைத் தன்னுடைய உதிரத்தோடு கலந்துகொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்கள், தமிழ் மொழியைக் காப்பாற்றத்தான் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே, இதிலே எந்தவிதமாகவும் மாற்றுக் கட்சியினர் அரசியல் செய்ய வேண்டாம் என்று அன்போடு இந்த மன்றத்திலே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

அய்யன் திருவள்ளுவரின் சிலையை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து எல்லோரும் பேசியிருக்கிறார்கள். அந்தச் சிலையைத் திறந்த நேரத்திலே அங்கே

[திரு. குழந்தை தமிழரசன்] [2000 மார்ச் 6

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். பெயருடன் கூடிய கல்வெட்டை எடுத்துவிட முயற்சித்தார்கள்; எடுத்துவிட்டார்கள் என்ற ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். அதற்கு முதல்வர் அவர்களும் பதில் சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 'வள்ளுவர் கோட்டம்', தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்தார்கள். கலைஞர் அவர்களுடைய சிந்தனையிலே அது உதித்தது. அந்த 'வள்ளுவர் கோட்டம்' திறப்பு விழாவின்போது, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு ஓர் அழைப்பைக்கூட அன்றிருந்த ஆட்சியாளர்கள் அனுப்பவில்லை. அங்கே அவர் அடிக்கல் நாட்டிய அந்தக் கல்வெட்டைக்கூட தூரத்திலே தூக்கி எறிந்து விட்டார்கள். அப்படி கலைஞர் அவர்களை வெறுத்துச் செய்தாலும், அவரேதான் வள்ளுவருக்கு எந்தக் கை விரல்களால் சிலையைச் செதுக்குவதற்கு உளியை எடுத்துக்கொடுத்து செதுக்க வைத்தார்களோ, அதே விரல்களால்தான் இப்போது அந்தச் சிலையையும் திறந்து வைத்திருக்கிறார்கள். எனவே, எவருடைய பெயரையும் எடுக்க வேண்டும் என்பதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறியாக இருக்கமாட்டார்கள். எல்லோரும் நலமாக இருக்க வேண்டும்; எல்லோருடைய பெயரும் இருக்க வேண்டும் என்பதிலேதான் குறியாக இருப்பார்கள் என்பதை நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

இங்கே உழவர் சந்தையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, ஒருசிலர் உழவர் சந்தை என்பது எங்கேயோ இருந்து copy அடிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். உழவர் சந்தை என்பது எங்கே இருந்தும் copy அடிக்கப்படவில்லை. ஆனால் அப்படியே இருந்தாலும்கூட, அடுத்த மாநிலங்களிலே நல்ல திட்டம் இருந்தால் அந்தத் திட்டங்களை இன்னொரு மாநிலத்திலே அறிமுகப்படுத்துவது என்பது ஏற்புடையதுதான். நல்ல திட்டமாக இருந்தால், மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய திட்டமாக இருந்தால், அதை ஏற்றுக்கொள்வதிலே எந்தவிதமான தவறும் இல்லை. இதுவரை இங்கே தொடங்கப்பட்டிருக்கிற 22 உழவர் சந்தைகளிலும் 7½ கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுடைய விளைபொருள்கள் விற்பனையாகி இருக்கின்றன. நுகர்வோர்களுக்கும் விவசாயிகளுக்கும் நேரடியான தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிற முறையிலே, இந்த உழவர் சந்தையும் மிகச் சிறப்பான முறையிலே தமிழ்நாட்டிலே விளங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப் பல திட்டங்களை உள்ளடக்கி இருக்கிற இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



2000 மார்ச் 6] [திரு. குழந்தை தமிழரசன்]

தொகுதியைப் பற்றி கோரிக்கைகள். பெண்களுக்காக ஒரு காவல் நிலையத்தை விருத்தாசலத்தில் அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்திலே இருக்கின்ற கல்லூரி மாணவர்களுக்கு, ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டு, ஆளுநர் உரையை வரவேற்று அமைகிறேன்.

*முற்பகல் 11--40*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புத்தாயிரம் ஆண்டிலே மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாகப் பேசுவதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். புத்தாயிரம் ஆண்டில் நிகழ்த்தப்பெறுகின்ற உரை என்பதால் புதிய திட்டங்கள் நிறைய இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி நிறைய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லையென்பதை, முன்னுரையாக நான் இங்கே முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த கால நிகழ்வுகள் எல்லாம் போற்றத் தகுந்தவையென்றாலும்கூட, அதுவே நிகழ்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் உகந்ததாக ஆகிவிடாது என்று நான் இங்கே கூற விரும்புகிறேன்.

முதலிலே, நம்முடைய மாநிலத் தலைநகர் சென்னைக்கு வர வேண்டிய கிருஷ்ணா நதி நீரைப்பற்றி எங்களுடைய பொதுச் செயலாளரும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினருமாகிய திரு. அழகிரி அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்களும் நீண்ட ஒரு விவாதத்தினை சென்ற வெள்ளிக்கிழமை இங்கே நடத்தினார்கள். குறிப்பிட்ட தூரத்திற்கு வாய்க்காலே வெட்டப்படவில்லை. அப்படியே தண்ணீர் வந்தாலும், அது பெண்ணையாற்றுத் தண்ணீர்தான் என்று பல செய்திகள் பேசப்பட்டன. அது எவ்வாறாக இருப்பினும், என்னுடைய மாவட்டத்திலே இருக்கின்ற பூண்டி ஏரிக்குச் சென்று நான் பார்த்தபோது அந்த வாய்க்காலினுடைய முகப்பிலே, எந்த ஆற்றுத் தண்ணீரும் வரவில்லையென்பதுதான் உண்மை. பூண்டியின் வாய் வறண்டு தவிக்கிறது. ஆகவே, உண்மை நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போது பூண்டிக்குப் போய்ப் பார்த்தார்கள்?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இரண்டு வாரங்களுக்கு முன்பு நான் அங்கே போய்ப் பார்த்தேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு வாரத்திற்கு முன்னாலே தண்ணீர் நிறுத்தப்பட்டு அங்கு பழுதுபார்ப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, தண்ணீர் வராத காலத்திலே போய்ப் பார்த்திருக்கிறார்கள். அதனால் தண்ணீர் வருகிற காலத்திலே சொல்கிறேன், போய்ப் பார்க்கட்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இரண்டு வாரங்களுக்கு முன்புதான் நான் பார்த்தேன் என்று சொன்னேன். உண்மையிலேயே அங்கே அந்தக் கால்வாய் வறண்டு கிடக்கிறது. ஆகவே, இதைப் பற்றிய உண்மை நிலை என்ன என்பதிலே நம்முடைய சென்னை மாநகர மக்களிடையே பெரிய குழப்பம் இருக்கிறது. எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. அழகிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு கூட்டுக் குழுவை அழைத்துக்கொண்டு, அதைப் பார்வையிட்டால் இந்தக் குழப்பங்கள் தீரும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்பற்றி ஒரு வெள்ளை அறிக்கையையும் இந்த மாமன்றத்தில் வைக்க நான் வலியுறுத்த வி ம்புகிறேன். ஏனென்றால், கிருஷ்ணா நதி நீர் என்பது சென்னை மாந த்திற்குக் கிடைத்திருக்கிற மிகப் பெரிய அரிய வரப்பிரசாதம் என்று பல்வேறு தருணங்களிலே கடந்த கால அரசும், இந்த அரசும் குறிப்பிட்டிருக்கின்றன. ஆகவே, அதனுடைய உண்மை நிலையை அறிவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வெள்ளை அறிக்கை அளிப்பதன் மூலமாக இந்தக் குழப்பம் நிச்சயமாக நீங்கப்பெறும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து மத்தியிலே ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற B.J.P. அரசு தங்களுடைய மறைமுகமான திட்டங்களை, மதச்சார்பின்மைக்கு எதிரான திட்டங்களை, சிறுபான்மை மக்களுக்கு எதிரான திட்டங்களை, வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது என்று நாங்கள் நினைக்கிறோம்.

குஜராத் அரசில் பணியாற்றுகின்ற மாநில அரசு ஊழியர்கள் R.S.S. இயக்கத்திலே பங்குபெறலாம் என்று அங்கே விதியினைப் புகுத்தியிருக்கிறார்கள். அதை எதிர்த்து, மத்தியில் B.J.P. அரசில்



பங்குபெற்றிருக்கின்ற தெலுங்கு தேசம், மம்தா பானர்ஜியினுடைய திரிணாமூல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் மிகப் பெரிய எதிர்ப்பைத் தெரிவித்து அங்கே ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சமூக சீர்திருத்தக் கொள்கையின்பால் பற்றும் பாசமும் கொண்டவர்கள் என்பதை எல்லோரையும்விட நாங்கள் சிறப்பாக உணர்ந்திருக்கின்றோம். நீண்ட நெடிய வரலாற்றுக்குச் சொந்தமாக இருக்கின்ற முதல்வருடைய வரலாற்றிலே, B.J.P.-யினுடைய உறவு ஒரு கறையை ஏற்படுத்திவிடுமோ என்று அச்சம் நடுநிலையாக இருக்கின்ற அத்தனை பேருக்கும் இருக்கிறது. தந்தை பெரியார் அவர்களின் கொள்கையின்பாலும், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பாடலின்பாலும் மிகுந்த பற்றுள்ளவராக இருக்கின்ற முதலமைச்சர் அவர்களுடைய வரலாறு B.J.P.-யினுடைய உறவின் காரணமாக எங்கே பழுதுபடுமோ என்ற அச்சம் அவரை • நேசிக்கின்ற அத்தனை பேர் மத்தியிலும் இருக்கிறது. மதவாதசக்திகளுக்கு எதிராகத் தங்கள் எதிர்ப்பினை உளப்பூர்வமாக நாடாளுமன்றத்திலும், வெளியிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படுத்த மறுக்கிறது என்பது உண்மை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குஜராத் பிரச்சினை ஒரு மாநிலப் பிரச்சினை. ஒரு மாநிலப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டுமென்று வற்புறுத்துவதை கொள்கை ரீதியாக நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? அப்படியானால் எல்லா மாநிலப் பிரச்சினைகளிலும் மத்திய அரசு தலையிடலாம் என்று சொல்கின்றீர்களா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காஷ்மீர் சட்டமன்றத்திலே, குஜராத் அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டுமென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதேபோல நம்முடைய அரசாங்கமும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11--45*

**•மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, சபையிலே தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றி நானே பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றேன். R.S.S. பிரச்சினை எல்லா இடங்களிலும் பரவிவிடாத அளவிற்கு, அரசு

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மார்ச் 6

இப்பொழுதே அரசு ஊழியர்கள் சேருவதற்குத் தடையில்லை என்றிருப்பதை குஜராத் அரசு மாற்ற வேண்டும். நீங்கள் அதற்கு யோசனை சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். யோசனை சொல்ல வேண்டும் என்றுதான் மத்திய அரசிற்குச் சொல்லலாமே தவிர உத்தரவிட வேண்டும் என்று மத்திய அரசிற்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சொன்னால், பிறகு நம்முடைய மாநில அரசுக்கு எப்போதும் ஆபத்து வரும். மத்திய அரசு மாநில அரசு மீது தாக்குதல் செய்யலாம், உத்தரவிடலாம் என்றால் மாநில உரிமைகள் என்ன ஆவது என்பதுதான் எனக்குள்ள சங்கடம்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இந்து பத்திரிகையிலே ஒன்று வந்திருக்கிறது .... *(குறுக்கீடு)*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, மாநில அரசுக்கு உத்தரவிட முடியாது. அது உண்மை. ஆனால், மத்தியிலேயும் B.J.P. தான் ஆளுகிறது. குஜராத்திலும் B.J.P. தான் ஆளுகிறது. அந்த மாநிலத்தினுடைய உள் துறை அமைச்சர் ஹெரன் பாஸ்டே என்பவர் இரண்டு தினங்களுக்கு முன்பு எங்களுடைய கட்சி மேலிடம் இதுவரையில் இதை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவில்லை, கேட்டுக்கொண்டால், நாங்கள் வாபஸ் பெற்றுக்கொள்வதற்குத் தயார் என்று சொல்லியிருக்கிறார். எனவே B.J.P. தலைமை, அவர்கள் கட்சி ஆளுகிற அ... ஆட்சிக்கு ஆணையிட்டு, அதை வாபஸ் பெறவேண்டும் என்று ஏ... சொல்லவில்லை?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, மிக நேர்த்தியாக நான் சொல்ல வேண்டிய பதிலை அவரே சொல்லி இருக்கிறார். ஆகவே, இது கட்சித் தலைமை ஈடுபட வேண்டிய விவகாரம், மத்திய அரசு ஈடுபடக்கூடிய விவகாரம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் விளக்கியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கட்சித் தலைமை ஈடுபட வேண்டும் என்ற அந்த யோசனையை நான் நேரடியாகவும், கடிதம் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் தெரிவிக்க வேண்டியவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். கட்சித் தலைமை ஈடுபடுவது வேறு, மத்திய அரசு ஈடுபட்டு, ஒரு மாநில அரசுக்கு உத்தரவிடுவது வேறு. அந்தப் பழக்கத்தை நாம் இப்போது ஏற்படுத்தினால், பின்னால் எல்லா மாநிலங்களுக்கும் ஓர் ஆபத்து உருவாகும்.



2000 மார்ச் 6]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, R.S.S. விஷயத்திலே முதலமைச்சருடைய உள்நோக்கத்தை நாங்கள் சந்தேகிக்கவில்லை. நாங்கள் நம்புகிறோம். மிக உறுதியாக நம்புகிறோம். அவர் அந்த விஷயத்திலே எதிராக இருப்பார் என்பதை நாங்கள் நம்புகிறோம். ஆனால், நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சினை வந்தபொழுது தெலுங்கு தேசம் கட்சியைச் சார்ந்த திரு. எர்ரா நாயுடு அவர்கள் மிகக் கடுமையாகப் பேசிய அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக தன்னுடைய பங்கை நாடாளுமன்றத்தில் ஏன் செய்யவில்லை, என்ன காரணம் என்பதை முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாநிலங்களவையில் புதுவை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் மிக அழகாக இதைப்பற்றி வாதாடியிருக்கிறார், எடுத்துச் சொல்லியிருக்கிறார். நாடாளுமன்றத்திலே ஏன் சொல்லவில்லை என்று கேட்கிறார்கள். அந்தக் குழப்பத்திலே யார் சொன்னார்கள், யார் சொல்லவில்லை என்று யாருக்கும் தெரியாது, இராஜ்ய சபா அமைதியாக நடந்தபொழுது, புதுவை மாநிலத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இராஜ்ய சபா உறுப்பினர்-திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர் எடுத்துச்சொன்னபோது, காங்கிரஸ்காரர்கள் எல்லாம்கூட கைதட்டி வரவேற்றார்கள் என்று நான் கேள்விப்பட்டேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் உட்காருங்கள், *(குறுக்கீடு)* சரி, பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, R.S.S. விவகாரம் என்பது ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினை என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். Actually R.S.S. பிரச்சினை என்பது குஜராத் மாநிலத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவில் இருக்கக்கூடிய பிரச்சினை. இப்போது குஜராத் மாநிலத்திலே அரசு ஊழியர்கள் R.S.S.-ல் உறுப்பினராக இருக்கலாம் என்று சொல்லப்படக்கூடிய அடிப்படையை வைத்துக்கொண்டு—வருங்காலத்தில் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய R.S.S.--மத்தியிலும் மாநிலத்திலும் இருக்கக்கூடிய அரசுகள்--N.D.A.--தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற அடிப்படையிலே உள்ள அரசுகள் என்பதால் இங்கேயும் அதற்கு

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2000 மார்ச் 6

அனுமதி தாருங்கள் என்று கேட்டு வருகின்றபோது, அதற்குத் தமிழ்நாடு அரசு செவி சாய்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்கள் R.S.S.-ல் சேர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று மத்திய அரசே கூறியிருக்கிறது. நாடாளுமன்றத்திலேயே பிரமோத் மகாஜன் அவர்கள் அந்தக் கருத்தை வாஜ்பேயி அவர்கள் சார்பாக, அத்வானி அவர்கள் சார்பாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்கள் R.S.S.-ல் சேர நிச்சயமாக இடம் தர மாட்டோம் என்று வாக்குறுதி அளித்திருக்கின்றார். அது நாட்டுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி. மத்திய அரசே அந்த முடிவை எடுத்திருக்கும்போது, R.S.S.-காரர்கள் பற்றி ஒரு நல்ல தெளிவான கொள்கையுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்படிப்பட்ட முடிவை நிச்சயமாக எடுக்காது. குஜராத் முடிவை திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொள்ளாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களுடைய சந்தேகத்திற்குப் பதிலாக அளிக்க விரும்புகிறேன்.

முற்பகல் *11--50*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எது எப்படியாக இருப்பினும் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த விஷயத்திலே மத்திய அரசுக்கு ஒரு பெரும் நெருக்கடியைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் ராமன் தான். ஆனால் எனக்கு இருக்கின்ற இறைமையை நான் நெஞ்சிலே சுமந்திருக்கிறேன். பிறர் தோளில் நான் சுமத்தவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். Common Civil Code-ஐ, எல்லோருக்கும் பொதுவான ஒரு சட்டத்தை வெகுவிரைவாக B.J.P. அரசு கொண்டுவந்து விடும். நிச்சயமாகக் கொண்டுவந்து விடும். வடிவம் வேறாக இருக்கலாம். வழிமுறைகள் வேறாக இருக்கலாம். ஆனால் அவர்கள் அந்த நோக்கத்திலே செயல்படுவதிலே தீவிரமாக இருக்கிறார்கள் என்ற ஓர் ஆபத்தான செய்தியை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். பொதுவாகவே நெற்றியிலே பொட்டு வைத்தால்கூட, அதைப் பஞ்சத்துப் பொட்டு, பரம்பரைப் பொட்டு என்று வகைப்படுத்தி விமர்சிக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்திலே நிச்சயமாக விழிப்படைந்து காப்பாற்றுவார் என்றுதான் நான் நம்புகிறேன். அப்படிச் சொல்வதன் மூலமாக மக்களிடையே ஒரு நம்பிக்கையைத் தோற்றுவிக்க முடியும் என்று நான் கருதுகின்றேன்.



2000 மார்ச் 6]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இராமனே இப்படிப் பேசுகிறபோது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. என்னை irritate பண்ண வேண்டுமென்று எண்ணுகிறார். அவர் நினைத்தால்கூட அல்ல, அவரது தாத்தாவே வந்து என்னை irritate பண்ண நினைத்தாலும், என்னை irritate பண்ண முடியாது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** நான் சொன்னது அது அல்ல. நான் முதல்வர் அவர்களுடைய பண்பையும், நேர்மையையும் மதிக்கின்றேன், ஓர் இளைஞன் என்ற முறையிலே. ஆனாலும்கூட பகுத்தறிவிலே அவர் மிகவும் குறிப்பாக இருக்கிறார் என்பதைக் குறிப்பிடத்தான் அதை நான் கூறினேன். ஆகவே, முதலமைச்சரை இழிவுபடுத்தும் நோக்கம் எனக்கு இல்லை என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) Interruption எல்லாம் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பொதுமக்களை மிகப் பெரிய அளவில் பாதிக்கக்கூடிய விஷயம் ரேஷன் அரிசி. ஏற்கெனவே ரூ.*2* என்ற அளவிலே போடப்பட்ட அந்த அரிசி விலக்கப்பட்டு, இப்போது மூன்றரை ரூபாய் ஆக ஆக்கப்பட்டிருக்கின்றது. மத்திய அரசு ரூ.*6* என்று விலை உயர்த்தியிருக்கின்றது. இதைக் கண்டித்து, விலை உயர்வை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று B.J.P. அரசுக்கு வேண்டுகோள் விடுத்து, ஒருமனதான தீர்மானத்தை கேரள மாநில சட்டப் பேரவை நேற்று முன்தினம் நிறைவேற்றி இருக்கிறது. அத்தகைய தீர்மானத்தை இந்தப் பேரவையும் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக அதனால் வருகின்ற வருமான இழப்பு ரூ. *300* கோடி என்று சொல்கிறார்கள். அந்த இழப்பை நம்முடைய அரசு எப்படிச் சரி செய்யப் போகிறது என்ற கேள்வி எழாமல் இல்லை. பொதுவாகவே இடது தோளில் இருக்கின்ற....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ரூ.*1000* கோடி இழப்பை அரசு ஈடுகட்டித்தான் அரிசி வழங்கிக்கொண்டிருக்கிறது. அதை எப்படி ஈடுகட்டுகிறதோ, அதைப்போலத்தான் இந்த அரசு ரூ.*300* கோடியையும் ஈடுகட்டும். இதுகூடத் தெரியாமல் அரசியல் பேசி என்ன பயன்? (சிரிப்பு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இப்படி வருகின்ற இழப்பினை மத்திய அரசின் மானியமாகப் பெற்றால், அது நிச்சயமாக நலமாக இருக்கும்.

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2000 மார்ச் 6

ஆனால் அப்படி மானியமாகப் பெற முடிந்து இருக்கிறதா என்பது தான் கேள்வி. இடது தோளில் இருக்கிற சுமையை வலது தோளில் வைப்பதன் மூலமாக ஒரு relief கிடைக்காது அல்லது நம்முடைய சிரமத்தைக் குறைக்க முடியாது என்ற ஓர் அடிப்படை உண்மையைக் கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. எஸ்.எஸ். முகமது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!

என்று போற்றிப் புகழ்ந்தவனாக எனது உரையைத் தொடங்குகின்றேன்.

புத்தாயிரம் ஆண்டில் குமரிமுனையில் வான்உயரச் சிலையை வள்ளுவனுக்குக் கண்டு, இந்தப் புத்தாயிரம் ஆண்டில் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்கள் *1--3--2000* அன்று ஆற்றிய உரையை மாண்புமிகு உறுப்பினர் திருமதி காஞ்சனா கமலநாதன் அவர்கள் முன்மொழிய திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் வழிமொழிந்து ஆற்றிய உரையை வரவேற்று, தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே எனது உரையைத் தொடங்குகின்றேன்.

கடந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ் மக்களுக்காக ஆற்றிய நல்ல காரியங்களை எல்லாம் மறவாமல், நடந்து முடிந்த சட்டமன்ற இடைத் தேர்தலில் மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கி தமிழக அரசுக்கு நல்ல உறுதுணையாக இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். அதனைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே உரையாற்றியபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திற்கு ஆற்றிய நல்ல திட்டங்களுக்கு எல்லாம் பாராட்டுதல்கள் தெரிவித்து, புதிய திட்டங்களையும் வரவேற்று அறிமுகப்படுத்தி இருக்கின்றார்கள். அவ்வாறு அறிமுகப்படுத்தியிருக்கின்ற திட்டங்களை இங்கே எடுத்துச் சுட்டிக்காட்டுகின்றபோது தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே நாங்கள் அவற்றை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழகத்திலே நான்கு ஆண்டுகளாகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொடர்ந்து அண்ணா மறுமலர்ச்சி திட்டம், சட்டமன்ற உறுப்பினர்கள்



2000 மார்ச் 6] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

தொகுதி வளர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் மற்றும் சமத்துவபுரம் கண்ட சரித்திர நாயகனாக சமத்துவபுரங்களை அமைத்துக் கொண்டிருப்பதுடன் தற்போது உழவர் சந்தைகளையும் விவசாயிகளுக்காக ஏற்படுத்தி, விவசாயிகளுடைய பிரச்சினைகளையும் தீர்த்துக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், தமிழக மக்கள் பட்டிதொட்டிகளில் எல்லாம் இப்போது பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இடைத்தரகர்கள் சொருகலை முறியடித்து சாதாரண சாமானிய மக்கள்கூட காய்கறிகளை வாங்கிக்கொள்ளக்கூடிய உழவர் சந்தைத் திட்டத்தை தமிழக மக்கள் வரவேற்றுப் பாராட்டுகிறார்கள்.

முற்பகல் *11--55*

வரும்முன் காப்போம், நமக்கு நாமே திட்டம் போன்ற நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது மட்டுமல்லாமல் மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே புதிய திட்டங்களையும் அறிமுகம் செய்துள்ளார்கள். நெல் விற்பனைக்காக மதுரையிலே *11* கோடி ரூபாய் திட்டத்திலே நெல் விற்பனை அங்காடி ஒன்றை ஏற்கப்படுத்தி இருக்கிறார்கள். இது விவசாயிகள் பாராட்டக்கூடியதாக இருக்கிறது. அதேபோன்று பெருந்துறையிலே *30* கோடியே *89* இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே மஞ்சள் விற்பனைக்காக ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகள் பாராட்டுகின்ற அந்த நல்ல திட்டத்தை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று *1* முதல் *5* ஆம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாக்கி 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற உன்னதக் குறிக்கோளை அறிமுகப்படுத்தியிருப்பது இங்கே தமிழகத்திலே வாழக்கூடிய தமிழக மக்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கணினியைத் தனியார் துறையிலே படித்தவர்கள், படிக்காதவர்கள் வைத்துக்கொண்டு கல்வியை விற்பனை செய்து கொண்டிக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை எல்லா அரசுப் பள்ளிகளிலேயும் சாதாரண ஏழை எளிய மக்கள் படிக்கக்கூடிய அளவுக்குக் கணினி மையங்களை உருவாக்கிக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து பட்டி தொட்டி கிராமங்கள்தோறும் உள்ள மாணவ மாணவிகள் பயனடையக்கூடிய வகையிலே அதை விரிவாக்கம் செய்து கொடுப்பார் என்று எதிர்பார்க்கின்றோம்.

சிறுபான்மைச் சமுதாய மக்களாக இருக்கக்கூடிய இஸ்லாமியச் சமுதாய மக்களின் நீண்ட நாள் கனவாக நாங்கள் ஒரு கோரிக்கையை

வைத்தோம். நடந்து முடிந்த இஃப்தார் நிகழ்ச்சியின்போது, ரம்சான் நோன்பு திறக்கிற நேரத்திலே ஒன்றை உறுதியாகச் சொன்னார்கள். சிறுபான்மைச் சமுதாயத்திற்கு என்றும் பாதுகாவலனாக இருப்பேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியபடி மேதகு ஆளுநர் உரையிலே பத்தாவது பத்தியிலே உருது அகாடமி அமைப்பது குறித்து அறிவித்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கீடு செய்து, 15 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தமிழ் மாநில தேசிய லீகின் சார்பிலே வரவேற்று பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை 20 பேர்கள் கொண்ட குழுவாகவும், 10 பேர்கள் கொண்ட குழுவாகவும், அமைக்க இருப்பதாக அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு அமைக்கப்படுகின்ற நேரத்திலே தமிழகத்திலே-வாழக்கூடிய--எல்லா மாவட்டங்களிலிருந்தும் உருது பேசக்கூடிய முஸ்லிம்களை ஆணையத்திலே இடம்பெறச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, உருது அகாடமி என்று சொல்கின்றபோது உருது பேசுகிறவர்களை எல்லாம் அகாடமியிலே இடம்பெறச் செய்வது பொருத்தமாகவும் இருக்காது, பயனுடையதாகவும் இருக்காது. உருது பெரும் பேராசிரியர்கள், உருது கவிஞர்கள், ஏற்கெனவே பல நூல்களை இயற்றியவர்கள் அப்படிப்பட்டவர்களை ஒவ்வொரு மாவட்டத்திலேயிருந்தும் எடுக்க முடியாது. தமிழ்நாடு முழுவதும் பரவலாக இருக்கக்கூடிய அப்படிப்பட்ட தகுதி உடையவர்களைத்தான் அந்தக் குழுவிலே இடம்பெறச் செய்ய கருதிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதைத்தான் நாங்களும் நினைவுபடுத்துகிறோம். சில பத்திரிகைகளில், சில அரசியல் கட்சிக்காரர்கள் உள்நோக்கத்தோடு நாங்கள்தான் பெற்றுக்கொடுத்தோம் என்று சொல்லக் கூடிய ஒரு நிலையை உருவாக்கிக்கொண்டு, 'எங்களை இடம்பெறச் செய்ய வேண்டும்' என்று, அவர்களுடைய பெயருக்காக, அரசியல் நோக்கத்திற்காகக் களங்கம் கற்பிக்க முன்வருகிறார்கள். அதனால்தான் உருது படித்த ஆசிரியப் பெருந்தகையாளர்கள், உருது பன்மொழியாளர்கள், மௌல்வி ஆலிம்களாக இருக்கக்கூடியவர்கள் அதிலே இடம்பெற்றால்தான் நன்றாக இருக்கும். உதாரணமாக ஹைதராபாத், பெங்களூர் போன்ற இடங்களில் எல்லாம் உருது அகாடமி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை முன்மாதிரியாக வைத்து,



தமிழகத்திலே அதை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினைப் பணிவன்போடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவிலே இடஒதுக்கீடு உங்களுக்கு வழங்க இருக்கிறோம் என்ற ஓர் உறுதியையும் இஃப்தார் நிகழ்ச்சியிலே அறிவித்தார்கள். தமிழகத்திலே வாழக்கூடிய இஸ்லாமியப் பெருங்குடி மக்கள் நீண்ட நாட்களாக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற அந்தத் திட்டத்தையும் வருகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அறிவிப்பார்கள் என்று நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். காரணம் ஏளனம் பேசி எள்ளிநகையாடக்கூடிய சிலர், சொல்வாரே தவிர, செய்து காட்டமாட்டார், அப்படியே காலத்தை நீடிப்பார் என்றுகூடச் சொல்லிக்கொண்டு எங்களிடத்திலே கொக்கரித்துக்கொண்டிருக்கிறார்கள். 'உள்ளதைச் சொல்வோம் சொன்னதைச் செய்வோம்' என்ற சொல்லுக்குச் சொந்தக்காரராக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்தான் இப்போது உருது அகாடமி திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறார்கள். நீண்டநாள் கனவு இப்போது நனவாகி இருக்கின்றது. விரைவில் எதிர்பாருங்கள், இடஒதுக்கீடு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இப்போது எங்களுக்கு ஏற்படுத்தப்படுத்தப்பட்ட ஹஜ் Committee சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த காலங்களிலே மத்திய அரசினுடைய உதவியோடு, தமிழகத்திலேயிருந்து, 1,800 முதல் 2,000 பேர் வரைதான் ஹஜ்ஜுக்கு செல்லக்கூடிய நிலை இருந்தது. குர்ரா என்ற குலுக்கல் திட்டம் நடைமுறையில் இருந்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் அந்த குர்ரா என்ற முறையில் அந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதனுடைய அரசுச் செயலாளர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி அது மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதனால், இந்த ஆண்டு அந்தக் குர்ரா என்ற குலுக்கல் முறையை எடுத்துவிட்டனர். அதனால் விண்ணப்பித்தவர்கள் அத்தனைபேரும் இப்போது செல்லக்கூடிய நிலையை உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், தமிழக வக்ஃப் வாரியத்தினுடைய அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். இதிலே ஒருசில திருத்தங்களை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மார்ச் 6
நண்பகல் 12-00

ஒவ்வோராண்டும் பக்ரீத் பண்டிகை வருவதற்கு முன்பாகவே மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் மூலமாக முன்மொழிந்து முன்கூட்டியே ஹஜ்ஜுக்கு செல்வதுண்டு. ஆனால் இந்த ஆண்டு கடைசி நேரத்திலே செல்லக்கூடிய ஒரு நிலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் மத்திய அரசாங்கத்திலே இருக்கக்கூடியவர்கள், இங்கே எங்களுக்கு விமானதளத்தை ஒதுக்கிக் கொடுப்பதிலே காலதாமதம் செய்துவிட்ட காரணத்தினால், ஹஜ் Committeeயினுடைய குழு கூடி உரிய நேரத்திலே அவர்களுக்கு அறிவிப்பு செய்திருந்தும்கூட, விமானம் கொடுப்பதற்கு அவர்கள் தாமதப்படுத்திய காரணத்தினால் இந்த ஆண்டு ஹஜ்ஜுக்குச் செல்லக்கூடியவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 25 ஆண்டு காலமாகத் தொடர்ந்து தமிழகத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதை மத்திய அரசு ஹஜ் Committeeயிலே பிரச்சினையாக்கி இந்தமுறை எங்களுக்கு முன்வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டதனாலேயே நாங்கள் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்று வெளியுறவுத் துறை அமைச்சரும், ஹஜ் கமிட்டியினுடைய தலைவரும், மற்றவர்களும் நேரடியாக டெல்லிக்கு நாங்கள் சென்ற நேரத்திலே எடுத்துச்சொன்னார்கள். போராடி, 10 ஆம் தேதி போகிற Flight-ஐ 6 ஆம் தேதிக்கு மாற்றி இன்று மாலை 4 மணிக்குப் புறப்படுகிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஹஜ் கமிட்டியினுடைய பொறுப்பை வகிக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். ஆனால், இஸ்லாமியச் சமுதாய மக்களின் சார்பிலே பேசப்படுகின்ற பேச்சுக்களானது B.J.P.-யினுடைய மத்திய அரசு ஆட்சிப் பீடத்திலே அமர்ந்த காரணத்தினால்தான் முஸ்லிம் சமுதாய மக்கள் ஹஜ்ஜுக்குச் செல்வதற்குக்கூட தமிழகத்திலிருந்து காலதாமதப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று ஓர் அரசியல் . . . .

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவை மாற்றுத்



2000 மார்ச் 6] [திரு. அ. இரகுமான்கான்]

தலைவர் அவர்களே, இந்த முறை டில்லியிலே நடைபெற்ற ஹஜ் கமிட்டி மாநாட்டிலே எல்லா மாநிலங்களின் சார்பாகவும் Wakf வாரிய அமைச்சர்கள் வந்திருந்தார்கள். அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்ததே பிரதமர் வாஜ்பேயிதான். அவர் பேசுகிறபோது, இந்த முறை ஒருவர்கூட விட்டுப்போகாதபடி அனைவரும் ஹஜ் செல்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறோம், அந்நியச் செலாவணியை ஏற்படுத்தித் தருகிறோம் என்று சொல்லி இந்த முறை அதிகப்படியாக 75,000 பேர் இந்தியாவிலேயிருந்து ஹஜ்ஜுக்குச் செல்கிறார்கள் என்பதையும், தமிழகத்திலிருந்து நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே ஓர் application கூட விட்டுப்போகாமல் 3,500 பேர் செல்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கின்றேன். இருந்தபோதிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலமாக மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக இதைப் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது உண்மை. கடந்த காலத்திலே குர்ரா என்ற குலுக்கல் முறை இருந்தது. இப்போது மனு போட்ட அத்தனை பேர்களும் சென்றுவிட்டார்கள். ஆனால், பெங்களூரிலேயிருந்து சென்ற பிப்ரவரி மாதமே ஹஜ்ஜுக்கு செல்லக்கூடிய விமானம் புறப்படத் தொடங்கிவிட்டது. ஒரு மாதத்திற்கு முன்பே அவர்கள் சென்றுவிட்டார்கள். ஆனால் இப்போது தமிழகத்தினுடைய நிலையைப் பொறுத்தவரை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன். ஹஜ் Committeeயிலே 300 பேர் தங்குவதற்குரிய இடம் மட்டும்தான் இங்கே இருக்கின்றது. இன்றிலிருந்து செல்ல வேண்டுமென்றால் ஒருவார காலத்திற்குள் 5,000 பேர்கள் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. 3,000 பேர்கள் தமிழகத்திலிருந்தும், சுற்றுப்புற அந்தமான் நிக்கோபார் தீவுகள் போன்ற பகுதிகளிலிருந்து வரக்கூடிய ஹாஜிகளையும் சேர்த்தால் இந்த ஆண்டு சென்னையிலேயிருந்து 5,000 பேர் புறப்படுகின்றார்கள். அவ்வாறு புறப்படுகின்ற ஹாஜிகள் மட்டுமல்லாது, ஹாஜிகளை வழியனுப்புவதற்காக வரக்கூடிய உறவினர்கள் இங்கே வந்து தங்குவதற்குப் போதிய இடவசதியில்லை. லாட்ஜ்களில் எல்லாம் இடவசதி பூர்த்தியாகிவிட்டது.

[2000 மார்ச் 6

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்பக் குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். நானும் 4, 5 ஆண்டு காலத்திற்கு முன்பாக எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நேரத்திலே மெக்காவுக்கும் சென்றிருக்கிறேன், உம்ரா என்ற முறையில். இப்போது அவர் சொல்கின்றபடி ஹஜ் யாத்திரையை நிறைவேற்றுவதிலே எந்தப் பாதகமும் இல்லை, அதை அறிந்தவன் என்ற முறையில் சொல்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் சென்ற ஆண்டு ஹஜ்ஜுக்குச் சென்று வந்தேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சில சிரமங்கள் இருப்பதைச் சொல்லி, அந்த யாத்திரிகர்கள் தங்குவதற்கு உரிய இடவசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைக்காகத்தான் இதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தயவுசெய்து வருகின்ற ஆண்டிலே அதைச் செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இடஒதுக்கீடு செய்கின்ற நேரத்திலே, இப்போது நாங்கள் ஒன்றை கேட்டுக் கொண்டிருக்கின்றோம். கேரளாவிலேயும், அண்டை மாநிலங்களிலேயும் 10 சதவீதம், 12 சதவீதம் என்று இட ஒதுக்கீடு இருப்பதைப் போன்று குறைந்தபட்சமாக எங்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதன் நோக்கம், தற்போது 26-2-2000-லே மதுரை வக்ஃப் வாரிய கல்லூரியிலே 5 பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அதிலே ஒரேயொருவர் மட்டும்தான் முஸ்லிம். நாசர் ஷெரீப் என்பவர் இடம் பெற்றிருக்கின்றார். ஆதிராஜன், சவுந்திரராஜன், வேலுசாமி போன்ற நான்கு பேர், மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிற காரணத்தால்தான், சிறுபான்மைச் சமுதாய மக்களுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை எங்களுக்குச் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கோரிக்கையாக, அன்பு வேண்டுகோளாக வைத்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-05

கடந்த 1998-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற வெடிகுண்டுச் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் கடும் தண்டனைக்கு



2000 மார்ச் 6] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

ஆட்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், அந்த வழக்குகளில் ஒரு பாவமும் அறியாத அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த வழக்குகளை மறு ஆய்வு செய்து, Committee நியமித்து, பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டு தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பாக மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று,

*வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!*

*வாழிய பாரத மணித் திருநாடு!*

என்று போற்றிப் புகழ்ந்தவாறு எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். Wakf வாரியக் கல்லூரியிலே......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; பொதுவாகச் சொல்லியிருக்கிறார். Generalise பண்ணிச் சொல்லியிருக்கிறார். யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அந்தப் பிரச்சினை இப்போது வேண்டாம். (குறுக்கீடு) உங்களை அவர் சொல்லவேயில்லை. (குறுக்கீடு) உங்களை அவர் சொல்லவேயில்லை. Generalise பண்ணிச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை, உட்காருங்கள் Please sit down.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் உட்கார முடியாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உட்காருங்கள் It is not good.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** குற்றச்சாட்டு என்ன என்பதற்கு விளக்கம் வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அவர் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லியிருக்கிறார். பொதுவாகச் சொல்லும்போது நீங்கள் அதைப் பற்றிச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** விளக்கம் கேட்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உங்களுடைய turn வரும்போது பேசுங்கள், நீங்களும் பேசப்போகிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Wakf வாரியக் கல்லூரியிலே ஐந்து விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டதாகவும், அதிலே ஒரேயொரு முஸ்லிமுக்குத்தான் வாய்ப்பு அளிக்கப்பட்டது என்றும் சொல்லியிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையில் மற்ற இடங்களிலே எங்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை; நாங்கள் நடத்துகிற கல்லூரிகளிலேதான் இந்த வாய்ப்பு கிடைக்கிறது. அப்படியென்றால் அவர்களை நியமனம் செய்தவர்கள் யார், தேர்ந்தெடுத்தவர்கள் யார், என்பதையும் நாம் இங்கே விளக்கம் பெற்றுக்கொண்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். நான்கு பேர்களை, முஸ்லிம் அல்லாதவர்களைத்தான் நியமித்திருக்கிறார்கள். ஒரே ஒரு முஸ்லிமை Wakf வாரியக் கல்லூரியிலே நியமித்தார்கள் என்றால், யார் அந்த நியமனத்தைச் செய்தவர்கள் என்பதற்கு அரசு விளக்கம் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிரச்சினையை உறுப்பினர் அவர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஒரு Typist post vacancy-ல் முஸ்லிம்தான்: இரண்டு Sweeper post Vacancy--ல் முஸ்லிம்கள்தான். ஏற்கெனவே அந்தக் கல்லூரியிலே temporary-யாகப் பணியாற்றிய ஒரு முஸ்லிம் permanent ஆக்கப்பட்டிருக்கிறார். ஆங்கிலத்திற்கு, Physical Director-க்கு, Librarian-க்கு அங்கே முஸ்லிம்கள்தான் போடப்பட்டிருக்கிறார்கள். மூன்று Lecturer post- களுக்குத்தான் தகுதியின் அடிப்படையில், குறிப்பாக காமராஜர் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு Syndicate Member, Principal, Correspondent போன்ற 9 பேர் கொண்ட Governing body மூலம் University norms அடிப்படையிலே பத்திரிகையிலே



விளம்பரம் கொடுத்து, Interview நடத்தி mark--ன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, போட்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரியிலே நீங்கள் Chairman--ஆக இருந்த காலத்திலே மதனகோபால் போன்ற பேராசிரியர்கள், இந்து சகோதரர்கள், கிறிஸ்தவ சகோதரர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். எனவே, இப்போது முஸ்லிம்களைத்தான் அங்கே நியமிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. புதுக் கல்லூரி முஸ்லிம்களுக்காகத்தான்; S.I.E.T. கல்லூரி முஸ்லிம்களுக்காகத்தான், இந்துக்களும் தகுதியிருந்தால் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையினாலே முறைப்படி நடைபெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான்கு பேர் போட்டிருக்கிறார்கள். அதைத்தான் நீங்கள் போட்டிருப்பீர்கள். Sweeper--கள் முஸ்லிம்கள்தான், ஏனென்றால் அதைத்தான் கொடுப்பீர்கள், Sweeper--களாகத்தான் முஸ்லிம்களைப் போடுவீர்கள். உயர் உத்தியோகத்திற்கு நீங்கள் போடமாட்டீர்கள். நான் கேட்கிறேன்....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** Economics Lecturer போடப்பட்டிருக்கிறார். Librarian போடப்பட்டிருக்கிறார். Typist போடப்பட்டிருக்கிறார்.

*பிற்பகல் 12--10*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நியமனம் செய்த குழு உறுப்பினர்கள் என்னை வந்து பார்த்தார்கள். அதுமட்டுமல்ல, வேறு சில விவகாரங்களையும் அவர்கள் சொன்னார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான பதிலைத் தர வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் உறுப்பினர்கள் வந்து அவர்களைப் பார்த்ததாகச் சொன்னார்கள். Wakf வாரியத்தில் செய்த சில முறைகேடுகளுக்காக ஒருவரை நீக்க வேண்டுமென்று சொன்னவர்களே அவர்கள்தான். அந்தப் பொறுப்பிலிருந்தும் நீக்க வேண்டுமென்று சொன்னவர்களும் அவர்கள்தான். இப்போது சட்டப்படி செய்யப்பட்டுள்ள அந்தப் பதவி நியமனத்திலே ஏதாவது தவறு இருந்தால், தப்பு நடந்து இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு சொல்லலாம். முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் முறையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தகுதியின் அடிப்படையில்தான் தரப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. வல்லரசு அவர்கள் (குறுக்கீடு) இதோடு உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் தலைவராக இருக்கும்போது இன்னாரை அமர்த்தினார்கள் என்று சொல்ல முடியாது. (குறுக்கீடு) நான் இருக்கும்போது ஒருவரையும் அமர்த்தவில்லை. அவர்கள் ஏற்கெனவே வேலை செய்துகொண்டிருந்தவர்கள்தான். (குறுக்கீடு) நான் இருக்கும்போது யாராவது அமர்த்தப்பட்டார்களா என்று மட்டுமே சொல்ல வேண்டும். (குறுக்கீடு) விதி இருக்கிறதா என்றால், விதி இல்லை. எங்களுடைய தலைவிதி. எங்களுடைய தலைவிதிதான் இருக்கிறது. (குறுக்கீடு) மூடி மறைப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். விளக்கம் தர வேண்டும். (குறுக்கீடு) விளக்கம் தரவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் Senior Member. அவர்கள் இப்படி திடீர் திடீர் என்று எழுந்து பேசுவது சரியல்ல, முறையல்ல, சபைக்கு அழகல்ல. தயவுசெய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** விதிகளின் அடிப்படையில்தான் கொடுத்திருக்கிறோம். முஸ்லிம்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று செய்யவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது தனிப்பட்ட விவாதமாக, ஒரு மாண்புமிகு உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சரும் பேசிக்கொள்ள வேண்டிய பிரச்சினை அல்ல. விதிமுறைகளுக்கு மாறாக யாரேனும் நியமிக்கப்பட்டிருந்தால், யாரும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் வழக்குப் போட்டால், நீதிமன்றத்திலே அதன்மீது முடிவைத் தெரிவிப்பார்கள். ஏனென்றால் விதிமுறைகளுக்கு மாறாக யாரையும் நியமிக்க முடியாது. அப்படி நியமிக்கப்பட்டிருந்தால், வழக்குப் போட்டால் நிச்சயமாக அந்த நியமனம் செல்லாது. எனவே, ஒரு குழு முறையாகச் செய்த காரியம் என்று கருதப்படுகிற ஒரு காரியத்தை நாம் இங்கே விவாதம் செய்வது உள்ளபடியே நமக்கு நியாயம் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்காது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர் விசாரணை செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நீங்கள் தொடர்ந்து பேசக்கூடாது. மன்னிக்க வேண்டும். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அடுத்து, திரு. வல்லரசு அவர்கள்..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** வக்ஃப் வாரியத்தில் நிறைய விஷயங்கள் விசாரணை செய்யப்பட வேண்டி இருக்கிறது. நிச்சயமாகச் செய்யப்படும். (குறுக்கீடு) விசாரணை செய்யப்படும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எல்லா விசாரணைகளும் நடைபெற வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது. கலைஞர் அரசின் திட்டங்களை, கொள்கைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு கலங்கரைவிளக்கமாக ஆளுநர் உரை அமைந்துள்ளது. யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்னும் பழமொழிக்கேற்ப, வருகிற மார்ச் மாதம் 24 ஆம் தேதியன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே வைக்க இருக்கிற மகத்தான (நிதிநிலை அறிக்கைக்கு, ஆளுநர் உரை ஒரு முன்னோடியாக) அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. சிலர் ஆளுநர் உரையிலே திட்டங்களே இல்லை, கொள்கைகளே இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மை அது அல்ல. பல்வேறு திட்டங்கள் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

சென்னை, தரமணியில் ரூ.338 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுவருகின்ற TIDEL Park திட்டம், 100 நகர மையங்களில் அமைக்கப்பட்டுவருகின்ற TIDEL Park திட்டம், 100 நகர மையங்களில் உழவர் மையங்கள் உருவாக்குகின்ற திட்டம், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளுக்கு 87 கோடி ரூபாயில் ஊட்டச்சத்து வழங்கும் திட்டம், 215 கோடி ரூபாயில் நகர்ப்புற தெருக்கள், சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரூ.103 கோடியில் சென்னையில் வெளியூர் பேருந்து நிலையம் கட்டும் திட்டம், 10 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்படுத்துகின்ற திட்டம், இவ்வாண்டு மட்டும் 107 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம், இப்படி 100 கோடி, 200 கோடி, 300 கோடி ரூபாய் என்று பல்வேறு திட்டங்களைக் கொண்டிருக்கிறது ஆளுநர் உரை என்பதை நான்

[திரு. பி.என். வல்லரசு] [2000 மார்ச் 6

தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்தத் திட்டங்களெல்லாம் சிலருக்குத் தெரியவில்லை. சிலர் வேண்டுமென்றே மூடி மறைக்கிறார்கள். சிலர் திசை திருப்புகிறார்கள். ஆளுநர் உரையில் ஏராளமான திட்டங்கள் உள்ளன. இப்போது ரேஷன் அரிசி விலையை மத்திய அரசு 50 சதவீதமாக உயர்த்தியும்கூட, தமிழக மக்களுக்காக 1700 கோடி ரூபாய் சுமையைத் தானே தாங்கிக்கொண்டிருக்கிற கலைஞர் அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு இதே மத்திய அரசு, அரிசி விலையை உயர்த்தியபோதுகூட, அன்றும் தமிழக மக்களுக்காக தானே விலை உயர்வை ஏற்றுக்கொண்ட அரசுதான் கலைஞர் அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய பாரதிய ஜனதா அரசில் அங்கம் வகித்தபோதிலும், கூட்டணியில் இடம் பெற்றிருந்தபோதிலும், ரேஷன் அரிசி விலையையும் விவசாயிகள் பயன்படுத்தும் உர விலையையும் மத்திய அரசு உயர்த்தியிருக்கின்ற இந்த நேரத்தில், அவற்றையெல்லாம் எதிர்த்துக் குரல் கொடுக்க முற்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தெலுங்கு தேசம் கட்சிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, அரசமைப்புச் சட்டத்திருத்த மறு ஆய்வில் சிறுபான்மையினருக்கு எதிராக ஏதேனும் திருத்தம் மேற்கொள்ளப்படுமேயானால், அதை திராவிட முன்னேற்றக் கழகம் மூர்க்கத்தனமாக எதிர்க்கும் என்று இந்த அவையிலே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12-15

தமிழை மத்திய ஆட்சி மொழியாக்குதல், சேது சமுத்திரத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுதல், சேலம் உருக்காலையை மீட்டல் ஆகிய இவை மூன்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலையாய கடமையாகும். காரணம், பல்வேறு போராட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் இதற்காக நடத்தியிருக்கின்றது. எனவே இவற்றை மத்திய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறோம், வலியுறுத்தி வருகிறோம், எழுதியுள்ளோம் என்ற படலத்தையெல்லாம் விட்டுவிட்டு, நாங்கள் நிச்சயம் பெற்றுத்தருவோம் என்ற உறுதியோடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இவற்றையெல்லாம் தாண்டி இந்த மூன்றையும் சாதிக்க இந்த ஆட்சியையே இழக்க நேரிடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட, இந்த ஆட்சியை இழந்தும்கூட இந்த மூன்றையும் சாதிப்போம் என்ற நிலையை நீங்கள் மேற்கொள்வீர்கள்



2000 மார்ச் 6] [திரு. பி.என். வல்லரசு]

என்றால், தமிழக மக்கள் மீண்டும் இந்த ஆட்சியை உங்களுக்குத் தருவார்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓய்வுபெற்ற முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. இரத்தினவேல் பாண்டியன் தலைமையில் தென் மாவட்ட மக்களுடைய வளர்ச்சிக்கு ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கையையும், அந்தக் குழுவினுடைய அறிக்கைமீது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுக்கவிருக்கின்ற தலைசிறந்த நடவடிக்கையையும் தென் மாவட்ட மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீதிபதி திரு. இரத்தினவேல் பாண்டியன் குழுவினுடைய அறிக்கைமீது நடவடிக்கை எடுத்து, தென் மாவட்டங்களைத் தொழில் நகரங்களாக ஆக்க வேண்டுமென்று நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் இந்த அவையில் நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். தென் மாவட்ட ஜாதிக் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள்மீதான வழக்குகளை வாபஸ் பெறுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ, காவல் துறையிலே இருக்கிற சில கறுப்பு ஆடுகள், தேவர் இன மக்களுக்கு அந்த நன்மை கிடைத்து விடக்கூடாது என்பதற்காக ஜாதிக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட தேவர் இன மக்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் இன்னும் அங்கே வாபஸ் பெறப்படாமல் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு, அவர்கள் துன்பங்களுக்கு ஆளாகியிருப்பதை முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில், எட்டியபட்டி, தொட்டப்ப நாயக்கனூர் வட்டாரத்தில் அசுவமா நதி அணையை கட்டித் தரவேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு அசுவமா நதி அணையைக் கட்டித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதி கருமாத்தூரில் அரசு கோரிய 7 ஏக்கர் நிலத்தை நாங்கள் வழங்கியிருக்கிறோம். 7 ஏக்கர் நிலம் வழங்கி ஓர் ஆண்டு காலம் ஆகியும், அங்கே 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்கப்படவில்லை. இதற்கு ஏற்பாடு செய்து தருவதாக

அரசு உறுதி அளித்திருக்கிறது. எனவே கருமாத்தூரில் 7 ஏக்கர் நிலத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தித்தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்துகின்ற பேச்சுவார்த்தை மிக விரைவில் நடைபெறவிருக்கின்ற நிலையில் அந்த பேச்சுவார்த்தையில், அனைத்து நியாயங்களும் நமது தரப்பில் இருக்கிற காரணத்தால், தமிழக முதல்வர் அவர்கள், அந்தப் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடித்து, 152 அடியாக உயர்த்தி, தென் மாவட்ட மக்களைப் பாதுகாக்க வேண்டுமாய் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 58 கிராமக் கால்வாய் திட்டத்தை வழங்கி இருக்கிறீர்கள்; பாராட்டுகிறேன். அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 60 சதவிகித வேலை முடிந்த நிலையில் இருக்கிறது. ஒரு சிறு மனக்குறை என்னவென்றால், 6, 7 கண்மாய்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. ஆகவே, அந்த 6, 7 கண்மாய்களையும் சேர்த்து நிதி ஒதுக்கிட வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தமிழகத்தில், P.C.R. Act என்கிற அந்தச் சட்டம் பல்வேறு சமுதாயங்கள்மீது தவறாகப் பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு சமுதாய மக்கள், காவல் துறை செய்கின்ற தவறுக்கு, இந்த அரசையே தவறாக நினைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, P.C.R. Act–ஐத் தவறாகப் பயன்படுத்த முடியாத அளவிற்குச் செய்ய வேண்டும். காவல் துறை அதைத்தவறாக பயன்படுத்தி, அதன்மூலம் பல்வேறு சமுதாய மக்களை இந்த அரசுக்கு எதிராகத் திருப்பி விடுகின்ற ஒரு சதி வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஒரு தெளிவான நிலை எடுத்து, P.C.R. Act–ஐ நடைமுறைபடுத்துகிறபோது அதைத் தவறான முறையில் பயன்படுத்த முடியாத அளவிற்கு நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12 -20*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. வ. அன்பழகன்.



**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குப் புத்துயிர் தந்து பொலிவுடன் நல்லாட்சி செய்யும் ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சிந்தையில் உதிக்கும் சிறப்பான திட்டங்களை எடுத்துக்காட்டுகின்ற வகையில் புத்தாயிரம் ஆண்டில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அளித்த உரைக்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சி திறமையான ஆட்சி என்பதற்கு திருச்சியும், அண்ணாவழியில் அயராது பாடுபடுகின்ற ஆட்சி என்பதற்கு அறந்தாங்கியும், தமிழக மக்களின் நெஞ்சங்களில் குடிகொண்டுள்ள ஆட்சி என்பதற்கு நெல்லிக்குப்பமும் சான்று பகர்ந்துள்ள நிலையிலே என்னுடைய உரையை ஆற்ற நான் விரும்புகிறேன்.

உலகப் பொதுமறை தந்த ஐயன் திருவள்ளுவருக்கு 133 அடி உயரத்தில் குமரி முனையிலே சிலை அமைத்து, இப்போது உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற தலைவராய் நம்முடைய முதல்வர் அவர்கள் விளங்குகிறார்கள்.

தாய்மொழியாம் தமிழுக்கும், தாய்நாடாம் இந்தியாவிற்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டிய நேரத்தில் சிறப்புடன் செய்து முடிக்கக் கூடியவர் நம்முடைய முதல்வர் என்பது இந்த ஆளுநர் உரையிலே சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்கின்றபோது இந்திய நாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும், மதச்சார்பின்மையும் உறுதியும், வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கேற்பவும், சிறுபான்மை சமுதாய மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொண்ட சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்டதாக அரசமைப்புச் சட்டம் அமைய ஆளுநர் உரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும், சிறப்புப் பெற்றதும், இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ்மொழியை முதற்கட்டமாக மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக்கிட மத்திய அரசை நம்முடைய அரசு வலியுறுத்தியுள்ளது.

கார்கில் போருக்கு நாம் வழங்கியுள்ள 50 கோடி ரூபாய் நிதி, கார்கில் வீரர்களின் குடும்பங்களுக்கு நாம் வழங்கியுள்ள கருணை

[திரு. வ. அன்பழகன்] [2000 மார்ச் 6

உதவித்தொகை, வீடுகள், இலவசக் கல்வி, வேலைவாய்ப்பு இவற்றை எண்ணிப்பார்க்கிறபோது, நம்முடைய முதல்வரைவிட தேசப்பற்றுள்ளவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் உருது அகாடமி என்ற அமைப்பினை ஏற்படுத்தி, அதற்கு முதற்கட்டமாக 15 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து, என்றைக்கும் தான் சிறுபான்மை மக்களுடைய பாதுகாவலன் என்பதை தலைவர் கலைஞர் அவர்கள், இந்த நாட்டைக் குழப்ப நினைக்கும் கோமான்களுக்கு உணர்த்தியுள்ளார்கள் என்பதை நான் ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'உழவர் சந்தை' என்னும் உன்னதமான திட்டத்தைத் தந்து இப்போது விவசாயிகள் வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அதை மனதாரப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை பண்ணையார்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ இல்லையோ, பாட்டாளி மக்கள் அந்தத் திட்டத்தை வாயாரப் புகழ்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலிக் கணக்கிலே நிலம் படைத்த ஜமீன்தார்கள் வாழ்ந்துள்ள இந்த மண்ணில்தான் பல ஆண்டுகளாய் தாங்கள் அனுபவித்து வரும் புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா கிடைக்காதா, விடிவு ஏற்படாதா என்று ஏங்கிக்கொண்டிருந்த மக்களின் உள்ளங்களில் உள்ள நிலையை உணர்ந்து நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், 20 ஆண்டுகளாகத் தாங்கள் அனுபவித்து வரும் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து வழங்க ஆணையிட்டுள்ள அற்புதமான திட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைத் தொழில் துறையில் முதலாவதாகக் கொண்டுவந்துள்ள நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆணைப்படி செய்யாறு, திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, வடமங்கலம், சிறுசேரி ஆகிய இடங்களில் SIPCOT தொழிற் பூங்காக்களை உருவாக்கி வருவது குறித்து ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே எங்களுடைய செய்யாறு தொகுதியைப் பொறுத்தவரை, SIPCOT தொழில் வளாகம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யும் பணிகள், நம்முடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஏறக்குறைய முடிந்துவிட்டன. அதில் அடிப்படை கட்டமைப்புப் பணியைத் தொடங்கி, பெரிய தொழில் நிறுவனங்களை



2000 மார்ச் 6] [திரு. வ. அன்பழகன்]

அங்கு நிறுவிட ஏற்பாடு செய்யுமாறு நம்முடைய முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலத்தில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் 250 கோடி ரூபாய் செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் பெருந்திட்டம், ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தரமணியில் 338 கோடி ரூபாய் செலவில் நவீன தொழில் நுட்ப வசதியுடன் TIDEL பூங்கா, மாவட்ட அலுவலகங்களிலும், அரசின் அனைத்துத் துறைகளிலும் கணினி வசதி, மாநகராட்சிகளில் குடிசைப் பகுதிகளில் ஓலைகளற்ற தீப்பிடிக்காத கல்நார் வீடுகள் 12,082 குடும்பங்களுக்கு அளித்தல், சிங்காரச் சென்னை அமைக்க சிறப்புடன் பணியாற்றும் 2000 ஆண்டில் இணையற்ற மேயர், இளைஞர்களின் எழுச்சி நாயகர், தளபதி அவர்களின் முயற்சிக்கேற்ப சென்னை நகரில் ஏராளமான மேம்பாலங்கள், ஆரச் சாலைகள், சென்னை புறவழிச் சாலை ரூ.103 கோடி செலவில், கோயம்பேட்டில் வெளியூர்ப் பேருந்து முனையம், திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரை துரித ரயில் திட்டம், தென் மாவட்டங்களில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்கள், இப்படி அடுக்கடுக்கான திட்டங்களை நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது.

பிற்பகல் 12-25

சில தலைவர்களைப் பற்றிச் சொல்லும்போது பெயரைச் சொன்னால் யாருக்கும் தெரியாது. அவர்களது ஜாதிப் பெயரைச் சொன்னால்தான் இந்தத் தலைவர் என்று உணர்ந்துகொள்ளக்கூடிய நிலை இருக்கிற இந்தக் காலகட்டத்திலேதான் தந்தை பெரியார் அவர்களுடைய, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவுகளை நனவாக்கிட, சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கிட, பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் போன்ற அடுக்கடுக்கான மக்கள் நலத் திட்டங்களை அற்புதமாய் ஆற்றல்மிக்க தலைவர் அவர்கள் நம்முடைய நாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அரசுக்குப் புதிய பூபாளம் பாடப் புறப்பட்டுவிட்ட போயஸ் தோட்டத்து ஊதுகுழல்கள் கொடுத்துள்ள சான்றிதழ் என்ன தெரியுமா? மக்கள் விரோத அரசு. இது அவர்களாகச் சொன்ன கவிதையா? இல்லை மண்டபத்தில்-- மன்னிக்கவும்-- தோட்டத்தில் எங்கேனும் தோண்டி எடுக்கப்பட்ட ஓலைச் சுவடியா என்று எனக்குப் புரியவில்லை. இது மக்கள் விரோத அரசும் அல்ல. மாக்கள் விரோத அரசும் அல்ல சொல்லப்போனால், மக்களைக் காக்க

[திரு. வ. அன்பழகன்] [2000 மார்ச் 6

'வருமுன் காப்போம்' திட்டம், மாக்களைக் காக்க கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் என்று இப்படிப்பட்ட திட்டங்களை வழங்கியிருக்கக்கூடிய அற்புதமான அரசுதான் நம்முடைய அரசு. இது மக்கள் அரசு, மக்கள் விரும்பும் அரசு. மீண்டும் வர வேண்டுமென்று மக்கள் விரும்பும் அரசு. இடைத்தேர்தலில் மட்டுமல்ல, வருகின்ற தேர்தல்களிலும் கொட்டும் வெற்றி முரசு. விளக்கெண்ணெய்க் குடியர்களுக்கு விரைவில் கிடைத்திடும் அதிர்ச்சிப் பரிசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வேளையில் என்னுடைய தொகுதிக்கான சில கோரிக்கைகளைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தொகுதியைப் பொறுத்தவரையில், காஞ்சிபுரம் அருகில், பாலாற்றிலே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுவந்த கோரிக்கையை நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே மீண்டும் வைத்தேன். இரண்டு பாலங்கள் தந்து இப்போது அற்புதமான முறையிலே அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதைப்போல, கொருக்காத்தூர்——வாழைப்பந்தல் இடையே பாலம் கேட்டேன். அந்தப் பாலப் பணியும் நடைபெற்று வருகிறது. நேற்றைக்குத்தான் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் அங்கே வந்து பார்வையிட்டார்கள். இப்படிப்பட்ட பாலங்களை வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள், மீதியிருக்கின்ற இரண்டு பாலங்களான, பிரம்மதேசம்——ஒச்சேரி இடையே பாலாற்றிலே ஒரு மேம்பாலமும், அதைப்போல காழியூர்-அத்தி இடையே ஒரு மேம்பாலமும், கட்டி முடித்தால், எங்கள் தொகுதியிலே அனைத்துப் பாலங்களையும் கட்டிய பெருமை நம்முடைய முதல்வரைச் சாரும் என்ற வகையிலே இந்த நிதியாண்டில் அந்தப் பாலங்களை எங்களுக்கு வழங்கிட வேண்டும்.

அதைப்போல, செய்யாறிலே புறவழிச் சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதையும் அமைத்துத்தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கிறேன். இந்த அரசுக்கு என்றைக்கும் தங்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதை நிரூபிக்கிற விதத்திலேதான் இடைத்தேர்தலிலே மக்கள் ஒரு நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். இதைப் பார்த்தாவது, 'மக்கள் விரோத அரசு, மக்கள் விரோத அரசு' என்று சொல்லக்கூடியவர்கள் தங்களுடைய மனதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.



2000 மார்ச் 6]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே பங்குகொள்ள வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரையிலே பல்வேறு அம்சங்கள் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. காலத்தின் அருமை கருதி, மத்திய மாநில அரசுகளுடைய கொள்கை நிலைகளைப் பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருந்தாலும், கடந்த வெள்ளிக்கிழமையும், இன்றும் நடைபெறுகிற இந்த விவாதத்திலே பல்வேறு பிரச்சினைகள்பற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் குறிப்பாக, விவசாயிகளுடைய பிரச்சினைபற்றி அநேகமாக இதர உறுப்பினர்கள் வலுவான கருத்தைச் சொல்லவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. இருந்தாலும், அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில செய்திகளைச் சொன்னார்கள். 1996 -ஆம் ஆண்டு இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன், அன்றைய ஆளுநராக இருந்த மேதகு சென்னா ரெட்டி அவர்கள் இந்த மாமன்றத்திலே உரையாற்றினார்கள். அதிலே, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும், இடைக்காலத் தீர்ப்பினை விரைந்து நிறைவேற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும், படிப்படியாக நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை இறுதியாக்குவதற்கான முயற்சி இந்த ஆட்சியில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்று அன்றைக்குச் சொல்லப்பட்டது. ஆனால், இன்று வரையிலும் அதுகுறித்து எந்தவிதமான முடிவும் செய்யப்படாமல், கிணற்றில் போட்ட கல்லைப் போல இருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி இந்த கவர்னர் உரையிலே எந்த இடத்திலேயும் காணவில்லை. ஆகவே, இது தீர்ந்துவிட்டதாக எடுத்துக்கொள்வதா அல்லது தீர்ப்பதற்குரிய முயற்சி நடைபெறுகிறதா, இல்லையா என்ற அச்சமும், சந்தேகமும் வருகிறது. காவிரி நீர்ப் பிரச்சினை என்பது ஒரு பிரதானப் பிரச்சினை. அதுபற்றி இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்படாமல் இருப்பது என்பதை வருத்தத்திற்குரிய உரையிலே சொல்லப்படாமல் இருப்பது என்பதை வருத்தத்திற்குரிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இடைக்காலத் தீர்ப்பு நிறைவேற்றப்படுகிறதா என்று கேட்டால், அதிலும் அச்சமும், சந்தேகமும் இருக்கிறது. இந்த ஆண்டு தண்ணீர் வந்ததைப் பற்றி நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாக வெளியிட்டார்கள். அதிலே, இடைக்கால ஒப்பந்தத்தின் அடிப்படையிலே கர்நாடக அரசு நமக்குத் தண்ணீர் விடுவதுபோல் இருக்கிறது என்று

22769

[திரு. வை. சிவபுண்ணியம்] [2000 மார்ச் 6

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் செய்தி வெளியிட்டு, அது பத்திரிகையிலே வந்தது. அந்தத் தண்ணீர் நம்முடைய ஒப்பந்தத்தின் அடிப்படையிலே வரவில்லை. அங்கே ஏற்பட்ட வெள்ளம், மழையினுடைய விளைவாக அங்கே வைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையினாலே அனுப்பப்பட்ட தண்ணீர்தானே தவிர, நம்முடைய ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, மாதா மாதம் வழங்க வேண்டுமென்ற அந்த முறையின் அடிப்படையிலே, அந்த அளவின் அடிப்படையிலே தண்ணீர் வந்ததா என்ற பிரச்சினைபற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். அப்படி நம்முடைய தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை என்பதுதான் இதிலே இருக்கிற கருத்தாக இருக்கிறது. ஆகவே, காவிரி நீர்ப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண்பதற்குரிய முயற்சியை உடனடியாக நம்முடைய மாநில அரசும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொள்ள வேண்டும். இதில் மத்திய அரசாங்கம் தலையிட வேண்டும். இறுதித் தீர்ப்பை அளித்து, நமது காவிரிப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளை, விவசாயத்தைப் பாதுகாக்கிற முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

நான் சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே தொடர்ந்து சொல்லி வருகின்ற பிரச்சினை; 1996 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலும், நம்முடைய அரசு கொள்கை விளக்கக் குறிப்பிலும், பாதிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகளுக்குரிய நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று செய்தி குறிப்பிடப்பட்டு இருந்தது. அந்த ஆண்டு வெள்ளம் பாதித்தபோது, நில வரி ரத்துச் செய்யப்பட்டது. கூட்டுறவுக் கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. அதற்குரிய நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற செய்தி குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால், அந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படவில்லை. சென்ற ஆண்டுகூட சட்டமன்றத்திலே பேசுகிறபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், NABARD மூலமாகக் கடன் பெறுவதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன; ஆகவே, இதை நிறைவேற்ற இயலவில்லை என்ற செய்தியைச் சொன்னார்கள். ஆனால், NABARD-ன் மூலமாகப் பல கோரிக்கைகளை, நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நம்முடைய நாட்டிலே உள்ள தேசவுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான



2000 மார்ச் 6] [திரு. வை. சிவபுண்ணியம்]

கோடி ரூபாய் கடன் பெற்று இருப்பவர்களுக்கு நிவாரணம் தரப்படுகிறது; தள்ளுபடி கிடைக்கிறது. ஆனால், விவசாயி பெற்று இருக்கிற கடனிலிருந்து மீள முடியாமல், அவன் தள்ளுபடி பெற முடியாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறதே, இதைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்ன கருத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் அறிய விரும்புகிறோம்.

குறிப்பாக, 1993--94 ஆம் ஆண்டு பெரு வெள்ளம்; 1995--96--லே கடும் வறட்சி; 1997--98--லே திரும்பவும் வெள்ளம். இந்த ஆண்டுகளிலே எல்லாம் கூட்டுறவுக் கடன் ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது; நில வரி ரத்துச் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறபோது, அதே ஆண்டுக்குரிய கூட்டுறவுக் கடனையும், குத்தகைப் பாக்கியையும் செலுத்த வேண்டும் என்று அந்த விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தினால், எங்கிருந்து அதை அவர்களால் செலுத்த முடியும்? இதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறியாதவர்கள் அல்ல. அவர்கள் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்; விவசாயத்தைப்பற்றி நன்கு அறிந்து இருக்கிறவர்கள். பல்வேறு சாதனைகளையும், பல்வேறு காரியங்களையும் செய்து வரலாறு படைத்து இருக்கிறவர்; பெருமைக்கு உரியவர் என்பதை நம்முடைய தமிழகத்திலே சொல்லிக்கொண்டு இருக்கின்றோம். ஆளும் கட்சியா, எதிர்க் கட்சியா, கூட்டணியா, இல்லையா என்ற கருத்துகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டுக்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பான நல்ல குணங்களை எல்லாம், சிறப்பான செயல்பாடுகளை எல்லாம் நாங்கள் நேரடியாகவே பல மேடைகளிலே பொதுவாக பாராட்டி இருக்கிறோம்; பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். அதிலே யாருடைய பகையோ, வருத்தமோ வரும் என்பதற்காகவெல்லாம் நாங்கள் அஞ்சிச் செல்வதில்லை. அப்படி நாங்கள் சொல்லுகிற நிலை இருக்கிறபோது, நம்முடைய முதலமைச்சர் விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனைப் பற்றியும், குத்தகைத் தள்ளுபடியைப் பற்றியும் பரிசீலிக்காமலே இருப்பது மிகப் பெரிய வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் சார்பில் இருக்கிற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தினசரி நெருக்கடி இருக்கிறது. அதேபோல திருச்சி மாவட்டம், இன்னும் பிற மாவட்டங்களிலேயும் இந்தப்பிரச்சினைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு விவசாயக் கடன் சம்பந்தமாக தமிழ்நாடு அரசும், NABARD நிறுவனமும் ஓர் ஒப்பந்தம் செய்து இருக்கின்றன. வறட்சியாக இருந்தாலும் அல்லது வெள்ளமாக இருந்தாலும், எந்தக் காலக் கட்டத்திலும் விவசாயிகளுக்குத் தரப்பட்ட கூட்டுறவுக் கடனை ரத்துச் செய்ய இயலாது என்ற ஒப்பந்தத்தை அன்றைக்கு இருந்த அரசு, NABARD நிறுவனத்தோடு செய்து இருக்கிறது. கடந்த ஆண்டு பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டதால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முழுமையாகக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எண்ணி அவர்களோடு பேசியபோது, NABARD நிறுவன மேலாளர் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. நீங்கள் கடனை ரத்துச் செய்ய இயலாது; கடனை ரத்து செய்து அரசாங்கம் தந்தாலும் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது; ஏற்கெனவே ஒப்பந்தம் அப்படி இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை மீறுவீர்களேயானால், குறைந்த வட்டியிலே உங்களுக்குப் பணம் தர இயலாது என்று அவர்கள் கை விரித்து விட்டனர். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் ஓராண்டுக்குத் தள்ளி வைத்தால், அதில் இருந்து வருகிற தவறுதல் வட்டியாகக் கிட்டத்தட்ட 46 கோடி ரூபாய் அவர்களுக்கு மீதமாகும் என்ற எண்ணம் கொண்டு ஓராண்டு காலம் தள்ளிவைக்கப்பட்டது. ஓராண்டு காலம் தள்ளி வைத்ததைக்கூட அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், அணாவாரி சான்றிதழ் இருந்தால்தான் அதைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அது ஓராண்டு காலம் தள்ளிவைக்கப்பட்டது. ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தப்படி, எந்தவிதத்திலும் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு நம்மிடம் வழிவகை இல்லை. அதனால்தான் தள்ளுபடி செய்யவில்லையே தவிர, நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே, முதலமைச்சர் அவர்களே இதைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை எடுத்து, அந்த முயற்சி பலிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கம் இங்கே சபையிலே ஏற்றுக்கொள்வதாக இருக்கிறது; ஆனால், வெளியிலே இருக்கிற விவசாயிகள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இதை நான் முரண்பட்ட கருத்தாகச் சொல்லவில்லை. நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்கு ஈடுகட்டி, NABARD-க்கு அந்த நிதியைச் செலுத்துமானால், அதை ஏற்றுக்கொள்ள



மறுக்கிறது என்று சொன்னாலே விந்தையாக இருக்கிறது. இந்தக் காசு என்றால் இனிக்கும்; அந்தக் காசு என்றால் கசக்கும் என்று NABARD கருதுகிறதா? நம்முடைய அமைச்சர் சொல்வது, கீழே இருக்கிற சாதாரண விவசாயிகளுக்கு ஏற்புடைய கருத்தாக இல்லை. இதில் ஏதாவது மாறுதல் செய்து நிலைநிறுத்தக்கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டும். இந்தக் கடன் சுமையிலிருந்து விவசாயிகளை மீளச் செய்ய வேண்டும்.

மத்திய அரசு அரிசியின் விலையை உயர்த்தியிருக்கிறது. மாநில அரசாங்கம் அதை ஏற்றப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறது. அரிசியின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆனால், அந்த அரிசியை உற்பத்தி செய்கிற விவசாயிகளினுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேலும் மேலும் கீழே சென்று கொண்டிருக்கிறது. உணவு உற்பத்தி செய்து, இந்த நாட்டுக்கு உணவு படைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையைப்பற்றி, அவர்களுடைய ஏழ்மை நிலையைப்பற்றி, அவர்களுக்கு இருக்கிற கடன் சுமையைப்பற்றி நம்முடைய தமிழக அரசாங்கம்....

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எந்தச் சூழ்நிலையிலும் கூட்டுறவுக் கடனை ரத்துச் செய்வதும் இல்லை, ஒத்திவைப்பதும் இல்லை என்கின்ற அளவிற்கு ஒரு நிறுவனத்தோடு கடந்த கால அரசு கையெழுத்துப் போட்டு, ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இப்போது நம்மிடம் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒப்பந்தம் செய்து கொண்டதை எடுத்து விளக்க வேண்டிய ஆற்றல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு நிச்சயமாக உண்டு. இது சபைக்குத் தெரிகிறது, விவசாயிகளுக்குத் தெரியவில்லை என்கிறார். விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டிய அந்தப் பணியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எங்களுடைய கையை அல்லவா தூக்கி விட வேண்டும்? அதை விட்டுவிட்டு, யார் ஒப்பந்தம் செய்து கொண்டார்களோ அவர்களுடைய கையை அல்லவா தூக்கி விடுகிறீர்கள்! (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதிலிருந்து நான் மாறுபடவில்லை. மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். விவசாயிகள் பெற்றிருக்கிற கடனைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நாடாளுமன்றத்திலே இதைப் பற்றிய விவாதம் வந்திருக்கிறது. அங்கே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அப்படி எந்த ஒரு மாநிலத்திலிருந்தும், கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லி கோரிக்கைகள் எதுவும் வரவில்லை; பல வட மாநிலங்களில் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை இந்த அரசு கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது; பரிசீலிக்கப்படும், என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, திருவாரூர் கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கிற மொத்தக் கடன், வட்டியும், முதலும் சேர்த்து 32 கோடி ரூபாய்தான். அதேபோல, நாகப்பட்டினம் மாவட்ட வங்கியிலே இருக்கிற மொத்தக் கடன், வட்டியும் முதலும் சேர்த்து 11 கோடி ரூபாய்தான். ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்தால் 45 கோடி ரூபாய்தான். தற்போது அந்த மாவட்டங்களில் தூர் வாருகிற பணி செய்கிறபோது, NABARD இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லி, தட்டிக்கழிப்பதற்கு மாறாக மாநில அரசே அந்தக் கடனை ஈடு செய்து, அந்த விவசாயிகளை விடுவிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதுவும் பயிர்கள் பாதிக்கப்பட்ட வருடங்களில் மட்டும்தான் நாங்கள் கேட்கிறோமே தவிர, பாதிக்கப்படாத வருடங்களில் ஒருபோதும் நாங்கள் கேட்கவில்லை. சிறு, குறு விவசாயிகளுக்குத்தான் பிரச்சினை. இன்னும் சொல்லப் போனால், மத்திய அரசிலிருந்து பயிர்க் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக 20 கோடியே 4 இலட்சம் ரூபாய் மாநில அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் மாநில அரசு 6 கோடி ரூபாய் premium கட்டாததனால், அந்தக் கடனைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுசெய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவசாயக் கடனை மத்திய அரசு அனுமதித்து மாநில அரசு சார்பாக 6 கோடி ரூபாய் தரவில்லை என்று சொன்னார். கடந்த 15 நாட்களுக்கு முன்பாக



அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பணம் எல்லாம் அத்தனை மத்திய வங்கிகளுக்கும் தமிழ்நாடு சார்பாக அனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் இவர் கொடுக்கிற காசு இனிக்கிறது, அது கசக்கிறதா என்று கேட்டார். அதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி இப்போது கேட்கிறபோது, மத்திய அரசிலே, நாடாளுமன்றத்திலே மத்திய அமைச்சர் அவர்கள், எந்த மாநிலமும் இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை என்று அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். இங்கிருந்து உணவுத் துறைச் செயலாளர் மும்பை சென்று அங்கிருக்கின்ற மேலாளரைச் சந்தித்துப் பேசினார். அவர்களுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசினார்கள். முதலமைச்சருடைய செயலாளரும் அவர்களோடு பேசியிருக்கிறார்கள். பேசி, அவர்கள் மறுத்துவிட்ட காரணத்தால்தான் ஓராண்டு காலம், கடன் கட்டுவதைத் தள்ளி வைத்தார்கள். அவ்வளவுதானேயொழிய, கேட்காமல் இல்லை.

ஒன்றை நான் மிகப் பெருமையாகக்கூடச் சொல்வேன். இந்தத் துறையைப் பார்க்கிற நாங்கள் இதுசம்பந்தமாக முயற்சி எடுப்பதற்கு முன்பாக, முதலமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு வந்தவுடனே, அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யலாம் என எண்ணி, அவர்கள்தான் அதை முதலில் ஆரம்பித்தார்கள். அது மாத்திரமல்ல. கடந்த கால ஆட்சியிலேகூட 500 கோடி ரூபாயை ஒரே நேரத்தில் தள்ளுபடி செய்ததும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். விவசாயிகளிடம் உங்களுக்கு எந்த அளவிற்கு அக்கறை இருக்கிறதோ, அதேபோல் அக்கறை இருக்கிற முதலமைச்சர்தான் இங்கிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை என்னவென்றால் NABARD விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனை ரத்துச் செய்ய ஒப்புக்கொள்ளவில்லை, அதற்குரிய ஒப்பந்தம் இருக்கிறது என்றுதான் மாநில அரசின் சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் இங்கே குறிப்பிட விரும்புவது, பொது மக்களின் பிரதிநிதிகள் என்கிற முறையில் விவசாயிகளுக்கு ஏற்படுகிற துயரம் என்ன என்பதைப் பிரதிபலிக்கிறோம். இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், மத்திய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையிலே,

[திரு. கே. சுப்பராயன்] [2000 மார்ச் 6

உணவு உற்பத்தி குறைந்திருப்பதாக மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி குறையக் காரணமே—உணவு உற்பத்தி செய்வது என்பது கட்டுப்படியற்ற தொழில் என்று விவசாயிகள் கருதுவதாலும், கட்டுப்படியாகவில்லையென்பதாலும் அவர்கள் உணவு உற்பத்தியில் ஊக்கம் குன்றிவிட்டார்கள். எனவே, துயரம் விவசாயிகளைச் சூழ்ந்திருக்கிறது. மரக்கட்டைகளைக் கறையான் அரிப்பதைப்போல, கடனால் அரிபட்டுக் கிடக்கிறார்கள் விவசாயிகள். அவர்களால் இயலாது என்று முறையிடுகிறார்கள். இயலாதவர்களுக்காக முறையிடுகிற இடத்தில் நாங்கள் இருக்கிறோம். அந்த முறையீட்டுக்கு சட்டரீதியாக, ஒப்பந்த ரீதியாகத் தடை இருந்தாலும், அவற்றை மாற்றி அமைக்கின்ற பொறுப்பில் நீங்கள் இருக்கிறீர்கள். அந்த இடத்தில் நாங்கள் இருந்தால் அதுகுறித்து சிந்திக்கலாம். ஆனால், நாங்கள் முறையிடுகிற இடத்தில் இருப்பதால் நீங்கள்தான் முடிவு கட்ட வேண்டுமென்று வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதி ஆதாரம் இடம் தந்தால் முறையீட்டுக்கே அவசியம் இல்லை. NABARD மறுத்தவுடன் முழுக் கடனையும், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி சொன்னதைப்போல 36 கோடி ரூபாய், இன்னும் 11 கோடி ரூபாய், ஆக இந்த 47 கோடி ரூபாயையும் மாநில அரசேகூட ஈடுகட்ட முடியும். ஆனால், அதற்கான நிதி ஆதாரம் இடம் தரவில்லை. இடம் தருமேயானால் நிச்சயமாக அதைச் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது. இடம் தருவதற்கான வழிவகைகளையும் இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். விவசாயிகள் படும் துயரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற அரசாக இந்த அரசு இருக்காது. ஏனென்றால் இது தஞ்சாவூர் அரசு. (பலத்த சிரிப்பு) (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஞானசேகரன், அது முடிந்துவிட்டது, நீங்கள் உட்காருங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** I am on a point of order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** Point of order-க்கு அனுமதி இல்லை. திரு. ஞானசேகரன், உட்காருங்கள். முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள் உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள்.



2000 மார்ச் 6]

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு நிமிடம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி.

**THIRU C. GNANASEKARAN:** I am on a point of order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** point of order-க்கு இடம் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** என்னுடைய நேரம் போய்க் கொண்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** இடையில் நான் பேசியவுடன் நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, Point of order என்றால் அனுமதிக்கலாம். ஆனால், கேட்டது point of order இல்லையென்றால் நடவடிக்கைக் குறிப்பில் ஏறாமல் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அவையினுடைய நடவடிக்கையை ஒழுங்குபடுத்துவதற்காகச் சொல்லுகின்றேன், இது point of order அல்ல. ஆகவே, அவையின் நடவடிக்கைக் குறிப்பில் இது ஏறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, உறுப்பினர் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய நலன் பாதிக்காத வகையிலே இந்த அரசு சிந்தித்துச் செயல்படும் என்று

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2000 மார்ச் 6

அறிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). நிறைய குறுக்கீடுகள் வந்துவிட்டன. ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன். ஆகவே, வருகிற நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு நல்ல தீர்வை வழங்குவார்கள் என்று ஆவலோடு நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் காத்திருக்கிறார்கள். நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குத்தகை விவசாயிகளுடைய பிரச்சினையும் இதையொட்டியே இருக்கிற காரணத்தாலே, அவர்கள் குத்தகை பாக்கிக்காக நிலத்தை விட்டு வெளியேற்றப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகிற நிகழ்வுகளைத் தடுக்க வேண்டும். குத்தகை பாக்கிகள் அனைத்தையும் ரத்து செய்து வரும் ஆண்டிலிருந்து அதை நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே கோவில், மடம் ஆகியவற்றின் நிலங்களைப்பற்றி நாம் பேசினோம். அதிலே பல்வேறு கருத்துகள் வந்தன. பின்னாலே எல்லோரையும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவை அறிவிப்போம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், இந்த ஆளுநர் உரையிலே அதுபற்றிய விவரங்கள் வரவில்லையே. அதுபற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள்? அதையும் இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுத்தால் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அரசுதான் புதுவிதமாக அல்ல, நல்லவிதமாக கடந்த ஆண்டு வர்த்தகத் துறையிலே உள்ளவர்களையெல்லாம் அழைத்து அவர்களிடத்திலே பட்ஜெட்டுக்கு முன்பு பேசி கருத்துகளை அறிந்து கொண்டு பட்ஜெட் தயாரித்தது. இந்த ஆண்டு மேலும் ஒரு படி சென்று விவசாயிகளையும் அழைத்து அவர்களிடத்திலேயும் கருத்துகளைத் தெரிந்துகொள்வது என்று முடிவு செய்து, வருகிற 11 ஆம் தேதியும், 12 ஆம் தேதியும் ஒரு நாள் வர்த்தகர்களுடைய கூட்டமும், ஒரு நாள்



2000 மார்ச் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

விவசாயப் பிரதிநிதிகள் கூட்டமும் நடைபெற இருக்கிறது. அப்பொழுது இந்தக் கருத்துக்களையெல்லாம் ஆராயலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–45*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. இந்த இரண்டு பிரச்சினைகளையும், அதோடு குத்தகை விவசாயிகள் பிரச்சினையையும் சேர்த்து தீர்வு காண்பதற்கான நல்ல முடிவை எதிர்பார்த்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அடுத்து, திரு. பெ.சு. திருவேங்கடம்.

***திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை வரவேற்று நான் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். கடந்த 2, 3 தினங்களாக இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது ** என்கிற ஓர் எண்ணம் உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற நிலையிலே விவாதங்கள் அமைந்தன. முதல் நாளே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது நான் point of order எழுப்புகிறேன். நம்முடைய திருவேங்கடம் அவர்களுடைய பேச்சில் ** என்று சொன்ன அந்தப் பகுதியை— நான் அதற்குக் காரணம் சொல்ல விரும்பவில்லை—நீக்கிவிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அது இந்தச் சட்டமன்றத்திற்கு சரியான முன்னுதாரணமாக இருக்க முடியாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய கருத்தை ஏற்று உறுப்பினர் குறிப்பிட்ட அந்தச் சொற்கள் சபைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகின்றன.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவாதங்களைப் பார்க்கின்றபோது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதல் நாளே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், R.S.S.-ஆக இருந்தாலும் அல்லது நம்முடைய B.J.P.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [2000 மார்ச் 6

ஆக இருந்தாலும், அவர்களோடு தோழமையாக இருந்தாலும், எந்த வகையிலும் நம்முடைய கொள்கையை இம்மியளவும் விட்டுக் கொடுக்காமல், குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் நான் அரணாக இருப்பேன் என்று அவையில் சொல்லியும்கூட நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள், 'நீங்கள் கொள்கையை அடகு வைத்துவிட்டீர்கள்' என்று குற்றம் சாட்டினார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1971- லே மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒரு நிலையான ஆட்சியை இந்தியாவிலே ஏற்படுத்துவதற்கு கலைஞர் அவர்கள்தான் உறுதுணையாக இருந்தார்கள். ஆனால், அந்த அம்மையாருக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டு, நாட்டிலே நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்திய உடனே அதை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்தத் தீர்மானத்தை நீங்கள் ஆதரிக்காவிட்டாலும், எதிர்க்காமல் இருந்தால்கூடப் பரவாயில்லை என்று கேட்டும் நம்முடைய முதல்வர் அவர்கள் அதை மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள். ஆனால், அன்று கொள்கைக்காக, கொள்கையைக் காப்பாற்றுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் எப்படிப்பட்ட சோதனைகளைச் சந்தித்தது என்பதை நாடு அறியும். நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு வீராசாமி அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு துரைமுருகன் அவர்கள், நம்முடைய மத்திய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் எல்லாம் அப்போது ஓராண்டு காலம் சிறைகளிலே வாடினார்கள்.

அதுமட்டுமல்ல, அவர்களைப்போன்ற முன்னணித் தலைவர்கள், பல்லாயிரக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், தோழர்கள் எல்லாம் சிறைகளிலே வாடினார்கள். தன் கொள்கையைக் காப்பாற்றுவதற்காக எந்த நெருக்கடியையும் சமாளிக்கின்ற விதத்திலே, ஆட்சியை இழந்து, தன்மீது விசாரணை கமிஷன் வருகின்ற நிலை ஏற்பட்டாலும் உறுதிப்பாட்டோடு எந்தக் காலத்திலேயும் விளங்கியவர்கள்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் என்பதை நம்முடைய தோழர்கள் நன்கு அறிந்தும் 'நீங்கள் அடகு வைத்துவிட்டீர்கள்' என்று சொல்லுகின்றபோது நமக்கு வேடிக்கையாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது. எப்போதுமே திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையை அடகும் வைக்காது. அதேநேரத்தில் இன்னொருவருடைய கொள்கையை அடகும் பிடிக்காது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2000 மார்ச் 6] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

கடந்த 4 ஆண்டு காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த அரசு தெளிவான பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நம்முடைய மாநிலத்திலே செயல்படுத்தியிருக்கிறது. அதை யாரும் மறந்துவிட முடியாது. நான் ஒன்றிரண்டை இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரத் திட்டம், முதியோருக்கு ஏற்கெனவே உதவித் தொகை வழங்கி வந்தாலும், அதை 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், எவ்வளவு பேர் கேட்டாலும் அவ்வளவு பேர்களுக்கும் வாரி வழங்குகின்ற அரசாக இப்போது நம்முடைய முதல்வர் அவர்களுடைய இந்த அரசு விளங்குகிறது.

அதேபோல, வருமுன் காப்போம் திட்டம். இங்கேகூட அதுபற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். என்னுடைய தொகுதியிலே இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது நூற்றுக்கணக்கான ஏழை விவசாயிகள், ஏழை எளிய மக்கள், இந்தத் திட்டத்தில் பங்குகொள்ள வந்ததைப் பார்த்து, நானே ஆச்சரியப்படுகின்ற நிலையிலே, மக்கள் வந்திருந்து மருத்துவ முகாம்களில் தங்களைப் பரிசோதித்துக் கொண்டார்கள். அதேபோல கால்நடைப் பராமரிப்புத் திட்டம், திருமண உதவித் திட்டம், உழவர் சந்தை திட்டம், இவற்றையெல்லாம் வரவேற்க மனம் இல்லை என்றாலும், பல உறுப்பினர்கள் அவற்றைக் குறை சொல்லுகின்ற நிலையில் இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் விவசாயிகள் இவற்றை வரவேற்பதோடு மட்டுமல்லாமல், நுகர்வோரும் அதைவிட அதிகமான முறையிலே வரவேற்கிறார்கள். அதுமட்டுமல்ல, திருவண்ணாமலையிலே இந்தத் திட்டம் மிக நல்லமுறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் கேட்டால், பொது மக்கள் இன்னொரு பகுதியிலே உழவர் சந்தையை நீங்கள் ஆரம்பியுங்கள், இதிலே மக்கள் சென்று பயன்பெற முடியாத அளவுக்குக் கூட்டம் இருக்கிறது என்று கேட்கின்ற அளவுக்கு, இப்போது உழவர் சந்தை வெற்றிகரமாக நடந்து, இந்த அரசுக்கு மிகப் பெரிய பெருமையாக விளங்குகிறது.

*பிற்பகல் 12–50*

அடுத்து, கிராமப்புற மக்கள் பயன்பெற mini bus திட்டம். இந்தியாவிலே முதன்முதலாக குடிசை மாற்று வாரியத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி இப்போது அதை நல்லமுறையிலே செயல்படுத்திக்

கொண்டிருக்கிறார்கள். சாதாரண சிறிய கிராம மக்கள்கூட பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைப் பெற வேண்டும் என்பதற்காக, இப்போது அனைத்துக் கிராமங்களிலுமே குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் அந்தப் பணி செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள் இலவசமாகவே மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அறிவிப்பு. அது மட்டுமல்ல; விவசாயிகள் ஏற்கெனவே மின் இணைப்பைப் பெற்றிருக்கின்ற மின் மோட்டாருடைய சக்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று விரும்பினால், அதற்கும் deposit தொகையை ரத்துச் செய்து, நீங்கள் இலவசமாகவே விண்ணப்பித்து, அந்த இணைப்பில் மின்மோட்டாருடைய சக்தியை அதிகப்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற விவசாயிகள் பாராட்டுகின்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசாங்கம் இப்போது செயல்படுத்தி வருகிறது. மனைவரியை ரத்துச் செய்த திட்டம்; பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசமாக bus pass வழங்கிய திட்டம்; படிக்கின்ற மாணவர்களுக்கான சாதிச் சான்றுகளை அந்தந்த பாடசாலையே பெற்று, பாடசாலையே மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற திட்டம்; ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைகள் அல்லது தொகுப்பு வீடுகள் கட்டுகின்ற திட்டம்; 20 வருடம் விவசாயிகள், ஏழையெளிய மக்கள். புறம்போக்கு நிலத்தை அனுபவித்திருப்பார்களேயானால், அரசுக்குத் தேவையில்லையென்றால், அவர்களுக்கு பட்டா வழங்குகின்ற திட்டம்; சாலைப் பணியாளர்கள் 10,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்த ஒரு நல்ல திட்டம்; பாதிக்கப்பட்ட முன்னாள் கிராம நிர்வாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கிய திட்டம்.

அடுத்து, அய்யன் திருவள்ளுவர் அவர்களுக்கு சிலை அமைத்த திட்டம்; தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளும் அய்யன் திருவள்ளுவர் பெயரால் நூலகம் அமைத்து, ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே செயல்படுத்துகின்ற திட்டம்; கிராமச் சாலைகள் நல்லமுறையிலே பழுதுபார்க்கப்பட வேண்டும் என்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், O.D.R. என்று சொல்லப்படுகின்ற சாலைகளைப் பழுதுபார்க்க 400 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்தப் பணிகள் வேகமாக நடைபெறுகின்ற ஒரு திட்டம்; தமிழ்நாட்டில் ஏற்கெனவே இந்த நான்கு ஆண்டு காலத்தில் 300–க்கும் மேற்பட்ட மேம்பாலங்கள் கட்டி முடிகின்ற நிலையில் அல்லது கட்டுகின்ற நிலையில் இருக்கின்ற அருமையான திட்டங்கள்; 200-க்கும் மேற்பட்ட



தொடக்கப் பாடசாலைகள் தொடங்கி கிராமங்களில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற ஒரு திட்டம்; பொதுப் பணித் துறையில் அணைகள் கட்டுகின்ற ஒரு திட்டம்; 40,000 ஆசிரியர்களுக்கு seniority அடிப்படையிலே தமிழகத்திலே வேலைவாய்ப்பு அளித்திருக்கின்ற மிகப் பெரிய பணி; தொழில் துறையில் முதலிடம் பெற்று நம்முடைய மாநிலம் சிறந்து விளங்குகின்ற வகையில் திட்டம்-- இப்படி எவ்வளவோ திட்டங்களில் நான் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டினேன்.

பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செம்மையாகச் செய்து கொண்டிருந்தாலும், நம்முடைய நண்பர்கள் இதிலே நிறைவு காணாமல், குறை கண்டுபிடிக்கின்ற நிலையிலே இருந்தார்கள். இந்த நிலையிலேதான் நாம் நெல்லிக்குப்பம், அறந்தாங்கி, திருச்சி-2-லே மக்களைச் சந்தித்தோம். தமிழகத்திலே நடைபெறுகின்ற கலைஞருடைய ஆட்சி சீராக, சிறப்பான முறையிலே நடைபெறுகின்றது; இந்த ஆட்சிக்கு நாங்கள் நற்சான்று தருகிறோம் என்று மூன்றிலேயும் மக்கள் வெற்றியைத் தேடித் தந்தார்கள். நீங்கள் பெருந்தன்மையுடன் அந்த வெற்றியையும் வாக்களித்த வாக்காளர்களையும் பாராட்டாமல், அதிலேயும் குறை கண்டுபிடித்தீர்கள்.

*பிற்பகல் 12-55*

முதல்வர் சென்றார், அமைச்சர்கள் சென்றார்கள், வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்று சொல்கிறார்கள். நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1963-ல் திருவண்ணாமலையிலே ஓர் இடைத்தேர்தல் நடைபெற்றது. அப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அந்தத் தேர்தலில் தி.மு.க.சார்பிலே பணியாற்றியவர்களில் நானும் ஒருவன். அமைச்சரவையிலே இருந்த பெரியவர் பக்தவத்சலம் ஒருவர் தவிர மீதி எல்லா அமைச்சர்களும் திருவண்ணாமலையிலே தங்கியிருந்தார்கள். பாடசாலைக் கட்டடம் திறப்பார்கள். அரசு நிகழ்ச்சியாக இருக்கும். அங்கேயும் காங்கிரசுக்கு வாக்கு கேட்டார்கள். அதேநேரத்திலே சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலைக்குக் குடிதண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தையும் காங்கிரஸ் பொதுக் கூட்டத்திலேயே அறிவித்தார்கள். இப்படி முறைகேடாக பிரச்சாரங்கள் நடந்தாலும் திருவண்ணாமலை வாக்காளப் பெருமக்கள் அன்றையதினம் தி.மு.க.-விற்கு வாக்களித்தார்கள். அந்தத் தேர்தலை பத்திரிகைகள் இது தி.மு.க.-விற்கும், காங்கிரசுக்கும்

நடைபெறுகிற போட்டி அல்ல, கலைஞருக்கும், காமராஜருக்கும் நடைபெறுகிற போட்டி என்று எழுதின. அப்படி நடைபெற்றபோது கலைஞர்.....

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஒருபோதும் தன்னுடைய கடமையிலேயிருந்து தவறியதே கிடையாது. ஒரு திட்டம் வரும் என்று சொல்வது தவறான முன்னுதாரணம் அல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** பிரச்சாரத்திற்குப் போவது அவர் கடமைதான். பிரச்சாரத்திற்குப் போனார் என்றுதான் சொன்னார். அதைக் குற்றம் என்று சொல்லவில்லை. அதைக் குறை சொல்லவில்லை. போனார் என்றுதான் சொன்னார். சம்பவத்தைச் சொன்னார் அவ்வளவுதான். உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே பேசப்பட்ட கருத்து, நம்முடைய இன்றைய முதலமைச்சர் கலைஞர் இடைத் தேர்தலிலே போய் கலந்து கொண்டார், பேசினார், என்று மாற்று கட்சியினர் சொல்கிறார்கள். அந்தக் காலத்தில் பெருந்தலைவர் காமராஜரேகூட இடைத் தேர்தலுக்குச் சென்றார் என்பதற்காகத்தான் அது எடுத்துக்காட்டப்பட்டது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நானும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களை மதிக்கின்றவன்தான். நடந்ததைத்தான் நான் சொல்கிறேன். திரு. அப்பாவு அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுக்கு ஒருவேளை வயதின் காரணமாகத் தெரியாமல் இருக்கலாம். நடந்தவற்றைச் சொல்கிறேன். தேர்தலிலே முதல்வர் அவர்கள் அப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்று அப்போது பத்திரிகைகள் எழுதின. அதை கலைஞருக்கும், காமராஜருக்கும் நடக்கும் போட்டி என்றார்கள். திருவண்ணாமலை வென்றது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அப்போது மாநில அரசியலைவிட்டு விலகி மத்திய அரசியலுக்குச் சென்றார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.



பிறகு தருமபுரி தேர்தல் வந்தது. அதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்போது பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அதில் கலைஞருக்கும், காமராஜருக்கும் தான் போட்டி என்றார்கள். கலைஞர் வெளியே இருந்தால் அந்தத் தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றிபெற முடியாது என்று கலைஞரை தனிமைச் சிறையிலே பாளையங்கோட்டையிலே தூக்கிப் போட்டுவிட்டு தேர்தலை நடத்தி காங்கிரஸ் வென்றது. இதெல்லாம் பழைய சரித்திரம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவு இருக்கும். அதை அவர்கள் பார்த்திருப்பார்கள். தேர்தல்களிலே ஒரு கட்சியின் சார்பாக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொள்வதிலே தவறில்லை. தவறான முறையிலே நடந்துகொண்டால் அதைத் தண்டிக்க நமக்கு உரிமையிருக்கிறது அல்லது எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது இடைத்தேர்தலுக்காக ஏற்பட்ட கூட்டணி என்றீர்கள். வருகிற பொதுத் தேர்தலில் இந்தக் கூட்டணி வெல்லும் என்று இப்போது சொல்கிறீர்கள். அதிலே ஜனநாயகத்தில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொன்றைச் சொல்லலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் நான் மெத்த அன்போடு, பண்போடு உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் நாங்கள் எம்.ஜி.ஆர். ஆட்சியை அமைப்போம் என்றார்கள். அண்ணாவால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சியை கலைஞர் தலைமையில் தொடர்ந்து பிடிப்போம் அல்லது அமைப்போம் என்று நாங்கள் சொல்கிறோம். நீங்கள் காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்றீர்கள். அது உங்களுடைய உரிமை. அதை நான் மறுக்கவில்லை. ஜனநாயகத்தில் எல்லா கட்சிகளுக்கும் நம்பிக்கை வேண்டும். அந்தப் பொறுப்பு வேண்டும். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இப்போது திடீரென்று தேர்தலுக்கு எங்கள் கூட்டணி என்று சொன்னால் நீங்கள் மக்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டாமா? ஒன்று, நீங்கள் காமராஜர் ஆட்சியை விட்டுவிட்டீர்களா அல்லது அவர்கள் எம்.ஜி.ஆர். ஆட்சியை விட்டுவிட்டு உங்களை ஆதரிக்கிறார்களா என்பதை பொதுமக்களுக்கும் வாக்காளர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய மிகப்பெரிய கடமை த.மா.கா-விற்கு உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். அதேநேரத்தில் நாங்கள் சொல்லிய திட்டங்களை எல்லாம் நீங்கள் ஆதரிக்கிறீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வர விரும்புவதை மறுக்க

எனக்கு உரிமை இல்லை. ஆனால் பொதுக்கூட்டத்திலே ஆதரிக்கிறீர்கள். காலையிலே எழுந்தவுடனே திடீரென்று இது மக்கள் விரோத அரசு என்கிறீர்கள். இது அடகு வைக்கின்ற கட்சி என்கிறீர்கள். தயவுசெய்து நீங்கள் உணர்ந்து பாருங்கள்.

*பிற்பகல் 1-00*

அன்றைய முன்னாள் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள், முன்னாள் ஆளுநர் திரு. சென்னா ரெட்டி அவர்கள், அதேபோல் இன்றைய பிரதமர் திரு. வாஜ்பேயி அவர்கள், உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்கள், ஏன்? இந்தத் தேர்தலிலே, விழுப்புரத்திற்கு வருகை தந்த திருமதி சோனியா காந்தி அவர்கள் ஆகியோருடைய நிலை ஏற்கெனவே, என்ன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான்கு ஆண்டு காலம் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் உங்களை எவ்வளவு மிகப் பெரிய மரியாதையோடு, கௌரவத்தோடு நடத்தினார்கள் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உள்ளத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டும். எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட மிக வருத்தம், நம்மையெல்லாம் கவனிக்க மாட்டேன் என்கிறாரே என்று. முதல்வர் அப்படி என்றால், அமைச்சர்கள்கூட நாங்கள் ஒரு விண்ணப்பத்தை எடுத்துச்சென்றால் வாங்க மாட்டார்கள். அந்த நிலை இருந்ததால் நாங்களேகூட சில நேரங்களில் விண்ணப்பங்களை அவர்களிடம் கொடுத்து அமைச்சர்களிடம் கொடுத்த நிலைமைகூட உண்டு. அப்படி நாங்கள் உங்களைப் பண்போடு, அன்போடு, மரியாதையோடு நடத்தினோம். அதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, 'கூடா நட்பு' என்றார்கள். ஒரு சிறிய கதையை நான் சின்ன வயதிலே படித்ததைச் சொல்கிறேன். ஒரு குளத்தங்கரையில் ஒரு எலி ஒரு வளை அமைத்து வாழ்ந்து கொண்டிருந்தது. குளத்தின் படிக்குப் பக்கத்திலே அந்த வளை இருந்த காரணத்தினாலே, ஒரு தவளை சில நேரங்களிலே அங்கே வந்து ஓய்வு எடுப்பதுண்டு. அந்தத் தவளை அங்கிருந்த எலியைப் பார்த்து, இருவரும் நட்பு கொள்ளலாமா என்று கேட்டது. உடனே அதுவும் ஒப்புக்கொண்டது. நம்முடைய நட்பு பலமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், நாம் இருவரும் ஒரு கயிற்றிலே கட்டிக்கொள்ளலாம்; அப்போதுதான் நட்பு இறுக்கமாக இருக்கும் என்று சொல்லி, இரண்டும் கட்டிக் கொண்டன. உடனே, அங்கு ஆளரவம்





கேட்டது. கேட்டவுடனே தவளை தன்னுடைய நிலையை மாற்றிக்கொள்ளாமல், நண்பருக்கு என்ன ஆகுமோ என்றுகூட நினைத்துப் பாராமல், குளத்திலே எகிறி குதித்துவிட்டது. குளத்தில் குதித்ததால், அந்த எலியினுடைய நிலை என்னவாகி இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

*(திரு. மு. அப்பாவு, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** நான் முடித்து விடுகிறேன். இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னதைபோன்று நீங்கள் கூடா நட்பிலே சேர்ந்து இருக்கிறீர்கள். இப்போதுகூட 2001-லே ஆட்சியை அமைப்போம் என்கிறீர்கள். பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக நாட்டுக்கும், இந்த அவைக்கும் மெத்தப் பணிவன்போடு சொல்லிக்கொள்வது, 2001-லேயும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி அமைக்கும். மீண்டும் ஐந்தாவது முறையாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வராக விளங்குவார்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எந்தச் சக்தியாலும் ஒன்றும் செய்ய இயலாது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, அண்ணாவினுடைய புகழ் ஓங்குக என்று கூறி அமைகிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி. நிஜாமுதீன். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள், ஒருவர்பின் ஒருவராக. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் பேசுகிறபோது, தவளைக் கதையையும் எலிக் கதையையும் சொன்னார்கள். கூடா நட்பு என்று சொன்னார்கள். நீங்கள் இப்போது பாரதிய ஜனதாவோடு வைத்துக்கொண்டிருக்கிற நட்புதான் கூடா நட்பு. அந்த நட்பு கொண்டிருக்கிற நீங்கள், எங்களுடைய மக்கள் தலைவர் அவர்கள், இது மக்கள் விரோத அரசு என்ற சொன்ன கருத்தைச் சொல்லி, சில

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மார்ச் 6

திட்டங்களைச் சொன்னீர்கள், மக்கள் விரோத அரசு என்பதற்கு, எங்களுடைய தலைவர் தன்னுடைய அறிக்கையிலே எப்படியெல்லாம் இந்த ஆட்சியிலேகூட முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பட்டியலிட்டுக் காட்டினார்கள். அதையெல்லாம் நீங்கள் படித்துப் பார்க்காமல், நாங்கள் சொன்னது தவறு என்கிற முறையில் சொல்லி, இப்போது நீங்கள் வெற்றி பெற்றதற்காக மட்டுமே ஏதோ ஒரு பெரிய அளவிலே சாதனை படைத்து, மீண்டும் வருவதாகச் சொன்னீர்கள். நாங்களும் நம்பிக்கையோடு இருக்கிறோம். இப்போது நாங்கள் எடுத்திருக்கிற நிலையைப் பார்க்கிறபோது, நிச்சயமாக கர்மவீரர் காமராஜருடைய ஆட்சியை எங்களாலே அமைக்க முடியும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் பேசியது, ஓர் உதாரணத்திற்காகவே தவிர, யாருடைய நட்பு யாருக்கு கூடா நட்பாக இருந்தாலும், விளைவுகள் நன்றாக இருக்காது என்ற அந்த அடிப்படையிலே பேசப்பட்டது. அது அவருடைய கருத்து என்ற முறையிலே சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதேபோல், திரு. ஞானசேகரன் அவர்களும் திரும்பச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஒருவேளை நீங்கள் கூடா நட்பு என்ற வார்த்தையை விரும்பாவிட்டால், உங்களுடைய நட்பு, கூடும் நட்பு என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். (பலத்த சிரிப்பு)

பிற்பகல் 1-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே என்னைப் பேச அனுமதித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பல்வேறு விஷயங்கள் விடுபட்டிருப்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, சிறுபான்மையினர்கள் கடந்த பல ஆண்டுகளாக அரசு வேலை வாய்ப்புகளிலே, கல்லூரிகளிலே, அரசு சார்ந்த நிறுவனங்களிலே, முறையான இட ஒதுக்கீடோ அல்லது பிரதிநிதித்துவமோ வேண்டுமென்று குரல் கொடுத்து வருகின்றார்கள். அவர்கள் குரல் கொடுத்து



2000 மார்ச் 6] [திரு. ஜி. நிஜாமுதீன்]

வருகின்றார்களேயொழிய, எந்தக் காலத்திலும், முறையை மீறியோ வரம்பு மீறியோ, எந்தவிதத்திலும் போராடியதில்லை. முறையான பிரதிநிதிகளைக் கொண்டு, முறையாக இந்த அவையில் பிரச்சினைகளை எழுப்புவதும் அல்லது ஆளுகின்ற முதல்வரிடமோ அல்லது அவருடைய பிரதிநிதிகளிடமோ தங்களுடைய வாதங்களை வைப்பதுமாக தங்களுடைய காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி நல்லவகையிலே போராடியும், இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. இந்த நிலை சில கொடுமையான பாதகங்களை அல்லது வேலையில்லாத இளைஞர்கள் மத்தியில் சில தீய எண்ணங்களைத் தோற்றுவிக்கக்கூடும். இதனை இந்த அரசு நிச்சயமாக உன்னிப்பாக கவனித்து இதற்காக ஆவன செய்ய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் வேலையில்லாத இளைஞர்கள் முதலிலே நல்லமுறையிலே போராட முன் வருவார்கள். தொடர்ந்து சில தீய சக்திகளின் வழிகாட்டுதலின் பேரில் அவர்கள் தீய வழிகளில் செல்லக்கூடும். இதற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சற்றுமுன் இங்கே நடந்த வாதத்தின் அடிப்படையில் சொல்கிறேன். அண்மையில் மதுரை Wakf Board கல்லூரியிலே 5 பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். அது முழுக்க முழுக்க சிறுபான்மையினர் கல்லூரி. அதிலே ஒரு முஸ்லிமுக்கு மட்டும்தான் அந்தப் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சியவர்கள் பிற இனத்தவர்கள். பிற இனத்தவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதல்ல, பதவி கொடுக்கக்கூடாது என்பதல்ல, முஸ்லிம்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அந்தக் கல்லூரியிலேகூட ஒருவருக்குத்தான் வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிலை, இந்தச் செய்திகள் எல்லாம்......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மொத்தம் இருக்கின்ற ஆசிரியர்கள் எவ்வளவு பேர், இந்த முறை நியமிக்க நேரிட்டவர்கள் எத்தனை பேர், அதிலே ஏதேனும் சட்ட விரோதமாகவோ அல்லது ஏற்கெனவே உள்ள விதிமுறைகளுக்கு மாறாகவோ நடந்திருந்தால், அரசு நிச்சயமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இதைச் சட்ட விரோதம் என்றோ அல்லது மரபுக்கு முறையாக அல்ல என்றோ நான் இதைக் குறிப்பிடவில்லை. சிறுபான்மையினருக்கு முறையாக வழங்கப்பட வேண்டிய இட ஒதுக்கீட்டை, பிரதிநிதித்துவத்தைத் தாருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** ஒரு கல்லூரி, சிறுபான்மையினருக்காக நடத்தப்படுகின்ற கல்லூரியென்றாலும்கூட, கல்லூரி நிர்வாகத்திலே இடம் பெறுகிறவர்கள் ஆசிரியர்களை எந்த முறையில் நியமிக்க வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. இப்போது நடைபெற்ற நியமனத்தைப் பொறுத்தவரையில் விதிமுறையிலே தவறு செய்திருப்பார்களேயானால், அதுகுறித்து நாம் குற்றம் சாட்டலாம். எதிர்காலத்திலே வேறு விதிமுறைகள் கொண்டுவர முடியுமானால் அது வேறு பிரச்சினை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அதாவது வேலையில்லாதவர்கள் இதுபோன்ற நிலைகளை, யோசித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். நமது கல்லூரிகளில் நமக்கு இடம் கொடுக்கவில்லையே என்று பொதுவாக சிந்திக்க நேரிடும். இது அவர்களைத் தவறான பாதையில் திசை திருப்பி, முறையான போராட்டங்கள்......

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தின் அடிப்படையிலே பேசுகின்றார்கள். Wakf வாரிய நிர்வாகத்திலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரியில் பணியாளர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், 95.5% சிறுபான்மையினர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான். இப்போது Librarian, அதைப்போலவே Economics Lecturer, இரண்டு Sweepers, ஒரு Typist சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். மார்ச் மாதத்திற்குள்ளே அவற்றை fill-up பண்ணவில்லையென்று சொன்னால் surrender செய்ய வேண்டும். ஆங்கிலத்திற்கும் மற்றவற்றிற்கும்கூட முறையான தகுதியின் அடிப்படையிலே, norms அடிப்படையிலே, அந்தக் குழுதான் போட்டிருக்கிறது. உத்தமபாளையம் கருத்த ராவுத்தர் கல்லூரியிலே இந்துக்கள் வேலை பார்க்கிறார்கள். அதுபோலவே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல New College-லே, SIET--யிலே வேலை பார்க்கிறவர்கள் முறைப்படிதான் வேலை பார்க்கிறார்கள். பழனியாண்டவர் கோவில், அறநிலையத் துறை சார்பாக நிர்வகிக்கப்படுகின்ற இடம், அங்கே இந்துக்கள் மட்டுமே வேலை பார்க்கவில்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** முஸ்லிம் மட்டும்தான் வேலை பார்க்க வேண்டுமென்று எந்தவிதத்திலும், அதற்காக வாதிடவுமில்லை, அது முறையென்று நான் சொல்லவும் இல்லை. நான் குறிப்பிடுவது



என்னவென்றால், இதுபோன்று இட ஒதுக்கீடுகள் வழங்கப் படவில்லையென்றால் நிகழ்வுகளைத் தவறாகப் புரிந்துகொண்டு தவறான முறையிலே மக்கள் போராட நேரிடும். சிறுபான்மையினர், புரட்சியிலே கூட இறங்க நேரிடும். அதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்றுதான் சொல்கிறேன். நான் நாகூரிலே ஒரு பள்ளியிலே Correspondent-ஆக இருக்கிறேன். நான் நிர்வகிக்கக்கூடிய என்னுடைய பள்ளியிலேகூட பெரும்பாலான இந்துக்கள் வேலை செய்கிறார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதை நான் தவறு என்றும் சொல்லவில்லை.

*பிற்பகல் 1--10*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 8 பேரில் 5 பேருக்குக் கொடுத்தாகி விட்டது. இஸ்லாமியருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று அதிலே சட்டம் இல்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அப்படி ஒரு சட்டம் கிடையாது. ஆனால், மேல் பதவிகளில் 5--ல் 4 பதவிகள் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது மேல் பதவிகள் இஸ்லாமியர்களுக்கு இல்லை. காரணம் என்ன?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு சில நியதிகளை, சில நெறிமுறைகளை ஏற்படுத்துகிறது. அதன்படி நியமனம் செய்ய வேண்டும் என்பதுதான் நடைமுறை. அதன்படி நியமனம் செய்வதாக இருந்தாலும் உரிய நியமனக் குழு தன்னுடைய discretionary powers என்று சொல்லப்படுவதை சரியாகப் பயன்படுத்தி சமூக நீதியின் அடிப்படையில் முடிவுகள் செய்யப்பட வேண்டும் என்பதுதான். அது நம்மைப் பொறுத்தது. சட்டம் வேறு, விதி வேறு. ஆனால், சட்டமும், விதியும் எல்லா இடத்திலும் நமக்கு நெருக்கடி கொடுப்பதைப்போல், இங்கேயும் நெருக்கடி கொடுக்கப்பட்டு, பல தகுதியுள்ள இளைஞர்கள் விண்ணப்பம் செய்தும், அவர்கள் தேவையில்லாமல் ஒதுக்கப்பட்டு, 4 பேர் மற்றவர்கள், ஒருவர்தான் இந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று வருவதை இந்த அரசோ, டாக்டர் கலைஞரோ, நான் பெரிதும் மதிக்கிற பேராசிரியர் அவர்களோ, சமூக நீதியின் அடிப்படையிலே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதை ஏன் நீங்கள் பயன்படுத்தவில்லை என்றுதான் நாம் சொல்கிறோமே தவிர, விதியின் அடிப்படையிலே 5 பேரையும் நியமிக்கலாம். இவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்பது அல்ல. ஆகையினாலே, முறையாக இந்தச் சமுதாயத்திற்கு வேறு இடத்தில் கிடைக்காததை, இங்கேயாவது கொடுக்க வேண்டும் என்ற கடமை

உணர்வு இல்லாமல் போய்விட்டதே, சமூக நீதி அங்கேயும் வேலை செய்யவில்லையே, நாங்கள் வேறு எங்கே செல்வது என்ற ஏக்கத்தின் அடிப்படையில்தான் கேட்கிறோமே தவிர வேறு காரணம் அல்ல. எந்த வகையிலும் மற்றவர்கள் நியமிக்கப்படக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், கூடுகின்ற இடத்திலேயும் கூடும் என்று சொன்னார்களே, அந்தக் கூடுகின்ற இடத்திலேயும் சரியாக எங்களுடைய குரல் கேட்கப்படவில்லையே என்பதுதான். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் அதை ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கூடுகின்ற இடத்தில் சத்தம் அதிகமாகக் கேட்காது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினையை, உள்ளபடியே ஏதேனும் குறை இருக்குமானால், நடைபெற்ற நிர்வாகத்தில் குறை இருக்குமானால், எழுதி அனுப்பினால், அரசு கவனிக்கும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** சிறுபான்மையினருக்கு முறையான இடஒதுக்கீட்டை இந்த அரசு வழங்க வேண்டும், நிச்சயமாக இதற்காக ஆவன செய்யப்படும் என்று முதல்வர் அவர்கள் பல்வேறு மேடைகளில் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்திருந்தும்கூட அதைப்பற்றிய ஒரு சிறுகுறிப்புகூட இந்த ஆளுநர் உரையிலே வரவில்லை. கடந்த ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும், ரம்லான் மாத நோன்புத் திறக்கும் நிகழ்ச்சியில் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். நிச்சயமாக இதுகுறித்து இந்த அரசு முடிவு செய்யும் என்றும், அதற்கான முயற்சியை எடுப்போம் என்றும் ஒரு வார்த்தைகூட இந்த ஆளுநர் உரையிலே வராதது மிக வருத்தத்திற்குரியது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அடுத்து, காவிரி ஒப்பந்தம். காவிரி ஒப்பந்தம் ஒருபுறம் இருக்க, கர்நாடக அரசு தன்னுடைய பாசனப் பரப்பளவான 11 இலட்சம் ஹெக்டேரை 18 இலட்சம் ஹெக்டேர் என்று விரிவுபடுத்தி தன்னுடைய வேலையை செய்து கொண்டேயிருக்கிறது. இப்படி அது விரிவுபடுத்துவதோடு மட்டும் அல்லாமல், பல்வேறு அணைக்கட்டு திட்டங்களையும் வகுத்து, அதன்மூலம் நமக்கு எதிர்காலத்திலே தண்ணீர் வருகிற நிலை இன்னும் ஐயப்பாடு ஆகுமோ என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்போதும்கூட மழையினால் வரக்கூடிய தண்ணீர்தான் நமக்கு வந்துகொண்டிருக்கிறதேயொழிய அல்லது எஞ்சிய



தண்ணீர்தான் வந்துகொண்டிருக்கிறதேயொழிய முறையாக வர வேண்டிய தண்ணீர் வர இயலாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினையிலே நாம் புரிந்துகொள்ளாமல் சில கருத்துகளை வலியுறுத்தக் கூடாது. மழைத் தண்ணீரா, ஆற்றுத் தண்ணீரா அல்லது வேறு வாய்க்கால் தண்ணீரா என்று தண்ணீரைப் பிரிக்க முடியாது. வருகிற தண்ணீர்தான் வரும். நமக்கு வரவேண்டிய தண்ணீர் வந்துவிட்டால் பின்னர் அவர்களிடத்திலே கேட்டாலும் கூட, இங்கே மேட்டூர் அணையிலே தேக்க முடியாது. ஆகவே, பிரச்சினைகள் ஏற்படுகிறபோது தீர்ப்பதற்கு நடுவர்மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட கர்நாடக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்தவகையில் இறுதித் தீர்ப்புப் பெறவும் நாம் தொடர்ந்து முயற்சிக்கலாம்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அதையும் மீறி விவசாய நிலப் பரப்பளவை கர்நாடக அரசு அதிகரிப்பதை இந்த அரசு கவனத்தில்கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ் பயிற்று மொழி. தமிழ் பயிற்று மொழிக்கு அரசாணை வழங்கப்பட்டு 5 ஆம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு சிறந்த முடிவு எடுத்து அதைச் செயல்படுத்தி வருகின்ற நேரத்திலே, நாம் மேற்கொண்டு சென்று, இந்த அவையிலே அதைச் சட்டமாக மாற்றி தமிழ்தான் 5 ஆம் வகுப்பு வரை கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும் என்ற நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால், ஆங்கிலம் இருந்தால்தான் நாம் முன்னேற முடியும் என்று சொன்னால், ரஷ்யாவிலே ஆங்கிலம் இல்லை, France நாட்டிலே ஆங்கிலம் இல்லை, இப்படி எத்தனையோ நாடுகளில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நாம் இந்த நிலையில் அடுத்தவர்களை நம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. அடிப்படைக் கல்வியை 5 ஆம் வகுப்பு வரை நாம் மற்ற மொழியை வெறுக்காத நிலையிலே தமிழையும் வைத்துக்கொண்டு, தமிழையும் ஒரு பயிற்று மொழியாக ஆக்க வேண்டும். அதோடு சிறுபான்மை மொழியையோ அல்லது மாற்று மொழியையோ சேர்த்து நீங்கள் கற்றுக்கொள்ளலாம் என்ற நிலையைச் சட்டமாகக் கொண்டு வர வேண்டும். அதன்மூலம் இந்தப் பிரச்சினைகளும், குழப்பங்களும் தீரும் என்ற நிலையிலே இதைச் சட்டமாக்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நிறைய குறுக்கீடுகள் வந்துவிட்டன. முக்கியமான பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அவை குறித்துப் பேச வேண்டும். சிறுபான்மையினர் பலர் விசாரணையின்றி சிறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் இப்போது அவையில் இல்லை. இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவரேகூட ஒன்றைக் குறிப்பிட்டார். பல சிறுபான்மை முஸ்லிம்கள், நல்லவர்கள் எல்லாம் உள்ளே இருந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களை எல்லாம் விசாரணை செய்து இந்த அரசே வெளியே கொண்டு வர வேண்டும், அதுகுறித்து நானும் பேச இருக்கிறேன் என்று என்னிடம் குறிப்பிட்டார். அப்படி பல சிறுபான்மையினர்கள் இருக்கிறார்கள். நாம் அனைவரையும் நல்லவர்கள் என்றோ, அனைவரும் தீயவர்கள் என்றோ குறிப்பிட முடியாது. அந்த நிலையில் பலர் விசாரணையின்றி இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே விசாரணையை விரைவுபடுத்தி, முறையான விசாரணை செய்து, அப்பாவி சிறுபான்மையினரை உடனடியாக வெளியே கொண்டுவருவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினைகூட, மக்கள் மத்தியிலே, நம்முடைய மக்கள் எல்லாம் உள்ளே இருக்கின்றார்கள் என்று கொதித்து எழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதுகுறித்து அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, வருமுன் காப்போம் திட்டம் நல்ல நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டது. ஆனால், செயல்பாட்டில் நடைமுறைகள், வழிவகைகள் செய்யப்படவில்லை. பல மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இல்லை. நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லை. பணியிடங்கள் காலியாக இருந்துகொண்டிருக்கின்றன. நிறைய காலியிடங்கள். குறைவான மருத்துவர்கள். அப்படி குறைவாக உள்ள மருத்துவர்களையும் வருமுன் காப்போம் திட்டத்திற்கு என்று மாவட்ட ஆட்சியர் கூப்பிட்டுக்கொண்டு போய்விடுகிறார். அங்கே வந்தவர்களைக் காப்பாற்ற வழியில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, வருமுன் காப்போம் திட்டத்தைச்



செயல்படுத்துவதற்காக மேலும் அதிக அளவில் மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டும். எத்தனையோ ஆசிரியர்களை நியமனம் செய்கிறோம். சாலைப் பணியாளர்களை நியமனம் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது மருத்துவர்கள் நியமனம் மட்டும் ஏன் தேங்கிக்கிடக்கிறது? போதுமான அளவிலே நகர்ப்புறங்களுக்கு மருத்துவர்களை அனுப்பி, இந்தக் காலியிடங்களை நிறைவு செய்து, அதற்காக தனி மருத்துவர்களைப் போட வேண்டும். ஏனென்றால் உடல் முழுவதும் சோதனை செய்யும் திட்டங்களை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், மருத்துவர்கள் போதவில்லை. வருமுன் காப்போம் என்று சொல்லி, வந்தவர்களைக் காப்பாற்ற வழியில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நல்ல திட்டத்தை செயல்படுத்துவதற்குப் போதியவழி முறைகளையும், நடைமுறைகளையும் உருவாக்கி செயல்படுத்துமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தொகுதிப் பிரச்சினையில், நாகப்பட்டினத்தில் by-pass road போடுவதாக கடந்த 1998 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டு ரூ.27 கோடிக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. இரண்டு ஆண்டுகாலம் ஆகிவிட்டது. போக்குவரத்து நெரிசல், விபத்துக்கள் அதிகமாகிவிட்டன. அமைச்சரவர்கள் இரண்டு முறை அந்தப் பகுதிக்கு வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். நிச்சயமாக அதைச் செய்து தரும் வகையில், விரைவுபடுத்தி இந்த ஆண்டே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உரையை முடித்துக்கொள்ளுங்கள். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, புத்தாயிரம் ஆண்டினுடைய துவக்கத்தில் ஆளுநர் உரையில் பேசக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு கொடுத்ததற்காக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து, எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துகளை இந்த அவையின்முன் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது, கூடா நட்பினை, வேண்டுமானால் நீங்கள் கூடும் நட்பு என்று வைத்துக் கொள்ளுங்கள் என்று சிரித்த முகத்தோடு கூறினார்கள். இந்தக் கூடா நட்பு, கூடுகின்ற நட்பாக எழுகின்றபோது எதிர்காலத்திலே ஒரு மாபெரும் வெற்றியை அடையப் போகின்ற நட்பாக இருக்கக் கூடும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்து, நான் எனக்குத் தெரிந்த கருத்துகளைச் சொல்கிறேன்.

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2000 மார்ச் 6

மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியானது, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஒன்றாக இருந்த நேரத்திலேயும் சரி, இன்றும்சரி, இருக்கக்கூடிய குறைகளை எடுத்துச்சொல்ல வேண்டிய பொறுப்பிலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சியாக இருக்கிறது. அப்படிக் குறைகளை எடுத்துச்சொல்கின்றபோது, அவற்றை மனமுவந்து கேட்டு, நல்லமுறையிலே திருத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் இங்கே இருக்கக்கூடிய நாங்கள் எடுத்துச் சொல்கின்றோமேயொழிய, உங்களையெல்லாம் வேகமாக, ஏதாவது தவறாகச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் ஒருவரும் சொல்லவில்லை என்பதை நீங்கள் உணர்ந்து எதிர்காலத்திலே, நாங்கள் சொல்கின்ற நல்லவற்றை எடுத்து, தீயவற்றை ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பேசுவதற்கு நிறைய இருந்தாலும், நேரமில்லை. அப்படிப் பேசிக்கொண்டிருந்தால், 1-30 மணியாகிவிட்டால், மணி அடித்துவிடுவார்கள். ஆகவே வேகமாகப் பேச முற்படுகிறேன்.

56 இடங்களிலே சமத்துவபுரம் அமைத்திருக்கிறோம் என்றும், 84 இடங்களிலே அமைக்கப் போகின்றோம் என்றும் ஆளுநரின் உரையில் சொல்லியிருக்கின்றார்கள். சமத்துவபுரம் அமைப்பதன்மூலம் அந்தந்தப் பகுதியிலே இருக்கக் கூடியவர்களுக்கு வீடுகள், அதற்குண்டான வசதி வாய்ப்புகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆங்காங்கே சில குறைகள் இருந்தாலும்கூட, ஏழை எளியவர்களுக்கு அங்கே வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு பகுதியிலேயும் வீடுகள் கட்டிக் கொடுப்பதன் மூலமாக மாத்திரம் சமத்துவபுரம் அமைந்துவிட முடியாது. வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கைத்தரம் என்று உயர்கிறதோ, அன்றுதான் சமத்துவபுரம் உண்மையாக ஏற்படுமேயொழிய, வீடுகள் கட்டிக் கொடுப்பதன் மூலமாக, தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக மாத்திரம் முழுமையான சமத்துவத்தை அடைய முடியாது.

பிற்பகல் 1-20

சென்னை நகரிலும், ஈரோட்டிலும் வசதி வாய்ப்புகள் உள்ளவர்கள் எல்லாம் எந்தவித ஜாதி மத பேதம் இல்லாமல் வாழக்கூடிய காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே, எதிர்காலத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு என்ன அதிகபட்சமாக செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு



2000 மார்ச் 6] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். நமக்கு நாமே திட்டத்தின் மூலமாக கடந்த ஆண்டிலே 10 கோடி ஒதுக்கியதாகவும், இந்த ஆண்டு 26 கோடி ஒதுக்கியுள்ளதாகவும் ஆளுநர் உரையிலே கூறியிருக்கிறார்கள். நகராட்சி, பேரூராட்சி போன்றவற்றை எல்லாம் இதிலே சேர்த்த காரணத்தினாலே எத்தனை கோடிகள் ஒதுக்கினாலும் இதிலே தகும். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே பேசியபோதுகூட மக்களாலே, மக்கள் மூலமாகச் செய்யக்கூடிய பணிகளுக்கு எந்த அளவுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குச் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டேன். அரசு செய்யக்கூடிய பணிகளைவிட, மக்கள் மூலமாகச் செய்யக்கூடிய பணிகள் சிறப்பாக இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் குறிப்பாக நமக்கு நாமே திட்டத்திற்கு எந்த அளவுக்குப் பணம் மக்கள் மூலமாகச் கட்டப்படுகின்றதோ அதற்கு உடனுக்குடன் அரசின் மூலம் கொடுக்க வேண்டிய நிதியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழாவது மாதத்திலே கட்டிய பணத்திற்குக்கூட இன்னும் நிதி ஒதுக்கப்படாமல் வேலை தடைபட்டு இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் உடனடியாக பணத்தைக் கட்டியவர்களுக்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நிதி உதவி செய்ய உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அப்படிப்பட்ட திட்டங்களில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கி, நடந்து வருகின்றன. அப்படிப் பணம் கிடைக்கப் பெறாமல் இருந்தால் அது குறித்து விவரமாக என்னிடத்திலே கொடுக்க வேண்டுமென்று தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** திருநெல்வேலி மாவட்டத்தில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மக்கள் தங்கள் பங்கு பணத்தை செலுத்தி ஓராண்டுக்கு மேலாகியும் அந்தத் திட்டத்திற்கான அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பணம் சுணக்கம் இருந்தது உண்மை என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அது கொடுக்கப்படவில்லை என்ற தகவல் எனக்கு இதுவரையிலும் வரவில்லை. அப்படி இருந்தால் அதுபற்றி தகவல் கொடுத்துவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்கலாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** என்னுடைய தொகுதியிலேகூட ஓராண்டுக்கு முன்பு மக்கள் தங்கள் பங்குப் பணத்தைக் கட்டியும் இன்னும் அரசுப் பங்கு ஒதுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பணம் ஒதுக்கப்படவில்லை, 10 ரூபாய் கட்டியிருக்கிறோம் இன்னும் 30 ரூபாய் கிடைக்கவில்லை என்பது வேறு. ஆனால் பணம் கட்டி, வேலை செய்து, அதற்கு இன்னும் அங்கிருந்து Bill pass ஆகவில்லை, பணம் வரவில்லை என்ற தோற்றத்தில்தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது 16 கோடி ஒதுக்கியிருப்பதில், இந்த இரண்டாவது திட்டத்தில் அது இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பேசிக்கொண்டிருக்கக்கூடிய பாலசுப்பிரமணியன் அவர்களைத்தான் கேட்டார்கள். மற்றவர்களைப் பதில் கேட்கவில்லை. மற்ற உறுப்பினர்கள், உங்களுடைய குறைகளை அமைச்சர் அவர்களுக்கு நேரடியாக அல்லது கடிதம் மூலமாக எழுதவும். உட்காருங்கள். (குறுக்கீடு) அருள்கூர்ந்து உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கடிதம் எழுதுங்கள் அவருக்கு. (குறுக்கீடு) நேராகப் பார்த்துச் சொல்லுங்கள். நேரம் இல்லை. அவர் நேரத்தை நீங்கள் எப்படி எடுத்துக்கொள்வது? அவருக்கு நேரம் குறைவு. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் turn வரும்போது நீங்கள் பேசுங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** அடுத்தபடியாக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்த ஆண்டிலே நிதி ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலே கொடுத்த காரணத்தினாலே, 666 கிராமங்களிலே தேவையான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தினாலே, தேவையான அளவுக்கு அந்தத் திட்டங்களை எல்லாம் முழுமையாக நிலையைப் பூர்த்தி செய்யாத நிலையை மாற்றியமைத்து முதன்முறையாக அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலமாக எடுத்த கிராமப் பகுதிகளுக்கு மீண்டும் பரிசீலனை செய்து முடிக்கப்படாத பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவகையிலே தாங்கள் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்ததாக வேளாண்மைத் துறையிலே இதுவரை விவசாயிகள் அத்தனைபேரும் கேட்டுக்கொண்டு வந்திருந்தாலும்கூட முழுமையாக பயிர் வாரியாக தீர்வை விதிக்காமல் ஏக்கருடைய அடிப்படையிலே



தீர்வை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்துகொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். அதை உடனடியாக அமல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இங்கே ஆளுநர் உரையிலே பயிர்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலே நிறைவேற்றப்படுவதாகக் கூறி இருந்தார்கள். இதிலே அனைத்து மாவட்டங்களுக்கும், அனைத்து விவசாயப் பயிர்களுக்கும் ஆயுள் காப்பீட்டு கழகத்திலே உத்தரவாதம் அளிக்க வேண்டும். சில பகுதிகளிலே, சில மாவட்டங்களுக்கு, சில பயிர்களுக்கு மாத்திரம் கொடுப்பதாகக் கூறக்கூடாது. அனைத்து மாவட்டங்களிலேயும் அனைத்து பயிர்களுக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலே பயிர் பாதுகாப்புக்கு கண்டிப்பாக ஏற்பாடு செய்து கொடுத்தால்தான் எதிர்காலத்திலே விவசாயிகள் விவசாயம் செய்யக்கூடிய பயிர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-25*

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் வருடாவருடம் தூர் வாருவதற்கேற்ற ஏரிகளையெல்லாம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். ஆனால், கொடுத்த பிறகும்கூட முதல் ஆண்டிலே ஓர் ஏரியைத்தான் தூர் வாருவதற்கு அரசு அனுமதித்ததேயொழிய, பிறகு இரண்டாம் ஆண்டிலே, மூன்றாம் ஆண்டிலேயெல்லாம் தூர் வாருவதற்கு உரிய வாய்ப்புக் கிடைக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. உடனடியாக இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் கொடுக்காத நிலையை மாற்றி, இரண்டு ஏரிகளைத் தூர் வாருவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டிலே தஞ்சாவூருக்குச் சென்றிருந்த நேரத்திலே அங்கே கொள்முதல் செய்த நெல் சாலையோரத்திலே கிடந்த காட்சியை நாங்கள் பார்த்தோம். அங்கே கொள்முதல் செய்த நெல் பயிர்களாக இருக்கக்கூடிய காட்சியைப் பார்த்தோம். அவற்றைப் பாதுகாப்பான இடத்திலே வைத்து, பாதுகாப்பான முறையிலே அரைத்து ஒழுங்காக விநியோகம்

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2000 மார்ச் 6

செய்தால்தான் மக்களுக்கு நல்லமுறையிலே நல்ல அரிசி போய்ச் சேர முடியும். ஆனால் வெளிப் பகுதியிலே வெயிலிலே, மழையிலே நனைந்து அரிசியெல்லாம் நாற்றம் அடிக்கக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடிய மோசமான சூழ்நிலையை மாற்றி, எதிர்காலத்திலே பாதுகாப்பான இடத்திலே வைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரண நிதிக்காக எப்படி அரசு 32 கோடிக்கு மேலாக ஒதுக்கீடு செய்ததோ, அதேபோல வறட்சி நிவாரணத்திற்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கால்நடை பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையிலே தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கின்றீர்கள். ஆனால், 6 மாதங்களுக்கு முன்பாக ஈரோடு மாவட்டத்தில், மழைக் காலங்களிலே வாய்சப்பை நோயும், கால்கட்டு நோயும் வந்து நூற்றுக்கணக்கான கால்நடைகள் இறந்த காட்சியை நாங்கள் பார்த்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் Fax மூலமாகவும், கடிதத்தின் மூலமாகவும், விண்ணப்பத்தின் மூலமாகவும் என்னைப் போன்றவர்கள் எடுத்துச்சொன்ன அந்தச் சூழ்நிலைகளின் காரணமாக உடனடியாக அங்கே பாதுகாப்புத் திட்டத்தை, தடுப்பூசி போடும் திட்டத்தை நடைமுறைபடுத்தினார்கள். இது தொடர்ந்து இருக்க வேண்டும். ஏதோ நோய் வருகின்ற காலத்திலே மாத்திரம் அந்தப் பாதுகாப்பு வசதி என்கின்ற நிலையை எல்லாம் விட்டு, தொடர்ந்து எப்போதெல்லாம் வாய்சப்பை நோயும், கால்கட்டு நோயும் வருகிறதோ அப்போதெல்லாம், குறிப்பாக இந்த நோய்கள் அதிகமாக வரக்கூடிய மழைக்காலங்களிலே அந்தப் பாதுகாப்புத் திட்டத்தை, தடுப்பூசி போடும் திட்டத்தை ஒழுங்காக, செம்மையாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இன்னும் 3 நிமிடங்கள் மட்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேச்சை முடித்துவிடுங்கள். இன்னும் நிறையபேர் பேசவிருக்கிறார்கள்.



2000 மார்ச் 6]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். கால்நடைத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் 5 பார்வைக் கிளை நிலையங்களை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் கொடுப்பதாக முன்பு சொன்னார்கள். ஆனால், இதுவரை முழுமையாக எந்தச் சட்டமன்றத் தொகுதியிலேயும் 5 பார்வைக் கிளை நிலையங்களை ஏற்படுத்தவே இல்லை.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 5 பார்வைக் கிளை நிலையங்கள் திறக்க வேண்டும் என்று எழுதிக்கொடுத்த சட்டமன்ற உறுப்பினர்களுள் தொகுதிகளில் பல இடங்களிலே திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படி எழுதிக்கொடுத்தும் கால்நடைப் பார்வைக் கிளை நிலையங்கள் திறக்கப்படாமல் இருந்தால், எழுதிக் கொடுத்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. மு. அப்பாவு:** தமிழ்நாட்டிலே ஓர் இடத்திலேயும் அப்படியில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** அப்பாவு Sir, கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளாகச் சொல்கின்ற அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பில் இருக்கக் கூடிய அதிகாரிகள் அதைச் செயல்படுத்துவதில்லை. அதை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே நான் சொன்னேன்.

அதேபோல பால் விலை கட்டுப்படியாகாத விலை. பாலுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டும். அதேநேரத்திலே பாலுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். 40 நாட்கள், 45 நாட்கள் என்று இருக்கின்ற இப்போதைய நிலையெல்லாம் மாற வேண்டும். நிறைய பேச வேண்டுமென்று இருந்தாலும்கூட இன்று பேச முடியாத சூழ்நிலை இருக்கிறது.

ஈரோடு மாவட்டத்திலே, Dark area, Grey area என்று இருக்கிறது. தண்ணீர் வளமாக இருக்கக்கூடிய கொடுமுடி, மொடக்குறிச்சி, ஈரோடு போன்ற பகுதிகளையெல்லாம்கூட Dark area என்று அறிவித்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே இதையெல்லாம் பரிசீலனை செய்து, எந்தெந்தப் பகுதிகளெல்லாம் உண்மையாகவே தண்ணீர் வளம் இல்லாத பகுதிகளோ அவற்றை Dark area என்றும் உண்மையிலேயே தண்ணீர் வளம் இருக்கக்கூடிய பகுதிகளை Grey area என்ற அளவிலேயும் அறிவிக்க வேண்டும்.

மின்சாரத்திற்குத் தடை போட்டிருக்கிறீர்கள். அந்தத் தடையையெல்லாம் விவசாயிகளுக்குக் கண்டிப்பாக நீக்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரம் அல்ல, பவானி, மேட்டூர் அணையிலே வலது இடது கரை வாய்க்காலிலே இருக்கக்கூடிய விவசாயிகள் சுமார் 47,000 ஏக்கரிலே எள் பயிரிட்டு அங்கே தண்ணீரை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். 105 அடி உயர கொள்ளளவு இருக்கக்கூடிய மேட்டூர் அணையிலேயிருந்து அந்தப் பகுதியிலேயுள்ள விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று கண்டிப்பாக புஞ்சைப் பயிருக்காகத் தண்ணீர் விட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத் துறையிலே, 60 வட்ட மருத்துவமனைகளிலே இரத்த வங்கிகள் தயார் நிலையிலே இருக்கின்றன. ஆனால், கடந்த ஒன்பது மாதங்களாக இந்த இரத்த வங்கிகளுக்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்காத சூழ்நிலையின் காரணமாக அவை இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-3-2000) காலை 9--30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

58. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் நிர்வாக அறிக்கை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 3--12--1999 ஆம் நாளிட்ட 247 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

59. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் நிர்வாக அறிக்கை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 3--12--1999 ஆம் நாளிட்ட 248 ஆம்



எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

60. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பயணப்படி மற்றும் இதரப்படிகள் கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மற்றும் ஊராட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் அவைகளின் குழு உறுப்பினர்களுக்கு வழங்குவது) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14--12--1999 ஆம் நாளிட்ட 258 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

61. 1998--99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், ஆண்டு கணக்குகளும். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

62. 1998--99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்--I) இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

63. 1998--99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்--II) இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

64. 1998--99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்--III) பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

65. 1998--99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-IV) பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

[2000 மார்ச் 6

*66*. 1998--99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-V) மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

*8*. 1997--98 ஆம் ஆண்டிற்கான மாநில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வாரியங்களின் செயல் திறன் குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்).

*9*. அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் நிவாரணம் குறித்து பரிசீலனை செய்ய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் எதிர்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை. (தமிழ்).

—o—

V2 11, 31 6 00
P00-38-1
229769

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.